தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஓகஸ்ட் 2004



## நேர்காணல்

தற்போதைய
அரசியல் நிலைமைகள் பற்றி
தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்
சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கிய
விசேட நேர்காணல்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




முன்அட்டை ஒளிப்படம்:
சுரேன் தம்பிராஜா



பாலகனைப் பாதுகாக்க பாதணிகள் பாதுகாப்பு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

# உள்ளே...




04

**நேர்காணல்:**
தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்
சு.ப.தமிழ்ச்செல்வன்
அவர்கள்



10

அமைதிமுயற்சி: மாறாத அணுகுமுறையும் தீராத பிரச்சினையும்



## கட்டுரைகள்

குரங்கு பிடிக்கப்போய்
பிள்ளையாராய் முடிந்த கதை - பற்றிமா ஜோசப் ........ 08

இது ஒரு சமூக விடுதலை ........ 46

## அணையாத தீபங்கள்

கடற்கரும்புலி
கப்டன் இன்னிசை - ஈழவாணி ........ 27

## சிறுகதை

ஒரு நாட்குறிப்பு அல்லது
ஒரு சின்னப்பிரச்சினை - முல்லை யேசுதாசன் ........ 14

மனக்கூண்டு - அம்புலி ........ 21

மலர் உதிர்ந்த போது... - தீபா குமரேஷ் ........ 28

அவனுக்கு என்ன
நேர்ந்தது? - மு.பொ ........ 30

அடிபாடு - தா.பாலகணேசன் ........ 36

மொய்- சந்திரவதனா ........ 45

## கவிதை

இவர்களின் காத்திருப்பு
மட்டும் ஏன்? - விக்கி நவரட்ணம் ........ 17

மாமலர்கள் - நிலக்கிளி அ.பாலமனோகரன் ........ 33

தூரக் கடல்தாண்டி.... - சு. வில்வரத்தினம் ........ 41

## உண்மைப் பதிவு

தீச்சுடர் -07 - தமிழ்க்கவி ........ 34

கோணேஸ்வரர் முற்றத்திலே - மணலாறு விஜயன் ........ 42

## தொகுப்பு

நினைவுக்குறிப்பு ........ 52

மீள்பார்வை ........ 53

பதிவுகள் ........ 54



18

உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?



அனுபவப் பகிர்வு 24




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





"இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும் வரை, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான, நியாயபூர்வமான அரசியல் தீர்வை, நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

இருபத்திமூன்றாம் ஆண்டு

ஓகஸ்ட்

2004

திருவள்ளுவர் ஆண்டு 2035

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

# தலைவாசல்

## உண்மை சுடும்

செய்வதைச் செய்துவிட்டு மறுப்புத் தெரிவிப்பது பொது வாழ்வில் ஒரு கலாச்சாரமாகிவிட்டது. பத்திரிகை அறிக்கை, மேடைப் பேச்சு போன்ற பகிரங்க விடயங்களைக் கூசாமல் மறுக்குமளவுக்கு உலகம் முன்னேறிவிட்டது. இராச தந்திரிகள், அரசியல்வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்டத் தினர் மறுப்பைத் தமது நாளாந்திரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். நம்பக இழப்பு பற்றிய கவலை அவர்களுக்குக் கிடையாது. சிறீலங்காவின் இன்றைய வரலாற்றை மறுப்பின் காலம் என்று வர்ணிப்பதில் தவறில்லை.

மறுப்பின் செல்வி என்ற சிறப்பு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உண்டு. வேறுபட்ட தருணங்களில் வேறுபட்ட ஆட்களுக்கு ஒன்றுக்கொன்று முரணான உறுதி மொழிகளை வழங்கும் மாறாத வழக்கத்தை அவர் கொண்டிருக்கிறார். புலிகளின் இடைக்கால நிர்வாக சபை ஆலோசனைகள் அடிப்படையில் பேசத் தயார் என்று அவர் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்த அடுத்தநாளே அதை வன்மையாக மறுத்தார். தன்னைக் கெட்டிக்காரியாக அவர் நினைக்கலாம், ஆனால் அவரைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர் அறியமாட்டார்.

அக்கா இப்படியென்றால் அரசியல் கோமாளியான தம்பி அநுரா பண்டார நாயக்கா மறுப்புத் தெரிவிப்பதில் முற்றிப் பழுத்த பழமாகிவிட்டார். அமெரிக்கா விலிருந்து வருகைதந்த சிஐஏ அதிகாரிகளையும் கருணாவையும் சந்திக்க வைக்கும் பொறுப்பை அவர் ஏற்றபின் நடந்தவற்றைப் பார்ப்போம். சுற்றுலா அமைச்சர் என்ற பதவிக்குரிய அநுரா கருணாவை சிங்கப்பூருக்குக் கூட்டிச் சென்றார். ஒரே விமானத்தில் இருவரும் சென்றனர். கருணாவை அமெரிக்கர் களிடம் கையளிப்பது அநுராவின் பொறுப்பு. இந்த விவகாரம் பத்திரிகைகளிலும் பாராளுமன்றத்திலும் வெளிவந்தவுடன் அநுரா என்ன செய்தார் தெரியுமா? முழுப் பூசணியைச் சோற்றில் புதைத்தேவிட்டார்.

கருணாவை எனக்கு இதற்கு முன்னரோ, பின்னரோ தெரியாது. அவரை நான் இதுவரை எனது கண்கள் இரண்டாலும் பார்த்ததே கிடையாது. அப்படி இருக்கையில் எப்படிக் கூட்டிச் செல்லமுடியும் என்று அவர் கொதிப்படைந்தார். மறுப்பு அறிக்கைவிடும்போது அவர் சிங்கப்பூர் அலுவலை முடித்துக்கொண்டு சீனா சென்றிருந்தார். நம்பகமான தகவல்களின்படி அவர் கொழும்பைவிட்டுப் பயணம் செல்லமுன்பே ஒரு மறுப்பு அறிக்கையையும் எடுத்துச் சென்றார் என்று அறியப்படுகின்றது. கொழும்பில் வைத்துப்பேசியிருக்கலாமே, ஏன் ஆளைச் சிங்கப்பூர் கொண்டுவா என்று சிஐஏ அதிகாரிகள் பணித்தனரோ தெரியவில்லை!

சூடாக மறுப்பது மூலம் கையைச் சுட்டுக்கொண்ட நபர்கள் இருவர் இருக்கிறார்கள். ஒருவர் சிறீலங்கா பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத். கருணாவா, அப்படியொருவர் எமது பாதுகாப்பில் இல்லை என்று முதலில் சொன்னவர் பின்பு கொழும்பு ஒரு மில்லியன் மக்கள் தொகையுள்ள நகரம் சிலவேளை எங்கை யேனும் இருக்கக்கூடும் என்று நசியத் தொடங்கினார். அடுத்தவர் மதிப்பிற்குரிய சிறீலங்காவுக்கான அமெரிக்கத் தூதர், ஜெப்பிறி லன்ஸ்ரெட். கொழும்பு நாளேடுகள் சிஐஏ கருணா சந்திப்பு பற்றிய செய்தி வெளியிட்டவுடன், இது முற்றிலும் பொய்யான செய்தி. இதில் உண்மையில்லை என்று லன்ஸ்ரெட் காட்டமான அறிக்கை வெளியிட்டார். ஆனால் சந்திப்பு பகிரங்கமாகிவிட்டது.

இது வேகமாக நகரும் காலம். உண்மைகள் வெளிப்படக் காலதாமதம் ஆவதில்லை. மூடி மறைத்தல்கள் திசை திருப்பல்கள், பழி சுமத்தல்கள், மற்றும் மழுப்பல்கள் நீடிப்பதில்லை. உண்மை வெளிப்படும்போது அது சிலரைச் சுடத்தான் செய்யும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நேர்காணல்

## தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

நேர்கண்டவர்: திறலோன்

விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான அமைதி முயற்சியில் அனுசரணையாளர்களாகப் பணியாற்றிய நோர்வே தற்போது போர்நிறுத்த ஒப்பந்தமும் அமைதி முயற்சிகளும் என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது விட்டால் போர் மூழுவது தவிர்க்க முடியாது என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கூறியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் எமக்கு வழங்கிய விசேட செவ்வி......



■ அமைதி முயற்சிகள் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் வெளியிடப்பட்டுவருகின்றன. அதாவது விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தின் கீழ் பேசத் தயார் என்று சிறீலங்கா ஜனாதிபதி சொல்கிறார். பின்னர் அவர் அவ்வாறு சொல்லவில்லை என்று மறுப்பு வருகிறது. மறுபுறம் இடைக்கால நிர்வாகசபை பற்றிப்பேசினால் அரசாங்கத்தைவிட்டு வெளியேறப் போவதாக அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஜேவிபி சொல்கிறது. இதுகாலத்தை இழுத்தடித்து உலகத்தை ஏமாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் தந்திரோபாயமா? அல்லது அரச இயந்திரத்துக்குள் இருக்கும் முரண்பாடுகளின் வெளிப்பாடா?

● சிறீலங்காவின் அரசுத்தலைவரும் மற்றும் அரசாங்கத்திலுள்ள கட்சிகளும் காலத்துக் காலம் இவ்வாறான முரண்பாடான கருத்துக்களை தெரிவித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இது தனியே காலத்தை இழுத்தடித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையோடு மட்டுமல்லாது சிங்களப்பேரினவாதத் தலைமைகள் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு நியாயமான எந்தத் தீர்வையும் முன்வைக்கப் போவதில்லை என்பதன் வெளிப்பாடாகத்தான் நாங்கள் இதைப் பார்க்கின்றோம். அண்மைய நாட்களில் கூட சிறீலங்கா ஜனாதிபதி இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசலாம் என்று கூறிவிட்டு பின்னர் அதை மறுத்திருக்கின்றார். இப்படிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேரத்துக்கு நேரம் காலத்துக்குக் காலம் பல்வேறு முரண் பட்ட கருத்துக்களை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதி லிருந்து தெரிவது என்னவென்றால் சிறீலங்கா ஜனாதிபதியாக இருந்தா லென்ன வேறு எவராக இருந்தாலென்ன, சிங்களப் பேரினவாதத் தலைமைகள் தமிழ்மக்களுடைய பிரச்சினைகளை நேர்மையோடு அணுகவில்லை, அணுகத் தயாரில்லை என்பதுதாகும். சர்வதேச அனுசரணையோடு மேற்கொள்ளப்படுகின்ற சமாதான முயற்சிகளைக் கூட அவர்கள் நேர்மையோடு அணுகவில்லை என்பதுதான் உண்மை யான நிலைப்பாடாகும். நிச்சயமாக இது தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் தெளிவாகப் புரிந்திருந்தாலும்,

" அமைதி முயற்சி இப்படி முடக்கமடைந்திருப்பதும், பின்னடைவைச் சந்தித்திருப்பதும் எதிர்காலத்தில் நாட்டை ஒரு போர் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்ற அச்சம் எல்லாத் தரப்பிலும் எழுந்திருக்கிறது. இதே முறையில் சிறீலங்கா அரசாங்கம் தனது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்குமாக இருந்தால் ஒரு போரை தவிர்க்க முடியாது என்பதே எங்களது கருத்தாகவும் இருக்கிறது. "



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இன்று சர்வதேச சமூகம் அதை நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கிறது. நிச்சயமாக எதிர்காலத்திலே சர்வதேசசமூகம் சிறீலங்கா அரசாங்கத்தினுடைய இந்தப்போக்குத் தொடர்பாக தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என்று நாங்கள் முழுமையாக நம்புகின்றோம்.



**அமைதி முயற்சிகளும் போர்நிறுத்த ஒப்பந்தமும் மிகப்பெரிய நெருக்கடிகளில் சிக்கிவிட்டன. உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது விட்டால் போர் மூழுவது தவிர்க்க முடியாது. இரண்டு தரப்பாரையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவருவது மக்களுடைய பொறுப்பு என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்திருக்கிறாரே! இது அமைதி முயற்சியில் நோர்வே தோற்றுப் போய்விட்டது அல்லது சலிப்படைந்துவிட்டது என்பதன் வெளிப்பாடா? இது தொடர்பாக உங்களுடைய பார்வை என்ன?**

● உண்மையிலேயே நோர்வே அனுசரணையாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்ற இந்தக் கருத்து ஒரு யதார்த்த பூர்வமான கருத்து என்றே நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில் நோர்வேயினுடைய தொடர்ச்சியான முயற்சிகள் அனைத்துமே பின்னதள்ளப்பட்டு ஒரு பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. இதற்கு சிறீலங்கா அரச தரப்புத்தான் காரணம். ஏனெனில் விடுதலைப்புலிகள் தாங்கள் முன் வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தின் அடிப்படையில் பேசத் தயாராக இருப்பதாக பலதடவைகள் கூறப்பட்டது. தேசியத் தலைவராலும் கூட இது தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சிறீலங்கா அரசாங்கம் நேர்மையோடு பேச்சுவார்த்தைக்கு வருவது தொடர்பான உறுதியான கருத்தை வெளிப்படுத்தாமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டுவருகிறது. இந்த நிலையில் இரண்டு தரப்பாரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவந்து நேரடிப் பேச்சுக்களை தொடங்குவதற்கு நோர்வே அனுசரணையானர்கள் அதிக அக்கறையோடு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டார்கள். சர்தேச சமூகத்தின் கரிசனையையும் ஈடுபாட்டையும் துணைக்குக் கொண்டும் இந்த முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டார்கள் ஆனால் சிறீலங்கா அரசாங்கம் ஏதோ காரணங்களைச் சொல்லிச் சொல்லி ஒரு முடிவுக்கு வராமல் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிங்கள இனவாதக் கட்சிகள் இந்த இழுத்தடிப்புக்கு ஒத்திசைவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த நிலையில் நோர்வே தரப்பிலிருந்து வெளிப்பட்டிருக்கின்ற இந்தக் கருத்து மிகத் தெளிவானதும் யதார்த்த பூர்வமானதும் என்று நாங்கள் கருதுகின்றோம். தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அபிலாசைகளையும் பிரதிபலிப்புக்ளையும் விருப்பங்களையும் ஆணைகளையும்தான், தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுடைய நிலைப்பாடாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். இந்த முயற்சியில் ஒரு தரப்பு என்ற வகையில் தமிழ் மக்களும் தமிழ்மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தலைமையும் மிகத் தெளிவோடும் உறுதியோடும் இருக்கிறார்கள். ஆனால் பிரச்சினை என்பது மறுதரப்பான சிறீலங்கா அரச தரப்பிலிருந்து தான் வருகிறது. அதாவது சிங்களப் பேரினவாதக் கூட்டுக்களைக் கொண்ட சிங்கள பேரினவாத அரசினுடைய ஒத்துழையாமைத் தன்மையும் நேர்மையற்ற தன்மையும்தான் நோர்வேயினுடைய இந்த முயற்சிகள் முடக்கமடைந்ததற்குக் காரணமாகும். உண்மையில் அமைதி முயற்சி இப்படி முடக்கமடைந்திருப்பதும், பின்னடைவைச் சந்தித்திருப்பதும் எதிர்காலத்தில் நாட்டை ஒரு போர் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்ற அச்சம் எல்லாத் தரப்பிலும் எழுந்திருக்கிறது. இதே முறையில் சிறீலங்கா அரசாங்கம் தனது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்குமாக இருந்தால் ஒரு போரை தவிர்க்க முடியாது என்பதே எங்களது கருத்தாகவும் இருக்கிறது.

அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையைப் பொறுத்தவரை போர் மூலமாக அல்லாமல் அமைதி முயற்சியினூடாக பேச்சுவார்த்தை மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வாய்ப்பிருக்குமேயானால், அதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கே கரிசனை கொண்டிருக்கிறது. இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தெளிவான நிலைப்பாடாகவும் இருக்கிறது.

**நிலைமை இப்படி இருக்கும் போது, விரைவில் பேச்சுவார்த்தை நடக்கப் போகிறது. தாயலாந்தின் தலைநகர் பாங்கோக்கில் நடக்கப் போகிறது என்றெல்லாம் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றனவே! இது உண்மையா?**

● கொழும்பு ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் எவையுமே நம்பகத் தன்மை கொண்டவையாக இல்லை. கொழும்பு ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் வெளிவரும் செய்திகளில் ஏதோ ஒரு முரண்பாடு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். தாய்லாந்தில் விரைவில் பேச்சுவார்த்தை நடக்கும் என்ற செய்தி தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின் சமபலத்தோடு கலந்துகொள்ளும் இரண்டு தரப்பில் ஒரு தரப்பு என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை. இந்தப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளர்களாகப் பங்குபற்றும் நோர்வே தரப்பும் கூட அப்படி ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை. தென்னிங்கையிலிருந்து இப்படி அடிக்கடி உண்மைத் தன்மையற்ற பரபரப்புச் செய்திகள் வெளிவருவது வழக்கம். அது மாதிரியான ஒன்றாகத்தான் இதையும் நாங்கள் கருதுகின்றோம்.



www.tamileelamarchive.com



"தேசியத்தலைவர் மீதும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்தே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு தேசியத்தின் கீழ் ஒன்றிணைந்திருக்கிறார்கள். இங்கே தமிழீழத் தாயகத்தில் கருணாவுக்கு என்ன பதிலடி கிடைத்ததோ எவ்வளவு தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து அவர் அவமானகரமாக ஓடித் தப்பினாரோ அது போன்று புலம்பெயர்நாடுகளிலும் எமது மக்கள் மிக உறுதியாக எமது தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு நின்று சரியான பதிலடியை இன்னும் வீச்சாக துரோகிகளுக்கு வழங்குவார்கள்."

■ **இலங்கைக்கு அடிக்கடி வரும் நோர்வே அனுசரணையாளர்கள் இரண்டு தரப்பாரையும் மாறி மாறிச் சந்திப்பது வழக்கம். ஆனால் அண்மைக்காலங்களில் அரச தரப்பாரை சந்திக்காமல் உங்களை அதாவது விடுதலைப்புலிகளை மட்டும் சந்தித்துச் சென்றிருக்கிறார்கள். இது ஏன்?**

● தமிழீழ விடுதலைப்புலிகள் நீதியாகவும் நேர்மையாகவும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை வைத்திருக்கின்றார்கள் என்பது நோர்வே அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நன்றாகத் தெரியும். தமிழீழ தேசியத் தலைவர் நோர்வே வெளிவகார அமைச்சரைச் சந்தித்த போது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவித்துவிட்டார். இந்த நிலைப்பாடு மாற்றமில்லாத உறுதியான நிலைப்பாடு என்பது நோர்வே அனுசரணையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரியும். ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் தமிழ்மக்களுடைய நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதில் எந்தவித மாற்றங்களோ விட்டுக்கொடுப்புகளோ இருக்காது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த அடிப்படையில் தான் நோர்வே அனுசரணையாளர்கள் இங்கு வந்து (கிளிநொச்சிக்கு) சிநேகபூர்வமான சந்திப்புகளை மேற்கொண்டுவிட்டு செல்கின்றார்களேயன்றி நிலைப்பாடு சம்பந்தமாக பேசுவதற்கு அல்ல. ஆனால் சிங்களத் தரப்பிலே அரசாங்க மட்டத்திலே பல முரண்பாடுகளும் குழப்பங்களும் இருப்பதால் நேரத்துக்கு நேரம் காலத்துக்குக் காலம் அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது அமைதி முயற்சியில் ஈடுபடும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. அரசாங்கத் தரப்பை சந்தித்து நேரத்துக்கு நேரம் மாறும், நிலையில்லாத, முரண்பாடான கருத்துக்களை எடுத்துவந்து விடுதலைப்புலிகளுடன் பேசுவதில் நோர்வே தரப்புக்கு சங்கடம் இருக்கிறது. இதனால்தான் முதலில் அவர்கள் இங்கு வந்து விடுதலைப்புலிகளுடன் பேசி அவர்களுடன் தொடர்ச்சியாகப் பேணிவருகின்ற நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் உறுதிப்படுத்திக்கொண்டு, படைத் தரப்பிலும் அரச தரப்பிலும் உள்ள முரண்பட்ட குழப்பமான கருத்துக்களை கையாள்வதில் கவனம் செலுத்துகிறார்கள் என்று நினைக்கிறோம்.

■ **அண்மையில் சிறீலங்கா ஜனாதிபதி விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேசலாம் என்று அறிவித்திருக்கின்றார். இது பற்றி அதிகார பூர்வமாக உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா? நீங்கள் சிறீலங்கா ஜனாதிபதியின் அறிவிப்பை நம்புகிறீர்களா?**

● இது ஒரு தவறான செய்தி என்ற தான் நினைக்கிறோம். விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் அடிப்படையில் பேச்சவார்த்தை நடத்தலாம் என்று நோர்வே தரப்பினூடாக எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஊடகங்களிலேதான் இந்தச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.



சிறீலங்கா ஜனாதிபதியினுடைய நிலைபாடுகளும் அவரது வாயிலிருந்த வருகின்ற கருத்துக்களும் நம்பகத்தன்மை உள்ளவையாக எங்களால் கருதமுடியாது. ஏனெனில் கடந்த காலங்களில் சிறீலங்கா ஜனாதிபதி அடிக்கடி மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருப்பதால் எது அவருடைய உண்மையான கருத்து அல்லது நிலைப்பாடு என்பதை எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர் நோர்வே தரப்பினூடாக தன்னுடைய உறதியான நிலைப்பாட்டை தெரிவித்த பின்பு தான் நாங்கள் ஒரு தீர்மானகரமான முடிவை எடுக்க முடியும். ஆனால் அவ்வாறு இல்லாத நிலையில் எந்தவித முடிவும் எடுக்க முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். எனவே சிறீலங்கா ஜனாதிபதியினுடைய கருத்தை எந்தவித்திலும் நாங்கள் நம்புவதற்குத் தயாரில்லை என்றே கூறலாம்.

■ **விடுதலைப்புலிகளுக்குள் இருக்கும் உள்முரண்பாடுதான் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு தடையாக இருக்கிறதென்று அண்மையில் கொழும்புக்கு வந்த ஜேர்மன் வெளிவிகார அமைச்சரிடம் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளாரே! இதற்கு உங்களுடைய பதில் என்ன?**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

● முதலாவது விடுதலைப்புலிகளுக்குள்ளே உள்முரண்பாடென்பது கிடையாது. மட்டக்களப்பிலே இருந்த கருணா என்ற நபரை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கிய நிகழ்வை வைத்துக்கொண்டு விடுதலைப்புலிகள் அமைப்புக்குள்ளே முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது பிளவு ஏற்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்கும் அதை பெரிதுபடுத்துவதற்கும் சிங்கள இனவாத ஊடகங்களும் சில சக்திகளும் தான் முயன்று வருகின்றன. இத்தப் பிரச்சினையை பூதாகரமாக்க முயன்ற அவை அதில் தோற்றுப் போய்விட்டன. உண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் அப்படி எதுவும் கிடையாது. கருணா என்ற தனிநபர் விடுதலைப்புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டை மீறி நடந்ததால் அவர் மீது அமைப்பு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கிறது. அவரை விடுதலைப்புலிகள் இயக்கத்தலைமை அமைப்பிலிருந்து நீக்கியிருக்கிறது. அவர் சிங்களப் படைகளினதும் பேரின வாதிகளினதும் துணையோடு ஒரு கிளர்ச்சி செய்ய முற்பட்ட போது அதற்கெதிராக விடுதலைப்புலிகள் அமைப்பு இறுக்கமான நடவடிக்கையை எடுத்து அவரை தமிழீழப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றியது. உண்மையில் முரண்பாடு என்பது கதிர்காமரிடமும் அவர் சார்ந்திருக்கும் சிங்களத் தலைமைகளிடமும்தான் இருக்கிறது. சிறீலங்காவின் தகுதி வாய்ந்த மூத்த அமைச்சர்களும் ஏன் ஜனாதிபதியும் கூட அடிக்கடி முரண்பாடான கருத்துக்களை தெரிவித்துவருகிறார். இவைதான் அமைதி முயற்சிக்குத் தடையாக இருக்கிறது என்பதும் அமைதி முயற்சியில் விடுதலை புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதும் எமது மக்களுக்கும் சர்வ தேசத்திற்கும் மிகத் தெளிவாகத் தெரியும். அது உரியமுறையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. கதிர்காமர் இன்னும் தெளிவடையாமல் இருப்பது வேதனைக்குரியது. இது நாங்கள் எதிர்பார்த்த ஒன்றுதான் ஏனெனில் கடந்தகாலத்திலும் கதிர்காமர் ஒருபோதும் தெளிவான நிலைப்பாட்டோடு கருத்துக்களை முன்வைத்தது கிடையாது. எனவே அவருடைய கருத்தை கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.





■ **கருணா வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னணியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பிரதேசவாதத்தையும் குழுமோதல்களையும் தூண்டிவிட்டு அவர்களின் ஒற்றுமையை சிதைக்கும் சிறீலங்கா புலனாய்வுத் துறையின் சதித் திட்டம் ஒன்று உள்ளதாக வெளிவரும் தகவல்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இதை முறியடிக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் என்னசெய்யலாம்? என்ன செய்யவேண்டும்?**

● கருணாவை பயன்படுத்தி தமிழ்மக்களுடைய ஒற்றுமையைக் குலைப்பதற்கும் தமிழ்த்தேசியத்தை சிதைப்பதற்கும் சிங்கள பேரின வாதிகள் தமிழீழ மண்ணிலேயே பல முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். எமது தாயகத்திலே மேற்கொள்ளப்பட்ட இந்தச்சதி முயற்சிகளை எமது போராளிகளும் மக்களும் சேர்ந்து அதை முறியடித்து வெற்றிகொண்டிருக்கிறார்கள். கருணாவை வைத்து தமிழ்த்தேசியத்தையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் பலவீனப்படுத்த சிங்களப் பேரினவாத சக்திகள் எடுத்த முயற்சி பெரும் பின்னடைவைக் கண்டு பெரும் தோல்வியையும் சந்தித்திருப்பதுடன் அவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது.

ஆனாலும் இந்த முயற்சியின் இன்னொரு அங்கமாக கருணாவை வேறு விதமாக பயன்படுத்துவதற்காக சிங்கள அரசாங்கம் அவரை பாதுகாத்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஆனால் நாங்கள் நிச்சயமாக நம்புகின்றோம் தேசியத்தலைவர் மீதும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்தே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு தேசியத்தின் கீழ் ஒன்றிணைந்திருக்கிறார்கள். இங்கே தமிழீழத் தாயகத்தில் கருணாவுக்கு என்ன பதிலடி கிடைத்ததோ எவ்வளவு தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து அவர் அவமானகரமாக ஓடித் தப்பினாரோ அது போன்று புலம்பெயர்நாடுகளிலும் எமது மக்கள் மிக உறுதியாக எமது தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு நின்று சரியான பதிலடியை இன்னும் வீச்சாக துரோகிகளுக்கு வழங்குவார்கள் என்றே நாங்கள் நம்புகிறோம். எமது மக்கள் எமது இனத்தின் எதிர்கால இலட்சியத்துக்காக ஒன்றுபட்டு நின்று உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் இப்படியான துரோகிகளின் வார்த்தைகளுக்கு செவிசாய்க்க மாட்டார்கள். சிறீலங்கா அரசாங்கம் இங்கு இதை நடைமுறைப்படுத்த முயன்று அவமானகரமான தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்த நிலையில் இதை புலம்பெயர்ந்த நாடுகளில் அரங்கேற்ற முற்பட்டால் எமது மக்கள் ஒன்று பட்டு நின்று அதை முறியடித்து அங்கும் இப்படியான துரோகிகளுக்கு சரியான பாடம் படிப்பிப்பார்கள் என்றே நாங்கள் நம்புகிறோம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# குரங்கு பிடிக்கப்போய் பிள்ளையாராய்

சிறீலங்காவினுடைய சண்டே லீடர் பத்திரிகை புலிகளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதில் ஏனைய பேரினவாத பத்திரிகைகளுக்குச் சளைத்தது அல்ல. D.B.S ஜெயராஜ் போன்ற 'அதிமேதாவிகளை' பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான கருத்துக்களை நுணுக்கமான முறையில் விதைப்பதற்கு மேலதிகமாக ஏனைய ஊடகவியலாளர்களும் காரசாரமான புலி எதிர்ப்புக்கட்டுரைகளை எழுதுவது வழக்கம் தான்.

இந்த வகையிலே 2004 யூலை மாத இறுதி வாரத்தில் இந்தப்பத்திரிகையின் ஊடகவியலாளர்களில் ஒருவரான ஸெஸ்னா ஸம்ஸ் ஒரு கருத்துக் கணிப்பை மேற்கொண்டார். சமூகத்தை பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் குறுக்கு வெட்டு முகமாக தேர்ந்தெடுத்த சிலரிடம் ஒரே ஒரு கேள்வியை அவர் முன்வைத்தார்.

திரு.பிரபாகரனோ அல்லது புலிகளோ பிரதான அரசியல் நீரோட்டத்தினுள் வந்து தேர்தலில் போட்டியிட்டால் நீங்கள் அவர்களுக்கு வாக்களிப்பீர்களா? இதுதான் கேள்வி கேள்வியின் வக்கிரமே அதன் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. கேள்வி கேட்கப்பட்டவர்களின் பெயர்களைப் பார்க்கும் பொழுது அநேகமாக பெரும்பான்மை சமூகத்தினரிடமே கேள்வி கேட்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. மாதிரிக்கு சில பதில்களையும் ஸம்ஸ் வெளியிட்டிருந்தார். மிகவும் வியப்பூட்டுவனவாக பதில்கள் அமைந்ததாக ஸம்ஸே சொல்லும் அளவுக்கு பதில்கள் அமைந்திருக்கின்றன. 'வியப்பூட்டுவதாக' என்பதை நீங்கள் நினைத்ததற்கு எதிர்மாறாக என்றே எடுத்துக் கொள்ளலாம். அவர் பிரசுரித்த பதில்களைப் பார்ப்போம்.

(1) ரமி என்ற பெண்மணி (வீட்டுப்பணி) பதிலளிக்கும் பொழுது சில வேளை வாக்களிக்கக்கூடும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அனேகமாக வாக்களிப்பேன் என்றுதான் நினைக்கின்றேன் என்றார். அவருடைய முடிவுக்கான காரணம் அவரிடம் கோரப்பட்டபொழுது “அவர்கள் ஆட்சிக்கு வந்தால் தான் (நன்கு கவனியுங்கள் வாக்களிப்பது மட்டுமல்லாது ஆட்சிக்கும் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பதிலில் தொனிக்கிறது) நாட்டில் சட்டமும் ஒழுங்கும் இருக்கும் அவர் ஒரு கண்டிப்பான ஒரு ஆட்சியாளாராய் இருக்கலாம். ஆனால் சட்டமும் ஒழுங்கும் பேணப்படும் என்பதால் அவருக்கு வாக்களிப்பேன்” என்று கூறியிருக்கின்றார்.

(2) காயத்திரி என்பவர் ஒருபோதும் வாக்களிக்க மாட்டேன் என்று பதிலளித்தார் காரணம் கேட்டபோது குறிப்பாக எதனையும் சொல்ல அவரால் முடியாமல் போய் விட்டது

(3) வேறு கட்சிகள் தேர்தலில் நின்றால் அவருக்கு வாக்களிக்க மாட்டேன் . அவரது நியாயமற்ற செயல்கள் காரணமாக அவரை நேரான ஒரு மனிதராக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று. தயா என்பவர் பதில் கூறினார்.

(4) நாடக நெறியாளாரான இந்து தர்ம சேனாவிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது நான் JVPக்கு வாக்களிக்க முடியுமானால் பிரபாகரனுக்கு ஏன் வாக்களிக்க முடியாது

# முடிந்தகதை

என்று எதிர்க்கேள்வி கேட்டிருக்கிள்றார். பிரபாகரனுக்கு வாக்களிப்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை புலிகள் நல்ல ஒழுங்கமைப்பைக் கொண்டவர்களாகவும் தங்கள் இறுதி இலக்கின் மீது வேறு அரசியல் வாதிகளை விட அதிக உறுதிப்பாடு உடையவர்களாக இருக்கின்றார்கள் முன்பு அவர்களால் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் கொல்லக்கூடும். ஆனால் அவர்கள் ஏன் நாடாளுமன்றத்தில் இருக்கக்டாது என்று கேட்டார்.

(5) தகவல் தொழில் நுட்ப நிபுணரான அருணா என்பவரிடம் இந்தக் கேள்வி விடுக்கப்பட்ட பொழுது தூரநோக்கு இல்லாதவர்களும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு இல்லாதவர்களும் வகை தொகை இன்றி கொலை செய்தவர்களுமான கட்சிகள் தனியே JVP அல்ல நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில் தூர நோக்கும் ஒழுங்கமைப்பும் கொண்ட புலிகள் அனுமதிக்கப்படாமலிருப்பதற்கான காரணம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. ஆனால் புலிகள் தாமே தங்கள் நற்பெயரையும் கட்டுப்பாட்டையும் பேண விரும்பினால் நாடாளுமன்றம் என்று பாவனை செய்யப்படும் நாய்களுக்கு மட்டும் தகுதியுள்ள அந்த இடத்திற்கு அவர்கள் வரக்கூடாது என்றிருக்கின்றார்.

(6) அனாமதேயமாக பதிலளிக்க விரும்பிய சரக்கு கையாளுகை, போக்குவரத்து நிறவனத் தலைவரொருவர் இதே கேள்விக்கு அவர்களிடம் கட்டுப்பாடும் ஒழுங்கும் இருப்பதால் நிச்சயமாக அவர்களுக்கு வாக்களிப்பேன் அவர்களிடம் நல்ல நிர்வாக முறை இருப்பதோடு அவர்கள் நாட்டின் ஒரு பகுதியை பிரித்தெடுக்க எடுக்கும் முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று கூறியிருக்கிறார். வெளியூர்களில் இருப்பவர்களுக்கு அவர்களின் கொடுரமான செயல்கள் மட்டுமே தெரியும் என்பதால் அவர்கள் வாக்களிக்க மாட்டார்கள். எனினும் அந்த அமைப்பிடம் கடுமையான சட்டங்களும் விதிகளும் இருப்பதால் இந்த நாட்டில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற வன்செயல்களை தடுத்து நிறுத்தி நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட அவர்களால் மட்டும் தான் முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வெளியிடப்பட்ட 06 பேரின் கருத்துக்களில் 04பேர் அதாவது கிட்டத்தட்ட 66 விழுக்காட்டினர் புலிகளுக்கு வாக்களிப்பதில் பிரச்சினையில்லை என்று கூறி விட்டார்கள் . வெளியிடப்பட்டவற்றில் இவ்வளவு தீவிரம் தொனித்தால் வெளியிடப்படாதவற்றில் எவ்வளவு தொனித்திருக்கலாம் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் சரஸ்வதி சபதம் படத்தில் கண்ணதாசன் சொல்வது போல் “நல்ல ஆட்சி - நல்ல அரசி, பாவம்-மக்கள்”என்று சொல்லத் தோன்றுகிறதா?

ஸம்ஸ் இந்தக் கருத்துக் கணிப்பிற்குமுயன்ற போது முன்னரைப் போல் எல்லோரும் புலிகளை “கடித்துக் குதறுவார்கள்” அதை முன் பக்கத்தில் போட்டு ‘இந்த வருடத்து சிறந்த பத்திரிகையாளர்’ விருதைத் தட்டிச் கொள்ளலாம் என்று நினைத்திருப்பார். பாவம் அவர். அவர் எதிர்பார்க்கைகள் எல்லாம் சரிந்து விட்ட நிலையில் 25.07.2004. சண்டே லீடரில் 6ம் பக்கத்திலே ‘நாட்டில் குற்றச்செயல்களால் வெறுப்படைந்திருக்கும் மக்கள்’ என்று முக்கியத்துவமற்ற தலைப்பிலான வெளியிட்டு ‘பொச்சம்’ தீர்த்துக் கொண்டிருக்கின்றாரா? அவரது எதிர்பார்க்கை நிறைவேறியிருந்தால் ‘பிரபாகரனை மக்கள் ஒட்டு மொத்தமாக நிராகரிப்பு’ என்ற தலைப்போடு 1ம் பக்கத்திலேயே செய்தி வந்திருக்கக்கூடும். அவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்போம்.

ஜாதிக கெல உறுமய காவிக்காரர்கள் புலிகளுடன் கலந்துரையாடுவது பற்றி ஆலோசிப்பதாக வெளிவந்த செய்தியும் ஸம்ஸ்சுக்கும் அவரின் பின்னணியில் இருந்தவர்கட்கும் இடியாய் இறங்கியிருக்கும்.

எல்லாவற்றையும் பார்க்கும் போது பேராசிரியர் கல்கி எழுதிய ‘பொன்னியின் செல்வன்’ நாவலில் ஒரு பகுதி நினைவுக்கு வரத்தான் செய்கிறது. அந்நாவலின் கதாநாயகன் இளங்கோ இலங்கையின் சில பகுதிகளை கைப்பற்றி வைத்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் அவரைச் சந்திக்க பௌத்த பீடங்களிலிருந்து பிரதிநிதிகளாக வரும் பிக்குகள் நாட்டின் மணிமுடியை இளங்கோவுக்கு அளிக்க முன்வருகிறார்கள். வரலாற்றுச் சான்றுகள் இல்லாத ஒரு நிகழ்வாக இது இருந்தாலும் அது மீள நிகழ மாட்டாது என்று நாம் கொள்ள வேண்டியதில்லை (அதற்கு எமது ‘இளங்கோ’ தலையசைப்பாரா என்பது வேறு விடயம்)

தென்னிலங்கை பத்திரிகையொன்று வகை மாதிரியாக பேரினவாத வக்கிரங்களை தோலுரித்துக் காட்டியுள்ளது இனிமேலாவது இவ்வாறான வக்கிர முயற்சிகளில் ஈடுபடாதிருக்கும் உளப்பாக்கை அளிக்க மும்மணிகளைப் பிரார்த்திப்போம்.

**பற்றிமா ஜோசப்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திறலோன்

# அமைதி முயற்சி:





ஆரம்பத்தில் பாங்கொக், பேர்லின், ஒஸ்லோ என்று அதி வேகமாக நடந்து வந்த அமைதி முயற்சிக்கான பேச்சு வார்த்தைகள் இப்போது கொழும்பையும் கிளிநொச்சியையும் ஒருங்கிணைக்க முடியாமல் முடங்கிப்போய் கிடக்கின்றன.

அமைதி முயற்சிக்கான அனுசரணையாளர்களாகப் பணியாற்றிய நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனின் வார்த்தையில் சொல்வதானால் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இரண்டரை ஆண்டு காலத்தில் சமாதான நடவடிக்கைகள் தற்போது மிக மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படாவிட்டால் மீண்டும் நாடு உள்நாட்டு யுத்தத்துக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணைக் காப்பகம்

அமைதி முயற்சிக்கான அனுசரணை யாளர்களாகப் பணியாற்றிய நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனின் வார்த்தையில் சொல்வதா னால் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இரண்டரை ஆண்டு காலத்தில் சமாதான நடவடிக்கைகள் தற்போது மிக மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. பேச்சுவார்த் தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படா விட்டால் மீண்டும் நாடு உள்நாட்டு யுத் தத்துக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது.



# மாறாத அணுகுமுறையும் தீராத பிரச்சினையும்

நோர்வே அனுசரணையாளர்களின் அண்மைக்கால அறிக்கைகள் செவ்விகள் எல்லாமே அவர்கள் இந்த அமைதி முயற் சிக்கான அனுசரணைப் பணியில் சலிப்ப டைந்து போய்விட்டார்கள் என்பதையே எடுத் துக்காட்டுகின்றன.

உண்மையில் அமைதி முயற்சிக்கு தடை யாக இருக்கும் காரணிகளில் மிக முக்கி யமானது என்னவென்று பார்த்தால், அது சிறீலங்கா ஆட்சியாளர்களின் அடிப்படைக் கொள்கைளில் ஒன்றாக இருக்கும் பௌத்த சிங்கள பேரினவாத அணுகுமுறையாகும்.

இதில் சிறீலங்காவின் தற்போதைய அர சுத்தலைவர் சந்திரிகா குமாரதுங்காவுக்கும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங் காவுக்கும் இடையில் அதிக வித்தியாசம் இல்லை.

‘ தமிழர்களுக்கு என்று

ஒரு தாயகப்பிரதேசம் இருக்கக்கூடாது.

ஒரு உறுதியான தலைமைத்துவம் இருக் கக் கூடாது.

ஒரு நேர்த்தியான வரலாறு இருக்கக் கூடாது.

தமிழர்கள் சிங்களவர்கள் கொடுப்பதை இரந்து பெற்றுக் கொள்பவர்களாகவே இருக் கவேண்டும்.

அவர்கள் சிங்களவர்களுடன் உரிமை களுக்காகவோ வேறு எதற்காகவுமோ பேரம் பேசும் நிலையே இருக்கக்கூடாது'.

என்கின்ற இந்த பௌத்த சிங்கள மரபு வழி கோட்பாட்டை மேற்குலக சனநாயக பாரம்பரியப்படி எப்படி நடைமுறைப்படுத் துவது என்பதில் இரண்டுபேருமே ஒருமித்த கருத்துடையவர்கள். இதில் யார் அதிகமாக மக்களை முட்டாள்களாக்குவது என்பதில் தான் இருவருக்கும் இடையில் போட்டி இருந் திருக்கிறது.

ரணில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திய போது சந்திரிகா நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டது, நாட்டின் இறைமை பறி போகப் போகிறது என்றெல்லாம் சொல்லி அதை எதிர்த்ததுடன் ரணிலின் ஆட்சியையும் கலைத்தார்.

சிங்களவர்களின் இறைமையை பாதிக் காமல் விடுதலைப்புலிகளுடன் பேசப் போகி றேன் என்று சந்திரிகா சொல்லியபோது ரணில் இரகசியமாக ஹெல உறுமயவைத் தூண்டிவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது, இடைக்கால நிர்வாக சபையை ஏற்கக் கூடாது என்றெல் லாம் கூக்குரலிட வைத்தார்.

இதேவேளை புத்தம் சரணம் சொல்ல வேண்டிய பௌத்த பிக்குகள் தமிழரின் இரத்தம் சரணம் கச்சாமி என்று சொல்லி யது முன்னாள் சிவப்புச் சட்டைக்காரர் களான ஜே.பி.யினருக்கு அவர்களுடைய நாற்காலிக் கனவுக்கு அச்சுறுத்தலை ஏற் படுத்தும் விடயமாகிவிட்டது.

ஒருகாலத்தில் சிறுபான்மை இனங் களின் சுயநிர்ணய உரிமை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றெல்லாம் முழங் கிய அவர்கள் இப்போது அவற்றையெல் லாம் தங்களது முன்னாள் தலைவர்களின் புதைகுழிகளில் புதைத்துவிட்டு, சிங்கள பௌத்த மேலாண்மையும் சர்வாதிகா ரத்தையும் நிலைநாட்ட வந்த அவதாரங் களாக தங்கள் மறுநிர்மாணம் செய்து கொண்டுவிட்டார்கள்.

இப்போது ஜேவிபிக்குள்ள இலக்கு சிங்கள பௌத்தத்தின் காவலர்களாக இருப்பதில் ஹெல உறுமய, சிறீலங்கா சுதந்திரக் கட்சி,ஐக்கிய தேசியக்கட்சி எல் லாவற்றையும் விட தாங்கள் தான் முதன் மையானவர்கள் என்கின்ற பிம்பத்தை சிங் கள மக்கள் மத்தியில் தோற்றுவிப்பது.

இதற்கு அவர்களுக்குள்ள ஒரேவழி சந் திரிகாவும் ரணிலும் சம்பிக்க ரணவக்க போன்ற ஹெல உருமயகாரர்களும் கடைப் பிடித்த அதே மரபுவழி பௌத்த சிங்களப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பேரினவான கோசங்களை உரத்துச் சொல்வது.

நாட்டின் இறைமைக்கு ஆபத்து...

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்... என்கின்ற பழைய பல்லவிகளோடு இப்போது புதிதாக, விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினால் அரசாங்கத்தை விட்டு விலகுவோம், ஆட்சியைக் கவிழ்ப்போம் என்ற மிரட்டலையும் ஜே.வி.பியினர் விட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கு இரண்டுதெரிவுகள் இருந்தன.

ஒன்று விடுதலைப்புலிகளுடன் அவர்கள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்குச் செல்வது.

மற்றது ஜே.வி.பியினரது மிரட்டலுக்கு அடிபணிவது.

நாட்டின் நலனில் மக்களின் நலனில் உண்மையான அக்கறையுள்ள ஒருவராக இருந்திருந்தால் சந்திரிகா முதலாவது முடிவைத் தெரிவுசெய்திருப்பார்.

ஆனால் அவருக்கு அவரது கட்சியின் நலனும், தன்னுடைய மரபுவழி சிங்களப் பேரினவாத சிந்தனைகளுக்கு அப்பால் சிந்திக்க விரும்பாத மனோபாவமும் முதன்மையாக இருந்ததால் ஜே.வி.பியினரின் மிரட்டலுக்கு அடிபணிந்து விட்டார்.

ஏற்கனவே விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தின் அடிப்படையில் பேசத் தயார் என்று தான் சொன்னதை அவ்வாறு ஒரு போதும் சொல்லவில்லை என்று மறுதலித்ததுடன் அதன் அடிப்படையில் பேச முடியாது என்று இப்போது சொல்லிவிட்டார்.

அவர் தலைமை தாங்கும் அமைச்சரவையின் சார்பில், அரசாங்கத்தின் சார்பில் விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் அடிப்படையில் பேசத் தயார் என்ற அறிவிப்புகள் வெளிவந்த போது சந்திரிகா என்ன செய்து கொண்டிருந்தார்? என்ற கேள்வியை யாரும் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அதற்கான பதில் அப்படி எந்த அறிவுப்பும் வரவில்லை. அரசாங்கம் அப்படிச் சொல்லவில்லை என்று வரும் பின்பு அதற்கான கேள்வி என்று இது முடிவின்றித் தொடரும்.

இந்த அமைதிப் பேச்சவார்த்தையில் ஏற்பட்டிருக்கிற தடங்கல் அல்லது முடங்கலோடு தொடர்புபட்ட இன்னொரு விடயம், விவசாய அமைச்சு தொடர்பாக சந்திரிகாவுக்கும் ஜேவிபிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினையாகும்.

கடந்த ஏப்ரல் மாதம் சிறீலங்காவின் ஆளும் (சிங்கள) மக்கள் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்ற போது மகாவலி அபிவிருத்தி அமைச்சு தங்களுக்கு தரப்பட வேண்டும் என்று ஜேவிபி நிபந்தனை விதித்திருந்தது. சந்திரிகா அதை ஏற்க மறுத்து தனது கட்சிக்கு அந்த அமைச்சை வழங்கிய போது ஜேவிபி அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளாமல் வெளியில் இருந்து பேரம்பேசியது. ஜேவிபியின் உதவியில்லாமல் ஆட்சியமைக்க முடியாது என்ற நிலையில், சந்திரிகா மகாவலி அபிவிருத்தி அமைச்சை இரண்டாகப் பிரித்து, விவசாய அபிவிருத்தி என்ற ஒரு அமைச்சை உருவாக்கி, அதை ஜேவிபிக்குக் கொடுத்து பிரச்சினையை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவந்திருந்தார்.

ஆனால் அண்மையில் அந்த விவசாய அபிவிருத்தி அமைச்சிடமிருந்த சில பொறுப்புக்களை சந்திரிகா திடீரென பறித்ததை அடுத்து ஜேவிபிக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன் பின்னணியில் தான் பேச்சுவார்த்தையை இதற்கு ஒரு சாட்டாக வைத்து, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினால் அரசாங்கத்தை விட்டு விலகுவோம் என்று ஜேவிபி பூச்சாண்டி காட்டியது.

உண்மையில் இந்த மகாவலி அபிவிருத்தி அமைச்சில் ஜேவிபி குறியாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால், இந்த மகாவலி அபிவிருத்தி அமைச்சில்தான் பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்தபடியாக அதிகளவு ஆயுதங்கள் இருக்கின்றன. மகாவலி ஆற்றுப் படுக்கைப் பிரதேசங்களில் உள்ள சிங்களக் குடியேற்றங்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட ஊர்காவல் படைகளும் இந்த அமைச்சின் கீழேயே வருகின்றன.

இந்த ஆயுதங்களையும் ஆயுதப்பயிற்சி பெற்ற நபர்களையும் தம்வசப்படுத்தவதே ஜேவிபியினுடைய திட்டமாகும்.

இது ஜேவிபியினது தற்போதைய தலைவர் சோமவன்சா அமரதுங்காவின் 16 வருடக் கனவாகும்.

1998ல் அதாவது ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் ரோகண விஜயவீரா உயிருடன் இருந்த போது இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறீமாவோ பண்டார நாயக்காவும், பிரேமதாசாவும் போட்டியிட்ட போது, ஜேவிபியின் நிலைப்பாடு என்ன? என்ற ஒரு விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் பிரேமதாச 5 ம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். பெரிய அளவுக்கு அரசியல் பாரம்பரியமோ நிலப்பிரபுத்துவ பின்னணியோ இல்லாதவர் சிறீமாவுடன் ஒப்பிடும் போது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர் பரவாயில்லை என்ற கருத்து ரோகண விஜயவீராவாலும் அப்போதைய ஜேவிபியின் செயலாளராக இருந்த உபதிஸ்ஸ கமநாயக்கவாலும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் பிரேமதாசாவைவிட சிறீமாவோவை ஆட்சிக்குக் கொண்டுவருவதுதான் நல்லது, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜேவிபி ஆதரவாளர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள், மகாவலி பிரதேசத்திலுள்ள ஊர் காவல் படையில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் சுதந்திரக்கட்சிக்காரர்கள். சிறீமாவோவை ஆதரித்து சுதந்திரக்கட்சிக்குள் ஊடுருவி கட்சியை முடக்கினால் மகாவலி பிரதேசத்திலுள்ள ஆயுதங்களை கைப்பற்றலாம் அதன்பின் ஆட்சியை கைப்பற்றலாம் என்ற கருத்து அப்போது ஜேவிபியின் மத்திய குழு உறுப்பினராக இருந்த சோமவன்ச அமரதுங்காவால் முன்வைக்கப்பட்டது.

அப்போது அது நிராகரிக்கப்பட்டாலும், இப்போது அனுரா பண்டாரநாயக்கா போன்ற சில நபர்களின் பதவி ஆசையை பயன்படுத்தி ஜேவிபி ஏறக்குறைய சுதந்திரக் கட்சிக்குள் முழுமையாக ஊடுருவிவிட்டது. அதேபோல படையிலிருந்து தப்பியோடிய ஆயுதப்பயிற்சிபெற்ற நபர்களையும் இரகசியமாக ஜேவிபி உள்வாங்கிவிட்டது.

ஜேவியினுடைய இப்போதைய தேவை சிறீலங்காவின் அதிகார மையத்தை கைப்பற்றுவதற்கான சரியான சந்தர்ப்ப சூழ்நிலைகளை திட்டமிட்டு உருவாக்குவதாகும்.

இதன் முதல் கட்டம் கொழும்பு அரசியில் வட்டாரத்தின் உறுதித் தன்மையை சீர்குலைப்பது. ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக அவரது சகாக்களை தூண்டிவிட்டதிலும், ஹெல உறுமயாவுக்கும் திலக் கருணாரத்னாவுக்கும் பிரச்சினையை உண்டு பண்ணியதிலும், சுதந்திரக்கட்சிக்குள் மகிந்த -அனுரா குழுக்களுக்கிடையே பலப்பரீட்சை நடத்திவிப்பதிலும், சந்திரிகாவுக்கு -செக்- வைத்து முன்னுக்குப்பின் முரணாகப் பேசி, தன்னுடைய வாயாலேயே தனது கௌரவத்தை கெடுத்துக்கொள்ளும் சூழ்நிலைக்கு அவரை தள்ளவைத்ததிலும் ஜேவிபியினுடைய பங்கு முக்கியமானது.

அடுத்த கட்டம் அமைதி முயற்சியை சீர்குலைத்து போருக்கான சூழ்நிலையை உருவாக்குவது.

விடுதலைப்புலிகளுடன் மட்டும் பேசக்கூடாது. அனைத்துக் குழுக்களுடனும் பேசவேண்டும்.

இடைக்கால நிர்வாகம் பற்றி பேசக்கூடாது இறுதித் தீர்வு பற்றியே பேசவேண்டும். அதுவும் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது.

நோர்வே பக்கச் சார்பாக நடக்கிறது. அதனால் அதனுடைய அனுசரணை தேவையில்லை. இந்தியாவினுடைய அனுசரணை தான் வேண்டும். என்றெல்லாம் ஜேவிபியினர் கருத்துச் சொன்னதும் அறிக்கைகள் விட்டதும் அமைதி முயற்சியை முறிவடையச் செய்து போர் சூழல் ஒன்றை உருவாக்கும் நோக்கத்தை கொண்டதென்பதில் சந்தேகமில்லை.

**விடுதலைப்புலிகள் ஒருபோதும் போரை விரும்பவில்லை. அதை அவர்கள் எப்போதோ மிகத் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் தமிழ் மக்கள் மீது போர் திணக்கப்பட்டால் அதை எதிர்கொள்ளவும் போர் வெறியர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கவும் அவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்.**

**தங்களது ஆட்சி அதிகார வெறிக்கு சிங்களம் இன்னமும் தமிழ்மக்களை பலிக்கடாவாக்க முற்பட்டால் நிச்சயம் தமிழ் மக்கள் தங்களது தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கும் இறுதி இலக்கை நோக்கி வெகுவிரைவாக முன்னேறுவார்கள் என்பது நாளைய அதி முக்கிய செய்தியாக இருக்கும்.**

அடுத்து கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட போது அந்த விடயத்தை கையாண்டால் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி அழித்துவிடலாம் என்று சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்கியவர்களில் முதன்மையானவர்கள் ஜேவிபி தலைவர்கள். கிழக்கில் பிரதேசவாதத்தை தூண்டிவிடுவதன் மூலமும் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் முரண்பாடுகளை வளர்த்துவிடுவதன் மூலமும் தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கி விடலாம் என்று கூறியவர்களும் அவர்கள் தான்.

கருணா விடயத்தை இராணுவப் புலனாய்வுத் துறையினர் கையாண்டவிதத்தில் சந்திரிகாவின் மரபுவழி பேரினவாத உள்நோக்கம் சம்மந்தப்பட்டிருந்தாலும் ஜேவிபியின் ஆலோசனைகளையும் இதில் அவர் பெற்றிருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

நோர்வே அனுசரணையாளர்கள் கொழும்பு வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சந்திரிகா அமைதி முயற்சிக்கான அந்த வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்த தவறியிருந்தது மட்டுமல்ல பல சந்தர்ப்பங்களில் நோர்வே அனுசரணையாளர்களை சந்திக்காது அவமானப்படுத்தியுமிருந்தார். இதிலும் சந்திரிகாவின் தொலைநோக்கற்ற பார்வைக்கு அப்பால் ஜேவிபியின் தூண்டுதலும் இருந்ததென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இப்போது சந்திரிகா இடைக்கால நிர்வாக அலகு பற்றி பேசமுடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். பேச முடியாது என்றால்- பேச்சுவார்த்தை இல்லை என்றால் அடுத்த என்ன?

போர் தான்.

ஜேவிபியின் விருப்பம் அதுதான்.

போர் வந்தால் விடுதலைப்புலிகளை அதில் வெல்ல முடியாது என்பது ஜேவிபியினருக்குத் தெரியும். ஆனால் இந்தப் போரின் மூலம் சந்திரிகாவையும் ரணிலையும் தாங்கள் வென்றுவிடலாம் என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால் தான் அவர்கள் போரை விரும்புகிறார்கள்.

விடுதலைப்புலிகள் ஒருபோதும் போரை விரும்பவில்லை. அதை அவர்கள் எப்போதோ மிகத் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் தமிழ் மக்கள் மீது போர் திணக்கப்பட்டால் அதை எதிர்கொள்ளவும் போர் வெறியர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கவும் அவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்.

தங்களது ஆட்சி அதிகார வெறிக்கு சிங்களம் இன்னமும் தமிழ்மக்களை பலிக்கடாவாக்க முற்பட்டால் நிச்சயம் தமிழ் மக்கள் தங்களது தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கும் இறுதி இலக்கை நோக்கி வெகுவிரைவாக முன்னேறுவார்கள் என்பது நாளைய அதி முக்கிய செய்தியாக இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஒரு ஆட்டுதினம் அல்லது ஒரு சின்னப்பிரச்சினை

முல்லை யேசுதாசன்

இன்றைக்கு வீட்டுக்கு போகிறான். பேப்பர்களை கெதியாய் விற்றுவிட வேண்டும். அவனுக்கு அவசரம் ஈழநாதம் சுடரொளி கத்திக்கொண்டே போனேன். வீட்டை போக ஒரு இருபது ரூபா மிஞ்சினாக்காணும். நேற்றைக்கு அம்மாவுக்கு காசு அனுப்பிபோட்டான்.

அன்றைக்கென்று என்னவோ முறிகண்டியில் எக்கசக்க சனம் யு என் எச்சி ஆர் வாகனம் ஏழெட்டு செஞ்சிலுவை மூன்று நாலு சிங்கள வாகனங்கள் அதைவிட ரோட்டுபோட்டுக்கொண்டு டோசரும் கல்லு நெரிக்கிற மெசின் என்று அதுகும் இதுகுமாய் பேப்பரிலயும் இன்றைக்கு சமாதானப்பேச்சு விசேசம்- பேப்பரில ரணிலும் சந்திரிக்காவும் பெரிசாய் புலிகள் தமிழ் மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளைக் கேக்கினம். மீளக்குடியிருப்புக்கு அரசு இருபத்தையாயிரம் தருகிறதாம். எல்லாம் அவனும் வாசிச்சிட்டான். இன்னும் அவனின் குடும்பத்திற்கேதும் வந்ததாயில்லை.

பேப்பர் ஒன்று விற்றுப்போட்டு நிறுத்தியிருந்த பஸ்சின் முன்னாக தாண்டிபோனவன். எதிர்பார்க்கவில்லை அந்த வாகனத்தை தாண்டிவிடுவோம் என்று நினைப்பதற்கிடையில் அடிபட்டுவிட்டான். கொஞ்ச தூரத்தில் போய்விழுந்தான். மிச்சப் பேப்பர்கள் கையை விட்டு போய்விட்டது. எழும்ப நினைத்தான். முடியவில்லை. யாரோ தூக்கினார்கள் வேண்டாம் என்னைக்கொஞ்சம் விடுங்கோ என்றான். தானாகவே எழும்பி நின்று பார்த்தான். காலில் சிராய்ப்பு நடக்கமுடியவில்லை. கண்இமையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது ஒரு பேப்பர் துண்டை எடுத்து ஒத்தினான் வாகன ரைவர் பதறிப்போய் ஓடிவந்து பார்த்தார். பக்கத்தில் நின்றவர் பேசினார் "கண்மண் தெரியாதே உனக்கு" என்று அவரைப்பேச வேண்டாம் என்றான்.

புறந்துபோன பேப்பர்களை யாரோ பொறுக்கி கொணர்ந்து 'பாக்'கில் போட்டுக் கொடுத்தார்கள். அதிலயும் ஒருத்தன் சுடரொளி நடுப்பக்கத்தை ஒருமுறை பார்த்துவிட்டு கொடுத்தான் - "உந்தப் பொலீஸ் ஒன்றும் கவனிக்கிறதில்லையே பாவம் சின்னப்பெடியன்" அருகில் நின்ற காவல்துறைப்பெடியன் முறைத்தான் அவரை சனம் நிறையக் கூடியிருந்தது வெட்கமாய் போய்விட்டது. மணிக்கு.

அந்தக் காவல் நிலைய அதிகாரி றைவரைப் பேசினார் ஐயா இது சனம்அதிகமாம நிற்கிற இடம் உங்களுக்கு கவனம் வேணும் மணி மறுத்தான் " நான்தான் அவசரத்தில குறுக்க வந்திட்டன்" "என்னிலையும் பிழைதான்" மறுத்து சொன்னார் அந்த வயதான றவைர் ஐயா அவரைப்பாார்க்க பாவமாய் இருந்தது மணிக்கு.

"ஐயா பெடியன்ர காயத்துக்கு கொண்டு போய் மருந்துகட்டுங்கோ சேட்டும் கிழிஞ்சுபோச்சுது சேட் ஒன்று வாங்கிக் குடுங்கோ அதில் கையெழுத்தபோடுங்கோ" போட்டார்.

"தம்பி நீயும் இதில கையயெழுத்தப்போடுங்கோ"

"எத்தின வயசு உனக்கு"

"பதினாறு""எத்தினையாம் வகுப்பு படிச்சனி"

"ஆறாம் வகுப்பு"

"பேந்தேன் படிக்கேல்ல"

அவன் சிரித்தான்.

வாகனம் அந்த தனியார் மருத்தவமனையில் நிற்க அவன் இறங்கவில்லை அவன் பக்கத்துக்கதவை ரைவர் திறந்து விட்டு "இறங்கு" என்றார் "ஐயா மருந்து கட்ட காசு குடுக்கத்தானே வேணும்"

"சே... குடுக்க வேணும்"

"நான் மருந்து கட்டேல்ல, அது மாறீடும் நீங்கள் அந்த காசை எனக்கு தருவியளே" றவைர் அவனை கொஞ்ச நேரப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் கதவை சாத்திவிட்டு சொன்னார். "உன்ர மாதிரித்தான் என்ர நிலைமையும்" என்று

தேனீர்க் கடையில் தேனீருக்கு சொன்னார் றவைர்- "தம்பி சாப்பிடுவம் ஏதும் கொண்டா"

சுற்றும் முற்றும் பார்த்தான் மணி பலபேர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் யாரோ பிரியாணியும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

"ஐயா என்றான் மணி" திரும்பிப்பார்த்தார்.

"எனக்கு தேத்தண்ணி வேண்டாம் மருந்தும் கட்டவேட்டாம் சேட்டும் வேண்டாம். எனக்கொரு பிரியாணி வாங்கித்தருவியளே"?

அவர் சிரித்துவிட்டு "தம்பி ஒரு பிரியாணி கொண்டுவாங்கோ"

"எனக்கு சாப்பாடுவேண்டாம் கட்டித்தாங்கோ"

திரும்பவும் றைவர் சிரித்தவிட்டுகேட்டார் "ஆருக்கு அம்மாவுக்கோ"

"இல்லை"

அவர் பின்பு கேட்கவில்லை

அண்ணன் மணியில் தோளில் கால் முறித்த அவனுடைய தம்பி இருந்து சொன்னான் "அண்ணா வீட்டவரேக்க எனக்கு பிரியாணி கொண்டுவா" தங்கச்சியும் மற்ற தம்பியும் சொன்னார்கள் "எங்களுக்கும்"

பேப்பர்கள் எல்லாம் கசங்கிபோய்விட்டது. "என்னால விக்க ஏலாதண்ணா காலும் நொந்து போச்சுது" என்று கடைக்காரரிடம் பேப்பரை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொடுத்துவிட்டு "ஒரு இருபது ரூபா தாங்கோ செலவுக்கு" என்று கேட்டான் மணி. அவர் கொடுக்கவில்லை "மணி நீ வாகனத்தில தட்டுப்பட்டது உன்ர கவனயீனம். பார் பேப்பரெல்லாம் நல்லா கசக்கிகோட்டாய் எனக்கு நட்டமடாப்பா என்னட்டை ஒண்டும் கேக்கக்கூடாது. உனக்கு என்ர கஸ்ரம் தெரியும்" அவன்கேட்டகவில்லை திரும்பி.

தேத்தண்ணிகடையில அக்காவிடம் கடனுக்கு பிளேன் ரீ குடித்தான் இரண்டு பனிஸ் வாங்கினான். "தம்பி மணி ஐம்பது ரூபாவிற்கு வந்திட்டுது கடனை ஞாபகப்படுத்தினார். "அக்கா சேர்த்து ஒரு இருபது ரூபாதாவன். பேந்துதாறன். டேய் கேக்காதயடா என்னட்ட கெஞ்சினா.

கடையால் வெளியில் வந்தவனை யாரோ கூப்பிட்டார்கள் அது "சேகர்" "டேய் மணி எனக்கொரு இருபத்தாறு ரூபா வேணும்" என்றா அரிசிக்கோ"

"வேற என்னத்துக்கு"

"சரி பரவாயில்லை விடு இரவைக்குப் பாப்பம்"

போனவளை திரும்பிக் கூப்பிட்டான் மணி

"இந்தா இதைக் கொண்டு போ, ஒரு பிரியாணிப்பார்சல் மத்தியானத்துக்கு சமாளிக்கலாமோ"

"வேண்டாம் மச்சான் நீ வீட்ட கொண்டு போறது" இழுத்தான் சேகர்.

"பரவாயில்லை பிடி" "பிடியடா" ஒன்றுமேசொல்லாமல் வாங்கிவிட்டான் சேகர் அது அவனுடைய குடும்பத்தின் ஒரு மதியத்தை சமாளிக்கும்.

கால் அவ்வளவு நல்லா நடக்க முடியெல்ல பஸ்சுக்கும் காசில்லை மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்தான். மணி ரோட்டில ஆரோ எறிஞ்சுவிட்டுப்போன மிச்சச்சாப்பாட்டு சொப்பிங்பாக்கை நாய் கிழித்துக் கொண்டிருந்து. "நாய்க்கு லக்கு" நினைத்துக் கொண்டே நடந்தான் மணி.

ஏ னைன் பாதையில இப்ப வாகனம் எக்கச்சக்கம். அவனுக்கும் கை காட்டிக் கொண்டு போனார்கள் யாரோ.

ஒரு நிமிடத்தில் ஒரு பஸ் நின்று கொண்டிருக்க மரநிழலாய் கொஞ்சப்பேர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் பக்கத்துக் கிணற்றில் சின்னப்பெடியன் கை கழுவ தண்ணிர் அள்ளினார்கள். அவனும் கிணற்றில் தண்ணீர் குடித்தான். அவர்களுக்கு பக்கமாக இருந்த மரநிழலில் அவனும் ஆறினான் நடந்தகளை.

பெரியவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்க சின்னப் பெடியன் விளையாடிக்கொண்டு இருந்தார்கள் அவர்கள் பெரியவர்கள் யாரும் பேசவும் இல்லை. பெடியன் ஒருவன் சாப்பிட்டுவிடட்டு அரைவாசியோடு சாப்பாட்டை எறிந்துவிட்டான் இன்னொரு பெண்பிள்ளையும் சாப்பிட்டு அரைவாசியை எறிந்துவிட்டாள். எறிந்தது பிரியாணிச்சாப்பாடு இறைச்சி கறி, கோழிமுட்டை பாதி கடித்தபடி கவலையாயிருந்து அவனுக்கு . அம்மா தம்பிமார்கள் சாப்பிட்டுட்டு தந்தால் அவன் சாப்பிடுவான். ஆனா அது எச்சிச்சாப்பாடு எறிஞ்ச சாப்பாடு.

'பாக்'கில் இருந்து ஒரு பணிசை எடுத்து சாப்பிட்டான். மற்றது தம்பிக்கு அந்தப்பக்கமே திரும்பிப்பார்க்கவில்லை அதில் சாப்பிட்ட பெரியவர் ஒருவரின் குரலாயிருக்கவேணும். ஏய் நீங்கள் சாப்பிடவில்லையா? வாகனத்தில் இருந்து பெண்குரல் "வேண்டாம் எங்களுக்கு" "அப்ப இதை என்ன செய்யிறது? பெரியவர் கேட்டார் "இனி அது புளிச்சுப்போயிடும் வைக்க ஏலாது வெளியில வீசுங்கோ நாய் ஏதாவது சாப்பிடும்"

எதை எறியப்போகிறார்கள் முழுச்சாப்பாட்டையா? அவசரமாய் திரும்பினான் மணி அவர் ஒரு கூடையில் இருந்த பார்சல்கள் இரண்டை எடுத்து அந்த மரத்தின் அருகே போட்டுவிட்டு கை கழுவினான். மணிக்கு நெஞ்சு அடித்துக் கொண்டது இரண்டு முழுப்பிரியாணிப்பார்சல் "அவர்களிடம் கேட்டு வாங்குவமோ" சீ மரியாதை இல்லை பிச்சைக்காரப் பெடியன் என்று நினைப்பர் அவர்கள் போகட்டும் அதை எடுப்பம். அவை எறிஞ்சுவிட்டு போறதுதானே. இனி அது அவையின்ர இல்லைத்தானே எண்டாலும் தெரியாமத்தான் எடுக்கோணும். மரியாதை இல்லை மனதுக்க நூற்றுத் தொண்ணூற்று எட்டு நினைப்புக்கள்.

கடவுளே நாயொன்றும் அவர்கள்போறதுக்கிடையில் வரக்கூடாது.

அவர்கள் புறப்பட்டுப் போவதில்லை சிலர் போத்தலில் தண்ணீர் குடித்தார்கள் சோடா குடித்தார்கள் சிலர். ஒருவர் சிகரட் புகைத்தார் புறப்படுவதாயில்லை. சாப்பாட்டு வாசம் அவ்வளவு தூரம் மணத்திருக்காது தூரத்தில் நாயொன்றுவந்து கொண்டிருந்தது.

கடவுளே நாய் இந்தப்பக்கம் வரவேகூடாது. அவன்நினைக்க நாய் அவர்களின் பக்கம்தான் வந்து கொண்டிருந்தது இப்போது அது வாசம் பிடித்திருக்க வேண்டும்.

அவர்கள் புறப்பட ஆயத்தமாகி இறங்கிய பொருட்களை ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். பிள்ளைகள் ஏறுவதற்கு இடிபட்டார்கள் அந்தப் பெரியவர்கள் இன்னும் புகைத்துக் கொண்டுதானிருந்தார்.

நாய் அந்தப்பிள்ளைகள் எறிந்த சாப்பாட்டிற்கு அருகில் வந்துவிட்டது ஆட்களைப்பார்த்தது சிலகற்களைப் பொறுக்கினான் . பிள்ளைகள் எறிந்ததை சாப்பிடட்டும் ஆனால் முழுப்பார்சல்களை அது சாப்பிட விடக்கூடாது.

பெடியன் எறிந்த பார்சலை சாப்பிடத் தொடங்கிவிட்டது. சாப்பிட்ட குறையில் முழுதாய் போட்டிருந்த பார்சலை ஏறிட்டும் பார்த்தது. மனம் அடித்துக்கொண்டது மணிக்கு இருப்புக்கொள்ளமுடியவில்லை. மெல்ல எழுந்தான் நாய் தன்னை பார்க்காதா என்று நினைத்தான். பார்த்தால் பயமுறுத்தி விடலாம். அதுபார்க்கவில்லை. எறியத்தான் வேணும் எறிந்தான். எறி நாய்க்கு பட்டுவிட கொஞ்சத் தூரம் கத்திக்கொண்டு ஓடியது நின்று பார்த்தது.

வாகனக்காரப் பெரியவர் திரும்பிப்பார்த்தார் அவனை கோபமாய் "ஏன் அதுக்கு எறியிறாய் பாவம் அது சாப்பிடட்டும் மிருகமெல்லே" என்றார் பேசவில்லை அவன் நாயைக் கூப்பிட்டார் நாய் வருவதும் நிற்பதுமாயிருந்தது. மேல்ப்பார்த்து கிட்ட வர இன்னுமொருமுறை எறிவது போல் கையோங்க நாய் அவனைப் பார்த்துவிட்டு ஓடியது. அவர் அவனிடம் வந்து பேசினார் "ஏன்டா அதுக்கு எறியிறாய்" கொஞ்ச நேரம் முறைத்தார். போய்விட்டார்.

அவர் கோபத்துடனே வாகனத்தில் ஏறினாலும் நாயை திரும்பவும் கூப்பிட்டு சாப்பாடு வைக்கவில்லை அது தேவையுமில்லை. அவன் தனக்கு மதிப்பளிக்கவில்லை என்ற கோபம்தான் அவரிடம் அதிகம் இருந்தது. அவர் தன்மேல் பச்சாத்தாபப்படுவதை அவன் விரும்பவில்லை அது போலவே தன்னை ஒரு கிறுக்கனாக நினைத்துக்கொண்டு போவதைப்பற்றியும் அவன் கவலைப்படவில்லை.

அவன் அவரிடம் பணிந்து போய் சாப்பாடு கேட்கவும் இல்லை. அதுபோல் அவர் எறிந்துவிட்டதை அவருக்கு முன்னால் எடுக்கவும் இல்லை. தன்னை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவருக்கு சமதையாகவே நினைத்தான்.

நாய் இன்னமும் நின்றது அவனுக்கு பயத்தில் எறிந்துவிடப்பட்டிருக்கும் சாப்பாட்டிற்கு சொந்தக்காரன் இப்போது அவன்தான் என்பது அதற்குத் தெரியும்.

ஓடிப்போய் இந்த முழுப்பார்சல்களை எடுத்தான் பாக்கில் வைத்துவிட்டு எறியப்பட்டு சாப்பிட்டு மீதமாய்க் கிடந்த பார்சல்களை ஒன்றாக்கி லஞ் பேப்பர்களில் மூடியிருந்த சோற்றைப் பிரித்து வைத்துவிட்டு நாயைக் கூப்பிட்டான் நாய் வாலை ஆட்டியது. அதற்குத் தெரியும் அது தனக்கென்று.

முழுப்பார்சல்களை திரும்பவும் வெளியில் எடுத்துப்பார்த்தான் பிரித்தான் முட்டையும் கோழி இறைச்சியுமாய், இறைச்சித்துண்டு ஒன்றை வாயில்போட்டான்.

“எவ்வளவு ருசியானதொரு சாப்பாடு இதை எறிந்துவிட்டு போகிறார்களே” வன்னிக்குள் இன்னும் எவ்வளவு சனம் சாப்பாட்டிற்கு அல்லற்பட்டு........எவ்வளவு ஒரு நூறு ரூபா வருமா ஒரு சாப்பாடு நூறு ரூபா உழைக்க எவ்வளவு கஸ்டம்”

திரும்பியவனின் கண்ணில் பட்டது அந்த மணிப்பேர்ஸ் சற்று பருமனாய் ஓடிப்போய் எடுத்தான் பிரித்தான் நிறைய ஆயிரமும் ஐநூறுமாய் தாள்கள் நெஞ்சு படபடத்தது எடுத்துக்கொண்டு ஓடடா கஸ்டம் சொல்லியது. வேண்டாம் என்றது தன்மானம் இப்பிடி அப்பாவும் நிறையக் காசு வச்சிருந்தவராம் அம்மா சொல்லுவா பளையிலே மூவாயிரம் தென்னையோட பெரிய தோட்டமாம் இப்ப வெறுங்காணி கிடக்கு பர்சைப்பிரித்த ஒரு தாளை எடுத்துப்பார்த்தான் ஆசையாயிருந்தது.

என்ன செய்யிறதென்று தெரியாமல் இருந்தது கொஞ்சநேரம் மெல்லப் பர்சை மடித்து அதே இடத்தில் வைத்தான் அதற்குமேல் ஒரு தேக்கு இலையை வைத்துவிட்டு அதற்கு மேல் ஒரு கல்லைவைத்துவிட்டு பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் வராவிட்டால் அது அவனுக்குதான் காற்றுக்கு இலை படபடத்தது. அவனின் மனம்போல.





நாய் சாப்பிட்டுவிட்டு போய்விட்டது காத்திருந்து காத்திருந்து பின்னேரமாகி விட்டுது பிரியாணி பழுதாகப்போகிறது அவர்கள் இன்னமும் வந்தபாடாய் இல்லை.

இனிப்போவமா? எடுத்துக்கொண்டு போவமா? என்றிருக்க அந்தவாகனம் வந்து நின்றது அந்தப் பெரியவர் இறங்கி ஓடிவந்தார் வேறு இருவரும் வந்தார்கள் தேடினார்கள்.

அவன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான் அவர் அவனைப் பார்த்துவிட்டு அவனிடம் வந்தார். “தம்பி இதில காசை விட்டுட்டு போட்டன் கண்டனீங்களோ” “எவ்வளவு மரியாதை காசுக்கா, எனக்கா” உள்ளுக்குள் சிரித்தான். வெளியில் பயந்தான்.

கையை நீட்டிக்காட்டினான். இலைக்கு கீழ் காசு ஓடிப்போய் எடுத்தவர் பர்சைப்பிரித்து காசை எண்ணினார். அவனை நிமிர்ந்து பார்த்தார் பார்வை சரியில்லைப் போலிருந்தது அவனுக்கு “நான் ஒன்றும் எடுக்கவில்லை” என்றான் அவ்வளவு தாளிலும் ஒன்றை உருவினார் ஐநூறு ரூபா அவனிடம் நீட்டினார். என்னை வாங்கு என்பது போல படபடத்தது காசு காற்றுக்கு. இப்போதும் தன்னை அவருக்கு சமைதையாகவே நினைத்தான் சாப்பாடு அவர் எறிந்து விட்டுப்போனது காசு அவருக்கு உரியது. அவரிடம் வாங்குவது தன்மானத்தை விற்றுவிடுவது போல தோன்றியது. உறுதியாக மறுத்துவிட்டான் கேட்டுப்பார்த்துவிட்டு போய்விட்டார் அவர்.

அண்ணனின் பாக் பாரத்தை வைத்தே தம்பி கத்தினான். “அண்ணா பிரியாணி கொண்டு வாறார்” என்று தம்பிக்கும் அம்மாவுக்கும் ஒருபார்சல், தம்பிக்கும் தங்கச்சிக்கும் ஒரு பார்சல் அம்மா பயந்தபடியே கேட்டா “என்னடா காயம் என்னடா சேட்டு கிழிஞ்சிருக்கு” “அது ஒரு சின்னப்பிரச்சினை”

அப்பான்ர சாப்பாட்டைத்தாங்கோ. எல்லோரும் ஒவ்வொரு கை கொடுத்தார்கள். அண்ணனும் அப்பாவும் அவன்தான்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இவர்களின் காத்திருப்பு மட்டும் ஏன்?



வசந்தப் பறவைகள்
மண்ணின் வாசத்தோடு
பாடித்திரிந்தவர்கள்

உயிர் பிரிந்திடுமோ — என்ற
மன உறுத்தல்களால் தொடங்கிய
இவர்களின்
நெடுந்தூரப் பயணம்
முடிந்ததா?

கூடு திரும்பிய இவர்களுக்கு
மரண பயமில்லை

இவர்களில், இவர்களின்
காத்திருப்பு மட்டும் ஏன்?
நாள்தோறும் தொடர்கிறது

கண்ணீரில் நனைந்து போன
இவர்களின் எண்ணக் குவியல்கள்
இரு ஆண்டுகளுக்கு மேலாக
சிறை வைக்கப்பட்டிருக்கின்றனவே

ஊருக்கு மட்டும்
உயிர் வந்தால் போதுமா?

இவர்களின் சிதைந்த வீடுகள்
உயர் பாதுகாப்பு வலயத்தினுள்
சிறைவைக்கப் பட்டிருக்கிறதே!

நாளை, நாளை என்ற
இவர்களின் காத்திருப்பு
புலராத திசையின் கண்பார்ப்பு

கந்தகக் காற்றின் கலப்பு இல்லாமல்
சிரித்து சிலிர்த்து நின்ற
சின்னக் கிளைகளில்
அரும்பு கட்டிய துளிர்கள்
தமக்குள் ஏதோ பேசிக் கொண்டன

துளிர்கள் தமக்குள்
பேசியது தான் என்ன?

முதுமை இல்லா
முகச்சுருக்கங்கள் எல்லாம்
வஞ்சகத்தின் குவியல்களாக்கிய
சூனியக்காரியின் கைகுலுக்கல்களால்

கிழக்கை மறைப்பேன்
என்று சொன்ன
வஞ்சக இருட்டு
நரகத்திற்கு வழி தெரியாது
தவிக்கையில்

முகத்திரையுடன்
குள்ளநரிகள் குதறி எறியும்
கிழக்கின் கொலைகளால்

சமாதானத்தின் ஒப்பனை
கலையப்பட்டு விடுமோ?

துளிர்களின் பேச்சு காற்றோடு
சென்று விட்டது!

இந்தப் பாறைகளின் வெடிப்பில்
பசும்வேர் படருவது எப்போ?

விக்கி நவரட்ணம் — சுவிஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?

வெள்ளையர்கள் 16, 17 ஆம் நூற்றாண்டுகளில்தான் அமெரிக்க நாடுகளில் குடியேற ஆரம்பித்தனர். அதற்கு முன்னர் தென், வடஅமெரிக்கக் கண்டங்கள் முழுவதிலும் செவ்விந்திய இன மக்களே வாழ்ந்து வந்தனர். 1800 முதல் 1900 ஆம் ஆண்டிற்குள் அமெரிக்கா முழுவதும் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாட்டினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. அங்கே வாழ்ந்த செவ்விந்தியர்கள் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் பட்டிகள் போன்ற அமைப்புகளில் ஆடு மாடுகள்போல் அடைத்து வைக்கப்பட்டனர். 1960 களிலிருந்துதான் வட அமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்கள்.



**சீத்தல்**

செவ்விந்தியத்தலைவர் அமெரிக்க ஜனாதிபதிக்கு 1855இல் எழுதிய கடிதம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

1855 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஃபராங்க்லின் பியர்ஸ் வாஷிங்டன் மாநிலத்தில் வாழ்ந்து வந்த சுவாமிஷ் இனத்தின் செவ்விந்தியத் தலைவராக இருந்த சீத்தல் என்பவருக்குச் செவ்விந்தியரின் நிலம் அனைத்தையும் தாம் வாங்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். கடிதம் பெயரளவில்தான், துப்பாக்கி முனையில் ஆக்கிரமிக்கப்போகிறோம் என்பதுதான் அதன் பொருள்.

அமெரிக்க ஜனாதிபதியின் அக்கடிதத்துக்கு செவ்விந்தியத் தலைவர் சீத்தல் அனுப்பிய பதிற்கடிதம் சூழல் சீரழிவது பற்றிய அறிக்கையாக மாத்திரம் அல்ல, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணமாகவும் இன்றுவரை போற்றப்படுகிறது. 149ஆண்டுகளுக்குமுன்னர் அவர் எழுதிய விடயங்கள் இன்றும் எமக்குப் பொருத்தமானவையே. பூமித்தாயை மெய்யாகவே நேசித்த அந்தப் புத்திரனின் கடிதம் இங்கே முழுமையாகத் தரப்படுகின்றது.



அமெரிக்க அதிபருக்கு செவ்விந்தியத் தலைவரின் கடிதம்:

'அமெரிக்காவின் பெருந்தலைவர் எங்களது நிலத்தினை வாங்க விரும்புவதாக அறிகிறோம். அமெரிக்கத் தலைவர் தனது நட்பையும் நல்லெண்ணத்தையும் எங்கள் பால் காட்டுவதாகவும் அறிகிறோம். இது அவரது அன்பையே காட்டுகிறது. ஏனெனில் எங்களது நட்பு அவருக்குத் தேவையற்றது. ஆனாலும் உங்களது வேண்டுகோளை நாங்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அப்படி நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் துப்பாக்கி சகிதம் வெள்ளையர் இங்கு வந்து எங்களது நிலத்தை அபகரித்துக்கொள்வார்கள் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இந்தச் செவ்விந்தியத் தலைவன் அமெரிக்கப் பெருந்தலைவரிடம் சொல்லப்போவது, பருவங்கள் உள்ளவரை வானில் நட்சத்திரங்கள் உள்ளது போல் முக்காலமும் உண்மையாகும்.

உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா? நிலத்தின் கதகதப்பை வாங்க முடியுமா? நீங்கள் கேட்பது எங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்தத் தென்றல் காற்றின் வாசமும், இந்தத் தெளிந்த நீரின் ஒளியும் எங்களுக்குச் சொந்தமானவை அல்ல. இவற்றை எப்படி உங்களால் எங்களிடமிருந்து வாங்கமுடியும்? இது பற்றிக் காலம் தான் சொல்ல வேண்டும். இந்த நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் எங்களுக்குப் புனிதமானவை. ஒவ்வொரு ஊசி இலையின் பளபளப்பும், கரைகளின் மணலும், அடர்ந்த காடுகளின் பனி மூட்டமும், வண்டுகளின் ரீங்காரமும் எங்களுக்குப் புனிதமானவை. நெஞ்சை விட்டு அகலாதவை.

வெள்ளை மனிதனுக்கு எங்களது வாழ்க்கை நெறிவிளங்குவது இல்லை. அவனுக்கு நிலத்தின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் தெரிவதில்லை. அவன் இரவில் வரும் திருடனைப் போல் தனக்கு வேண்டியதை எல்லாம் நிலத்திலிருந்து எடுத்துக்கொள்கின்றான். இந்த நிலம் அவனது சகோதரன் அல்ல எதிரி. அதை அவன் வெற்றி கொண்டு முன்னேறுகிறான். தனது முன்னோர்களின் கல்லறைகளை அவன் வழிநெடுகிலும் அமைத்துக்கொண்டு செல்கிறான். அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. நிலத்தைத் தனது குழந்தைகளிடம் இருந்தே அவன் அபகரித்துச் செல்கிறான். அவனுக்கு இலட்சியம் இல்லை. அவனது தந்தையின் கல்லறை பற்றியும் குழந்தைகளின் பிறப்புரிமை பற்றியும் அவனுக்குச் சிந்தனையே கிடையாது. அவனது பசி இந்த நிலம் அனைத்தையும் விழுங்கிவிட்டு வெறும் பாலைவனத்தை மட்டுமே விட்டுச் செல்லப்போகிறது.

உங்களது நகரங்களைப் பார்த்தாலே செவ்விந்தியர்களாகிய எங்களுக்குக் கண்களில் எரிச்சல் உண்டாகிறது. ஒருகால் செவ்விந்தியர்கள் காட்டுமிராண்டிகளாக இருப்பதால் அவர்களுக்குப் புரியவில்லையோ என்னவோ...? வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடமே கிடையாது. இலைகள் காற்றில் அசைவதால் ஏற்படும் ஒலியும், வண்டுகள் பறப்பதால் அவற்றின் சிறகுகள் எழுப்பும் ஒலியும் அங்கு கேட்பதில்லை.

நான் ஒரு காட்டுமிராண்டியாக இருப்பதாலோ என்னவோ! நகரங்களின் இரைச்சல் என் காதுகளுக்கு நாராசமாக ஒலிக்கிறது. குயில்களின் கூவுதலையும், தவளைகளின் உரையாடல்களையும் கேட்க முடியாத இடத்தில் என்னதான் இருக்கிறது? தாமரைக் குளத்தின் மீது தவழ்ந்து வந்து முகத்தில் வீசும் தென்றலும், மழைக்குப் பின் மண்வாசனையுடன் வரும் காற்றும், வேப்பம் பூ மணத்துடன் வரும் காற்றும் எங்களுக்கு மிகவும் பிடித்தமானவை. இந்தக் காற்று செவ்விந்தியனுக்கு விலை மதிப்பிட முடியாத பொக்கிஷம். இந்தக் காற்றைத்தான விலங்குகளும் செடி கொடிகளும், மனிதர்களும் சுவாசிக்கிறார்கள். வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றின் மீது கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. உறுப்புகள் செயல் இழந்து சாகப்போகும் மனிதனைப்போல் இருப்பதால் அவனுக்குக் காற்றின் மணம் தெரிவதில்லை.

உங்களது விருப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தால் அதற்கு ஒரு நிபந்தனை விதிப்பேன். வெள்ளையன் இந்த மண்ணில் விலங்குகளைத் தனது சகோதரர்களாக எண்ணவேண்டும். நான் ஒரு காட்டுமிராண்டி. வேறு எந்த மார்க்கமும் எனக்குப் புலப்படவில்லை. ஓடும் ரயிலில் இருந்தபடியே வெள்ளையர்கள் சுட்டுத்தள்ளிய ஆயிரக்கணக்கான எருமைகளின் அழுகிய பிணங்களை நான் புல்வெளிகளில் பார்த்தேன். நாங்கள் உயிர் வாழ்வதற்கான எருமைகளைக் கொல்கிறோம். ஆனால் துப்பாக்கி எந்த விதத்தில் எருமையை விட மேலானது என்று எங்களுக்கு விளங்கவில்லை. விலங்குகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ முடியும்? எல்லா விலங்குகளும் கொல்லப்பட்டு விட்டால் அவனது ஆத்மாவின் தனிமையே அவனைக்கொன்றுவிடும். விலங்குகளுக்கு நேர்வது மனிதனுக்கும் நேரும். எல்லா விடயங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நிலத்துக்கு நேர்வது நிலத்தின் மைந்தர்களுக்கும் நேரும்.

எங்களது குழந்தைகள் தங்களது தந்தையர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறார்கள். எங்களது வீரர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அவமானப்பட்டிருக்கிறார்கள். தோல்விக்குப் பிறகு அவர்கள் சோம்பேறிகளாக மாறி நிலத்தைத் தனது வியர்வை, உணவு, நீர் போன்ற அசுத்தங்களால் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களது எஞ்சியுள்ள நாட்களை நாங்கள் எங்கே கழிக்கிறோம் என்பது முக்கியம் அல்ல. சில நாட்களே எஞ்சியுள்ளன. சிலமணி நேரங்கள் - சில குளிர் காலங்களுக்குப் பின்பு, எங்களது முன்னோர்களின் கல்லறைகளைப் பார்த்துக் கண்ணீர் வடிக்க யாருமே இருக்கமாட்டார்கள். நாங்களும் உங்களைப்போலவே பலம் வாய்ந்தவர்களாகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்தவர்கள்தான்.

ஒரு விடயம் எங்களுக்கு நன்றாகவே தெரியும், அதை வெள்ளை மனிதனும் விரைவில் தெரிந்து கொள்வான். நம் இருவரின் கடவுளும் ஒருவரே. இப்போது நீ இந்த நிலத்தை உனக்குச் சொந்தமாக்கிக்கொண்டது போலக் கடவுளையும் உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறாய். அது உன்னால் முடியாது. ஆண்டவன் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவன். இந்தப் பூமி அவனுக்குப் புனிதமானது. இந்தப் பூமிக்குக் கெடுதல் விளைவிப்பது கடவுளையே அவமானப்படுத்துவது போலாகும். வெள்ளையர்களும் சீக்கிரமே அழிந்து போவார்கள் - மற்ற இனத்தவர்க்குச் சற்று முன்பாகவே, உன் படுக்கையை நீ அசுத்தப்படுத்திக்கொண்டே வந்தால் ஒருநாள் உனது அசுத்தத்திலேயே நீ அழிந்து போவாய். எல்லா எருமைகளும் கொல்லப்பட்ட பின்பு, எல்லாக் குதிரைகளும் அழிந்த பின்பு காடுகளின் புனிதமான மூலைகளில் மனிதனின் வியர்வை நாற்றமே எஞ்சி இருக்கும். புதர்கள் அழிந்து போகும். கழுகுகள் காணாமல் போய்விடும். சிட்டுக் குருவிகளுக்கும் மைனாக்களுக்கும் விடைகொடுத்து அனுப்புவது எங்கே போய் முடியும்? நமது வாழ்வு முடிந்து சாவு ஆரம்பிப்பதில்தான் முடியும்.

வெள்ளை மனிதன் எந்த மாதிரி கனவு காண்கிறான் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அது தெரிந்தால் எங்களால் வெள்ளையர்களைப் புரிந்துகொள்ள முடியும். தனது குழந்தைகளின் மனத்தில் எந்த நம்பிக்கைகளை அவன் வளர்க்கிறான், எந்த மாதிரி வருங்காலம் அவர்களுக்கு அமையவேண்டும் என்று அவன் நினைக்கிறான் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் காட்டுமிராண்டிகள், வெள்ளையனின் கனவுகள் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. எங்களுக்கு அது தெரியாததால் எங்கள் பாதையிலேயே நாங்கள் போவோம். நமக்குள் உடன்பாடு ஏற்பட்டால் அது நீங்கள் எங்களுக்காக ஒதுக்கி இருக்கும் நிலங்களைப் பெறுவதற்குத்தான். அந்த நிலங்களில் எங்கள் விருப்பம் போல் சிலகாலம் நாங்கள் வாழ்வோம். கடைசிச் செவ்விந்தியன் மறைந்த பின் எங்களது ஆவிகள் இந்தப் புல்வெளிகளில் உலாவி வரும். ஏனெனில் பிறந்த குழந்தை தனது தாயை நேசிப்பது போல் நாங்கள் இந்தப் பூமித்தாயை நேசிக்கிறோம்.

எங்களது நிலத்தை நீங்கள் வாங்கிவிட்டால் அதை எங்களைப்போல் நீங்களும் நேசியுங்கள். எங்களைப் போலவே அதைப் பாதுகாத்து வாருங்கள். நிலத்தை உங்கள் அனைத்துச் சக்தியையும் திரட்டி நினைவில் கொள்ளுங்கள். உங்களது குழந்தைகளுக்காக அதைப் பாதுகாத்து வாருங்கள். கடவுள் நம் அனைவரையும் நேசிப்பதைப்போல் நீங்களும் நிலத்தை நேசியுங்கள். எங்களுக்கு நன்றாகவே தெரியும் கடவுள் நமக்குப் பொதுவானவர் என்று. இந்தப் பூமி அவருக்குப் பெருமதிப்பிற்குரிய பொருளாகும். நமக்குப் பொதுவான தலைவிதியிலிருந்து வெள்ளையன் கூடத் தப்ப முடியாது.

*இப்படிக்கு*
*சீத்தல்*
*செவ்விந்தியத் தலைவர் –1855*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மனக்கூண்டு



அம்புலி



கவிதாவுக்கு நேரம் ஏழைத் தாண்டிவிட்டதும் கைகள் வேகம் எடுக்கத்தொடங்கின. இனிப் பிள்ளைக்குச் சோறுதீத்தி, முட்டை பொரித்து, சரவணனுக்குச் சாப்பாடு அடுக்குப் பண்ணி, மதியச் சமையலுக்காய் மாமிக்கு தேங்காய் துருவி வைத்து, மேல் கழுவி வெளிக்கிட்டு, சேலை உடுத்தி, சிலநேரம் சாப்பிட்டு அல்லது தேநீரை மட்டும் குடித்துவிட்டு, பாடசாலைக்குரிய ஆயத்தங்களோடு சைக்கிளேறி வெளிக்கிட்டு, அழும் பிள்ளைக்குச் சாக்குப்போக்குக் காட்டிவிட்டுச் செல்ல எப்பிடியும் சிவப்புக் கோட்டுக்குக் கீழே நேரம் வந்துவிடும். அதிபரின் கண்டிப்பும் கட்டுப்பாடும் உறுத்தும். நேற்றிரவு பாடம் ஆயத்தம் செய்ய நேரம் பன்னிரெண்டு மணியாகியது இன்றைய காலைப்பொழுதில் வேலைகாட்டுகின்றது. தாமதமாகி எழும்பிய ஒரு மணித்தியாலம் அதுகும் ஐந்தரை மணி காலை வேலைகளுக்குப் போதியதாக இல்லை.

என்ன செய்யிறது. மதியச்சாப்பாட்டை மாமிசெய்து, பிள்ளையையும் பார்த்துக்கொள்வதில் காலை, மாலை அலுவல்களை இவளே செய்தாக வேண்டும். கூடமாட ஒத்தாசை செய்வதற்கு அவ முனைந்தாலும் பிள்ளை மது குழப்படி செய்து அவாவை மினக்கடுத்தி விடும். இவ்வளவுக்குமிடையில் சரவணனுக்குரிய வேலைகளையும், அவனையும் ஒரு பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஆயத்தம் செய்வது போல கவிதாவே செய்யவும் வேண்டும். அவளுக்கு எரிச்சல்தான் வந்தது.

சரவணன் ஒரு மோட்டார் சைக்கிள் எடுத்தாலாவது கொஞ்சம் பயணம் இலகுவாகும். எல்லாத்தையும் விட அவனது ஒத்துழைப்பிருந்தாலேயே அரைவாசி வேலை குறைந்தது மாதிரித்தான். அவளது எண்ணங்களின் வேகத்தை விட நேரம் அதி வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

சரவணன் சாப்பிட்டு விட்டு வெளிக்கிட்ட பின் அரைமைல் அளவு தூரத்தில் இருக்கும் அலுவலகத்திற்கு அவள் இனி சைக்கிளில் போகவேண்டும்.

'கவிதா என்ர பாக்குக்குள்ள இருந்த 'பொக்சி' பேனையைக் கண்டனீரே காணயில்லை. உதை விட்டுட்டு ஒருக்காத் தேடித் தாருமன்.'

இருக்கும் வேலைகளுக்குள் இது வேற. வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு 'இப்ப தேடிப்பார்க்க நேரமில்லையப்பா. பின்னேரம் வந்து பாக்கிறன். என்ர பேனையைக் கொண்டு போங்கோவன்.' எடுத்துவந்து கொடுத்தாள்.

'உமக்கு ஒரே அலுப்பு. மறக்காமல் பின்னேரம்வந்து பாரும். நான் வாறன்.' டாட்டா காட்டிய பிள்ளைக்குக் கையசைத்துவிட்டு சைக்கிளில் ஏறிப்பறந்துவிட்டான். இனிக் கவிதாவின் முறை.

'மாமி பின்னேரம் வரேக்க நேற்று நீங்கள் கேட்ட மருந்தைக் கட்டாயம் வாங்கிவாறன்.' நேற்று வாங்க மறந்துவிட்ட மாமியின் மருந்தை மனதில் வரவழைத்துக்கொண்டாள். 'மதுக்குட்டி குழப்படி செய்யக்கூடாது. அப்பம்மாவைக் கரைச்சல்ப் படுத்தாமல் இருக்கவேணும். அம்மா வரேக்க கண்ரோஸ் வாங்கிக்கொண்டாறன் என்ன'

'நானும் நானும், கூட்டிப்போங்கோ' என்ற குழந்தையை, 'அம்மாக்கு தலைக்கு வைக்க பூ ஆஞ்சுதாங்கோ அச்சாப்பிள்ளை' அனுப்பி விட்டு, சைக்கிளில் ஏறினாள். ஒவ்வொரு நாளும் அடம்பிடிக்கும் ஒன்றரை வயதுக் குழந்தைக்குப் போக்குக் காட்டுவதே பெரும்பாடு. மனம் சலனப்பட்டது.

எல்லாம் இந்தக் காலையும் மாலையும் தான். இடையில் பெரும் பகலை பாடசாலை நேரம் விழுங்கிவிடும். அரக்கப்பரக்க வேலை செய்வதிலேயே காலை நேரம் போய்விடும். மாலை வந்தால் பிள்ளையைக் கவனிப்பது, உடுப்புத் தோய்ப்பது, இரவுச் சாப்பாடு செய்வது, பாடசாலை ஆயத்தம் என்று மலைபோல குவிந்து கிடக்கும் வேலைகளுக்கிடையில் அவள் ஒரு புழுவைப்போல நெளிந்தாள்.

'ஏன்தான் இந்தக் கலியாணத்தை இப்ப செய்து தொலைத்தார்களோ' இருபத்தேழு வயதான போதும் அன்றாட வாழ்வின் வேலைப்பழு அவள் தலையில் விழுத்திய சுமையால் இப்படி நினைத்துக்கொண்டாள்.

மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர், மூத்த பிள்ளையான அவளை அனுப்பி வைத்தாலேயே ஏனையோருக்கும் ஒருவாறு வழி அமைக்கும் வேலையில் ஈடுபடமுடியும். அத்துடன் அவளுக்கு வயது ஏற ஏற அவர்களுக்கு பயம் ஏறிக்கொண்டிருந்தது. எல்லாத்துக்கும் மத்தியில் வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பு, ஆவல் அவளுக்கும்தான் இருந்தது.

சரவணனும் அப்படியொன்றும் கெட்ட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பழக்கங்களோ, கூடாத குணங்களோ இல்லாதவன்தான். சீதனமும் கட்டாயம் இவ்வளவுதான் தரவேணுமெண்டு வற்புறுத்தவும் இல்லை. இடம்பெயர்ந்த அவர்களின் குடும்பநிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் தருவதை ஏற்றுக்கொண்டுதான் திருமணம் செய்தார்கள். அதற்காக அவளின் பெற்றார் அவளைச் சும்மா அனுப்பி வைக்கவில்லை. நகை, நட்டு, கலியாணச் செலவு என்று அவர்களின் தலையிலும் சரியான சுமை. கவிதாவும் அவ்வளவு பெரிய உலக அழகியில்லாவிட்டாலும், பார்த்தவுடன் பிடித்துப்போகும் வசீகரம், பேச்சு, குணம், நடை என்று மாமியாருக்கும் பிடித்த மருமகளானாள். இவ்வளவும் சரிவரும் போது மாப்பிள்ளையுடன் கதைக்கப் போறன் எண்டோ தனது தனிப்பட்ட உணர்வுகள், கொள்கைகள் பற்றிப் பேசப் போறன் எண்டோ அவளாலும் கூற முடியவில்லை. சொல்லப் போனால் அது ஒரு சிறப்பான கலியாணம்.

அவளுக்கு அவனைப் பற்றியும், அவனுக்கு அவளைப்பற்றியும், உணர்வுகளை முழுமையாக அறிந்து கொள்ளவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாமல் வாழ்க்கைச் சக்கரம் உருளத் தொடங்கி விட்டது. அவனும் அவளும் கணவன் மனைவியாகி, பிள்ளையொன்றுக்குப் பெற்றோராகிய பின்பு வந்த வாழ்க்கையில்தான் எவ்வளவு மாற்றங்கள், ஏற்றங்கள்.

அவளும் தான் வேலைக்குப் போகின்றாள். உழைக்கின்றாள். பிள்ளையைப் பார்க்கவேணும், சமையலைக் கவனிக்கவேணும், உடுப்புத் தோய்ப்பது, வீட்டுச் சாமான்கள் வாங்குவது என்று எத்தனை வேலைகளை இந்த இரண்டு கைகளால் மட்டும் செய்ய முடியும்.



சரவணனுக்கு ஏன் தான் இவையெல்லாம் சொல்லாமல் புரிவதில்லை. இந்தக் காலத்தில் இருவர் உழைத்தால்த்தான் வாழ்க்கைப் படகு ஓடும் எனத் தெரிந்தவனுக்கு வீட்டு வேலைகளிலும் இருவர் பங்கெடுத்தால்த்தான் சுலபமென்பதும், கடமை என்பதும் ஏன் புரியவில்லையோ. காலையில் பிள்ளையுடன் மல்லுக்கட்டுவதே பெரும் பிரச்சினை. உண்மையில் அதனுடன் மினக்கட்டு அதனுடைய வேலைகளைக் கவனிக்கும் வயதுதான் அதற்கு. இதைத் தந்தையான சரவணன் செய்யலாம்தானே என்று அவள் அவனிடம் அவ்வேலையை ஒப்படைக்க முடியாது. அவனது காலைப்பத்திரிகை வாசிப்பும், வேறு அலுவல்களும் இருக்கும். அவன் தனது உடுப்புக்களையாவது தோய்த்து அயன் பண்ணினால் அவளுக்கு ஓரளவாவது சுமை குறையும். இதை விட அவனது வேலைகளுக்கு அவள் எடுபிடி செய்ய வேணும். எல்லாம் பிள்ளையொன்று பிறக்குமுன்பு பிரச்சினையில்லாமல்தான் இருந்தது. அவளும் அதை ஒரு பொருட்டாக கருதவுமில்லை. இப்பொழுது எல்லாம் அவள் தலையில் என்று 'இதைச் செய், அதைச் செய் என்று சொல்லித்தான் புரியவைக்க வேணுமென்றால், படித்தென்ன, பட்டம் வாங்கியென்ன, உத்தியோகம் பார்த்தென்ன. ஒன்றுமே பிரயோசனமில்லையே' என்று எண்ணத் தோன்றும் அவளுக்கு.

பாக்கியம் மாமி ஒன்றும் கடுமையான ஆளில்லை. அதே பெரிய ஆறுதல் அவளுக்கு. வீட்டு வேலையிலும் குழந்தையை வளர்ப்பதிலும் அவ வழங்கும் ஒத்துழைப்பே பெரிதுதான். ஆனால் சீப்பாக வந்து மருமகள் என்ற நினைப்பும், ஒரேயொரு மகனான சரவணனை விட்டுக்கொடுக்காத மனப்போக்கும் அவளை ஒன்றும் பேசவிடாது தடுத்து விடும். தன்னுடைய காலத்தில்தான் வேலையொன்றுக்கும் போகாமல் வீட்டிலேயே இருந்து. கணவனுக்கும், மகனுக்கும் கலியாணம் செய்து கனடாவில் வாழும் மகளுக்கும் பணிவிடை செய்தே முழுக்காலமும் ஓடியதாகவும், அவள் வேலைக்குப் போவதே ஒரு சுதந்திரமான நிலை. வீட்டு வேலைகளில் முழுமையான பங்கு இல்லைத்தானே என்று அடிக்கடி கூறிக்கொள்ளுவா. அந்தக் குறைவான நேரத்துக்கிடையில் அவள் படும்பாடு அப்பப்பா மாமிக்கெங்கே புரியப்போகிறது.

'வேலையை விட்டுவிட்டு பேசாமல் வீட்டில் நின்றால் என்ன' என்ற நினைப்பு அடிக்கடி வரும். நல்லவேளை இப்ப ஒரு பிள்ளைதான். இன்னும் ஒன்றிரண்டைப் பெற்றால், கூடப்போகும் வேலைச் சுமைகளை நினைக்கவே அவளுக்குப் பிள்ளை பெறும் பிரசவ வலி இலகுவாகத் தோன்றுமளவுக்கு வாழ்க்கைச் சுமை அதிக வலியைக் கொடுத்தது.

தன்னோடு படிப்பிக்கும் சுபா ரீச்சருக்கு வீட்டில் அம்மா, அப்பா தங்கைகள் என்று ஒத்தாசையாகவிருப்பதும், வயதுபோன பரமேசு ரீச்சரை அவவின் பென்ஷன் எடுத்த கணவன் வந்து இறக்கி, ஏற்றிப் போவது, மதியச் சாப்பாடுகொண்டு வருவது என்று ஒத்தாசையாக இருப்பதைப் பார்க்க அவளுக்குப் பொறாமையாக இருக்கும்.

சரவணன் மகிழ்வோடு அவளுடன் இருக்கும் கணப்பொழுதுகளில், வேலைத் தளப்பகிடிகளை விடுகின்ற வேளைகளிலாவது இதுபற்றி அவனோடு பேசிவிட வேண்டும் என்றுதான் அவளும் நினைப்பதுண்டு. ஆனாலும் இவையெல்லாம் அவனுக்கு விளங்காதவைகளா? தூங்குபவனை எழுப்பலாம். தூங்குவது போல கிடப்பவனை எப்படி எழுப்புவது? இவ்வளவும் கூறிய பின்பு அவன் மீண்டும் தன்னுடைய சுபாவப்படி மாலை வந்த பின்பு ரீயைக் குடித்துவிட்டு புட்போல், கிறிக்கட் மச் என்று சென்று விட தான் கூறியதெதுவுமே புறக்குடத்தில் வார்த்தது போலாகிவிடுமோ என்ற பயம். அதன் பின்பு வரும் ஆத்திரம், வெறுப்பு, மனவேதனை இவைகளை எதிர்கொள்ள விரும்பாமலுமே அவள் பேசாதிருந்தாள்.

இந்தக் குழந்தை 'மது' வுடன் கொஞ்சி விளையாடுவதை விடவா கிறிக்கட் மச் இனிக்கும். அவளும்தான் பாடசாலைக் காலத்தில் விளையாட்டில் எவ்வளவு கெட்டிக்காறி. நெற்போல் ரீமுக்கு லீடராய் இருந்தது, கோட்ட, மாவட்ட போட்டிகளில் விளையாட்டுகளில் 'சம்பியன்' கப் வாங்கியது என்று தனது கடந்த காலப் பெருமைகளை யாரிடம் கூறுவது. அந்த மகிழ்வான காலத்தை மனதில் மட்டும் நினைத்தவாறே



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இல்லறப்படகில் அதற்கும் அவளுக்கும் ஒரு சம்மந்தமுமில்லாதது போல் வேலைகளில் மூழ்கிப் போவது, இவற்றை எண்ணிப் பார்க்கும்போது கவிதாவின் மனது நிலையின்றித் தவித்தது. இப்படித்தானோ திருமணமான பெண்களின் வாழ்க்கைப் போராட்டம் கடினமானது. திருமணமாகுமுன் சிட்டாகப் பறந்து திரிந்தபோது எதுவுமே கண்ணுக்குத் தெரியவில்லையே. படிப்பு, வேலை, போராட்டக் காலம், அதற்குள்ளாலான கடின வாழ்க்கை, இடப்பெயர்வு எதுவுமே மனதில் இவ்வளவு அழுத்தத்தைக் கொடுத்ததாக தெரியவில்லையே. உடலுக்குத் தெம்பாக எதைக் குடித்தாலும், சாப்பிட்டாலும், மனதுக்குத் தெம்பாக யாராவது ஆறுதல் வார்த்தை கூற வரமாட்டார்களா? இல்லை அவளது பிரச்சினைக்குத் தீர்வு சொல்லி சுமுகமாக்க வரமாட்டார்களா என்ற ஆதங்கமே அவளுக்கு மேலோங்கியிருந்தது.

நெடுக நெடுக இதைப்பற்றி யோசித்து மனங்குமுறி அழுத்தத்திற்குள்ளாவதை விட பிரச்சினையை போட்டுடைத்தாலென்ன? எதற்கும் மாலை வரட்டும். சரவணனுடன் இன்று எப்படியாவது கதைத்துவிட வேண்டும். சமைப்பது, உடுப்புத் தோய்ப்பது, சாப்பிடுவது எல்லாம் பிறகு இருக்கட்டும். எப்படியாவது இன்று அவனது கடமையை அவனுக்கு உணர வைக்கத்தான் வேணும். மனதில் புதுத் தெம்பு பாய்வது போலிருந்தது அவளுக்கு.

பாடசாலை கேற்றடியில் வந்து இறங்கியபோது இன்னும் மணியடிக்கவில்லையென்பதே ஆறுதலாயிருந்தது. நல்லவேளை இன்றைக்கு 'றெட்' மார்க் இல்லை. மனம் மகிழ்ச்சியாயிருந்தது.

அசெம்பிளி முடிந்து வகுப்பறைக்குள் முதல் பாடத்திற்காக உள்நுழைந்தபோது 'குட்மோனிங் ரீச்சர்' சொல்லி அமர்ந்த மாணவிகளில் பின்பு சுமதி கொப்பியைக் காட்ட அவளருகில் வந்தபோது,

'ரீச்சர் இண்டைக்கு இந்த 'செக்ஷன்' நல்லா விளங்கீட்டுது' என்று சொன்னபோது உண்மையில் அவளது உணர்வுகளை அவளுக்கே வார்த்தைகளில் சொல்லமுடியாமலிருந்தது.

* * *

'இந்தாங்கோ ரீ....'

கவிதா கொடுத்த தேநீரை உறிஞ்சியபடியே சுடரொளி பேப்பரில் கண்களை மேயவிட்டான் சரவணன்.

'இங்கேயப்பா நான் இரவைக்கு



புட்டவிக்கவேணும். மதுக்குட்டியின்ர உடுப்புக்கள் கனக்கத் தோய்க்கக்கிடக்குது. நீங்கள் மேல் கழுவேக்குள்ள அதையும் ஒருக்கா அலம்பிப் போட்டுவிடுங்கோ.'

அவனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. பதில் கூற வேண்டுமென்ற அக்கறை அவனிடம் இருந்ததாகவும் தெரியவில்லை. அவள் புட்டவித்து பிள்ளைக்குத் தீத்தி எல்லோருக்கும் பரிமாறி, தான் சாப்பிட்டு, வீட்டு வேலைகள் அனைத்தும் முடித்து பாட ஆயத்தம் செய்து முடிக்க மணி இரவு பதினொன்றாகிவிட்டது. மதுவின் உடுப்புக்கள் தோய்க்காமல் அப்படியே கிடந்தது.

குழந்தை தலையணையை அணைத்தபடி தூங்கிப் போயிருந்தது. 'இஞ்சேருங்கோ இன்னும் புத்தகம் வாசித்து முடியேல்லையே உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்.'

'நீர் இன்னும் வேலை செய்து முடிக்கேல்லையே'

'எப்படி முடியிறது. நீங்கள் உங்கள் பாடு. மாமி மதுவைக் கவனிக்க வேணும். மிச்ச வேலையெல்லாம் நானே தனியச் செய்யோணும் எண்டா விடிஞ்சாலும் முடியாது தானே'

'அப்படியென்ன விடிய விடிய வேலை உமக்கு.'

'கேக்கிறீங்கள் செய்து பார்த்தாத்தானே விளங்கும். நான் கலியாணம் செய்து இங்க வந்த நாளிலிருந்து நீங்கள் ஒரு துரும்பையும் எடுத்துப் போட்டதை நான் காணேல்லை. குடும்பம் எண்டால் எங்கள் இரண்டு பேருக்குமே அதிலை பங்கிருக்கு. இரண்டுபேரும் வேலைக்குப் போறம். இரண்டு பேருமே வேலைகளைப் பகிர்ந்து செய்தாத்தானே நேரமும் காலமும் சரியாயிருக்கும்.'

'என்ன புதுசா பிரசங்கம் இண்டைக்கு'

'இது பிரசங்கமில்லை உங்களிட்டை மனம் திறந்துதான் கதைக்கிறன். கொஞ்சம் நீங்களும் யோசிச்சுப் பாருங்கோ.'

'ஓசியில வந்து போட்டு, என்ர வீட்டிலையே இருந்துகொண்டு, எனக்கு வேற புத்திசொல்ல வந்திட்டீர் என்ன? நான் எத்தினை மைல் சைக்கிள் ஓடி வேலைக்குப் போறனெண்டு உமக்குத் தெரியுமோ. இல்லையெண்டா உம்மட வீட்டுக்காரர் எனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் எண்டாலும் எடுத்துத் தந்தவையோ? முதலில் உம்மட ஆட்களிட்டை போய் கதைச்சு எனக்குரிய பங்கை தரச்சொல்லு?. அதுக்குப் பிறகு மிச்சப் பிரச்சினையை மனம் திறந்து கதைக்கலாம்.'





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

த. வேழினி

# அனுபவப்பகிர்வு

காட்டுக்குயில்களின் மனதைக் கிறங்க வைக்கும் மெல்லிய இசை காற்றில் கலந்து இதமாக ஒலிக்கையில், குரங்குக் குட்டிகளை வயிற்றில் சுமந்தபடி தாய்க்குரங்குகள் மரம் விட்டு மரம் தாவும்போது கிளைகள் முறிவடைந்து எழுப்பும் சடசடவென்ற சப்தத்தினையும் தாங்கி மழைகாலக்குளிர்காற்று அம் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவேளை அடர்த்தியாக உயர்ந்து வளர்ந்திருந்த காட்டுமரங்களினூடே வெண்ணிறப் பஞ்சுகளைத் தூவி விட்டது போன்று ஆங்காங்கே பனிமூட்டம்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவைகளைத் தாங்கியவாறு, அது ஒரு பிரதான மருத்துவத் தளம் ஆண்களுக்கும், பெண்களுக்குமானதாக இரு குழுவினருமே தத்தமது நிலைகளை அமைத்து அங்கு அந்த யுத்த தளத்திற்குரிய மருத்துவப் பணிகளைச் செயலாற்றிக் கொண்டிருந்தனர். வெடிவைத்தகல், சிலோன் தியேட்டர் பகுதிகள் உள்ளடங்கலாக அங்கு காயமடைந்தோர், நோய் வாய்ப்பட்டோர் சிகிச்சை பெறவேண்டியோர் அனைவரும் இங்குதான் அனுப்பப்படுவர். நெடுங்கேணிப் பகுதிகளில் ஆங்காங்கே வாழும் மக்களினது அவசர நோய்களுக்கும் மருத்துவமனையாக இதுவே விளங்கியது.

அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்தவாறே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவது எங்கோ தொலைவில் கேட்கிறது. உறக்கம் விழிகளை விட்டு அகல இன்று எத்தனை போராளிகளோ யாரும் வீரச்சாவாக இருக்கக் கூடாது. உள்மனம் அந்த முகமறியா வீரர்களுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டது. போராட்ட வரலாற்றில் சாவுகளும் வடுக்களும் தவிர்க்க முடியாததொன்றாகி விட்டபோதிலும் கூடியவரை எதுவுமே நடக்கக்கூடாது என்றே எல்லோரும் எதிர்பார்ப்பது மனித இயல்பே.



மெல்லியதாய் ஒளிர்ந்த இலாந்தரின் வெளிச்சத்தை அதிகரித்தவாறே அவசரமாய் தேவைப்படும் மருந்துகள் தயார்நிலையில் உள்ளனவா என்று ஒருமுறை சரிபார்த்தபடியே அடுத்து வரும் நிமிட நகர்வுகளுக்காகக் காத்திருந்தாள் அவள். அந்த அவசர வேளையில் விழித்துக்கொண்டே நாய்களின் குரைப்புக்களினூடே தூரத்தே வாகனம் வரும் ஓசை துல்லியமாய்க் கேட்கிறது மனம் எண்ணி முடிக்கையில் வேகவேகமாய் மற்றவாகனமொன்று சறேலென 'பிறேக்' இட்டு நின்றது.

அவசர அவசரமாகக் காயமடைந்த போராளிகள் ஸ்ரெச்சரின் உதவியுடன் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டனர். வயிற்றில் காயமடைந்த ஓர் பெண் போராளி மிகத் துரிதமான நிலையில் உள்ளகக் குருதிப் பெருக்கு நிகழ்ந்து கொண்டிருக்க தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள். மிக அவசரமாக அப் போராளிக்குக் குருதி ஏற்றப்பட வேண்டும். அப்போது அங்கு, குருதி வங்கியில் இருக்கவில்லை. அவசர அவசரமாக நாளத்திரவங்களை உட்செலுத்தியவாறே குருதி சேகரிப்பதற்காக அப் போராளியின் குருதி இனங்காணப்பட்டது. அதை ஒத்த குருதிப் பிரிவைச் சேர்ந்த அப்பெண் மருத்துவப் போராளியிடமிருந்தும், அத் தளத்தில் நின்ற இன்னோர் ஆண் மருத்துவப் போராளியிடமிருந்தும் குருதி ஏற்றப்பட்டுக்கொண்டிருக்கையில் அவசரமாக மீள உயிர்க்கின்றாள். அவசர உயிர்காப்புச் சிகிச்சைகளுக்கு மத்தியிலும் அங்கு பெரும் போராட்டம் நிகழ்கிறது. எப்படியாயினும் அப்போராளியின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும், என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் மேலோங்க அனைவரும் இயந்திர கதியில் செயற்பட்டுக்கொண்டிருந்தனர்.

இவர்களையும் மீறி கடுமையான மூச்சுத்திணறலுக்குள்ளாகி 'தண்ணீர்' கேட்ட அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவராமல் போகவே உயிர்ப்பறவை உடற்கூட்டை விட்டுப் பறந்துகொண்டிருப்பது தெரிந்தது. அனைவர் முகங்களிலும் சோகம் பற்றிக்கொள்ள அவள் மெதுவாக மூச்சடங்கிப் போனாள். அவளின் வேதனையுடன் கூடிய அழுகுரல் மரணம் அனைவர் இதயத்தையும் பிசைய மற்றைய போராளிகளுக்குரிய சிகிச்சைகள் தொடர வேண்டுமென்பதால் மீண்டும் அவர்கள் தம் கடமைகளில் இறங்கினர். மரணித்த அவ்வேங்கையின் நினைவுடனேயே ஒருகணம் ஸ்தம்பித்த அந்த மருத்துவத்தளம் மீண்டும் உயிரூட்டப்படுகின்றது.

தொடர்ந்து ஏனைய காயமடைந்த போராளிகளுக்குமுரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்தள மருத்துவமனைகளுக்கு அனுப்பக் கூடியவாறும் அவர்கள் தயார்ப்படுத்தப்பட்டனர். அவர்களை அனுப்புவதற்குரிய வாகனம் புறப்பட்டுவிட்டதென்ற தகவல் வோக்கியில் வந்து சேரவும் வாகனமும் தனக்கேயுரிய உறுமலுடன் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. காயமடைந்தோர் அனைவரும் ஒவ்வொருவராக வாகனத்தில் ஏற்றப்பட்டனர்.

அனைவரையும் சுமந்தவாறு வாகனம் புறப்பட்டது. இராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் சதிகாரர்களால் பதுங்கி மேற்கொள்ளப்படும் கிளைமோர் அச்சுறுத்தல் அங்கு நிலவிய காலம் அது. ஒரு பிரச்சினையும் இல்லாமல் சென்ற வாகனம் திரும்பி வந்தபின்தான் அவர்கள் காப்பாற்றப்பட்டது உறுதிப்படுத்தப்படும். அதுவரையும் கனத்த நெஞ்சுடனேயே கழியும் பொழுதுகள் மிகக்கொடூரமானதாகவே இருக்கும்.

காயமடைந்தோரை அனுப்பிவிட்டு நித்திரைக்குச் சென்றபோதும் உறக்கம் கண்களைத் தழுவ மறுத்தது. தன் கண்முன்னால் ஒவ்வொரு நொடியும் துடிதுடித்து வீரச்சாவடைந்த அந்தப் போராளியின் பரிதாபமுகம் நினைவைவிட்டு அகல மறுத்தது.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லைத்தானே. பொழுது வேகமாகப் புலர்ந்தது. நண்பகல் அளவில் காயமடைந்தோரை ஏற்றிச் சென்ற வாகனம் திரும்பியது. நிம்மதிப் பெருமூச்சை உதிர்த்தபடியே அன்று சிகிச்சைக்காக வந்தவர்களை ஒவ்வொருவராகப் பார்வையிட்டுக்கொண்டிருந்தாள். முதல்நாள் உறக்கமின்மையும், உடல் அசதியும் சேர்ந்து கொள்ளவே தூக்கம் கண்களைச் செருகியது. ஒருவாறு வந்தவர்களுக்குரிய மருந்துகளை வழங்கிவிட்டு தன் இருப்பிடம் சேர்ந்தாள்.

'அன்று மாலை முன்னணியில் காவல் நிலைகளுக்கு உணவு வழங்கச் சென்ற ரக்ரருக்கு அடி விழுந்திட்டுதாம் மிக அவசரமாக தொலைத் தொடர்புக் கருவி சுமந்து வந்த செய்தி அவளை உலுக்கியது. இராணுவ அழுத்தங்கள் அதிகமாக இருந்த அப் பகுதியில் இத்தகைய சம்பவங்கள் எதிர்பார்க்கப்பட்ட தொன்றாகவே இருந்ததாய் அடுத்துவரும் பொழுதுகளுக்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டவளாகக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காத்திருந்தாள்.

சில மணிநேரங்களின் பின் அத் தாக்குதலில் காயமடைந்த பதினொரு பேரை சுமந்தவாறே வாகனமொன்று நிறுத்தப்பட்டது. இடதுபக்க நெஞ்சுப் பகுதியில் காயமடைந்த ரக்ரர் சாரதி சுவாசிப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் இறக்கப்பட்டார். இன்னுமொருவர் கழுத்து முள்ளந்தண்டிற்கண்மையில் காயமடைந்து இருந்தார். சிறிது அசைந்தாலும் கூட கழுத்தின் கீழ் உணர்விழந்து போகும் நிலை ஏற்பட்டுவிடும் அபாயம் கூடவே காத்திருந்தது. ஒருவாறு அவரை இறக்கி அந்த மருத்துவத் தளத்தில் அவதானமாகப் படுக்கவிடப்பட்டு அவருக்குரிய முதலுதவிகள் வழங்கப்பட்டது.

ஏனையவர்களின் காயங்கள் பெரியளவில் பிரச்சினைக்குரியதாக இருக்கவில்லை. அனைவருக்குமுரிய சிகிச்சைகள் அங்கு நின்ற மருத்துவப் போராளிகளினால் மேற்கொள்ளப்பட்டது. நெஞ்சில் காயமடைந்த அவ் ரக்ரர் சாரதிக்கு புடைக்குழியினுள் காயமேற்பட்டதனால் அங்கு ஏற்பட்ட குருதிப் பெருக்கினால் நுரையீரல் அழுத்தப்பட அவர் மூச்சு விடுவதற்கு மிகுந்த சிரமப்பட்டார். உடனடியாக I.C.D tube போடப்பட்டு புடைக்குழியில் தேங்கிய குருதி வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்க இழந்த குருதியை ஈடுசெய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்பகுதியில் அமைக்கப்பட்ட சமையற்கூடப் பொறுப்பாக இருந்த போராளி ஒருவர் தான் குருதி வழங்க வேண்டுமெனப் பிடிவாதமாக நின்றார். இருவரது குருதிப் பிரிவுகளும் ஒத்த குருதிகளாக இருந்ததனால் அப்போராளியிலேயே குருதி எடுப்பதென முடிவானது. மிகுந்த மகிழ்ச்சியுடன் குருதி வழங்குவதற்கு தன்னைத் தயார்ப்படுத்தியவனாக 'அக்கா ஒன்றுக்கும் யோசிக்காமல் இரத்தத்தை எடுங்கோ' கலகலவென உற்சாகத்துடன் சிறிதும் பதட்டமின்றிக் காணப்பட்ட அப்போராளியின் மன உணர்வுகளை தன்னால் ஒருயிர் காப்பாற்றப்படவேண்டும் என்ற அவனின் துடிப்பை வியப்புடன் நோக்கியவாறே குருதியைச் சேகரிக்கத் தொடங்கினாள் அவள்.

இப்போது அப் போராளியின் குருதி அச்சாரதியின் உடலில் ஏற்றப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், தான் காப்பாற்றப்படுவேன் என்ற எண்ணம் வலுவடைய அச் சாரதியின் முகத்தில் ஓர் பிரகாசம் தோன்றியது. கழுத்தில் முள்ளந்தண்டிற் கண்மையில் காயமடைந்த மற்றைய போராளிக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு ஆளுயர பலகையில் வைத்து அசையாத வகையில் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டார். ஏனையவர்களின் காயங்களும் கட்டப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில் அனைவரையும் ஏற்றிக்கொண்டு வாகனம் புறப்படத் தயாரானது. அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க ஓர் மருத்துவப் போராளியும் உடன் அனுப்பப்பட்டார். வாகனம் அனைவரையும் சுமந்துகொண்டு புறப்பட்டது. இவ்வகையில் அன்றைய பணியைத் திருப்திகரமாக முடித்து அடுத்த கட்ட சிகிச்சைகளை வழங்கத் தயாரான நிலையில் அம் மருத்துவத்தளம் மீண்டும் தயார்ப்படுத்தப்படுகின்றது. காயமடைந்த போராளிகளுக்குச் சிகிச்சையளிப்பது மட்டுமின்றி அவர்களின் பகுதிக்குட்பட்ட முன்னணிக் காவல் நிலைகளில் கடமையிலுள்ள வீரர்களிற்குச் சுகாதாரம் தொடர்பான கருத்துக்களையும் அவர்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அறிவுறுத்தல்களையும் வழங்கவேண்டிய கடமையும் இவர்களுக்குரியதே. சில நாட்களாக காயமடைந்த போராளிகள் யாரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை. நோயால் பீடிக்கப்பட்டு வருவோரின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்ததனால், உடன் நின்ற ஓர் போராளியுடன், யுத்தத்தின் காயங்களைத் தன்னுள்ளும் தாங்கிக் கொண்டும் குழியும் அதனுள் மழை நீரைத் தாங்கி நின்ற அப்பாதைகளினூடே அவர்களின் சைக்கிள் பயணம் ஆரம்பமாகியது.

எவ்வளவுதான் வேமாக பெரலை அழுத்தி மிதித்தாலும் அது நத்தை வேகத்திலேயே நகர்வது போலிருந்தது. ஒருவாறு அப்பகுதியில் தனக்கென ஓரிடம் பிடித்துக் கரும் பூதம் போல் காட்சியளித்த ஒதியமலையைக் கடந்துகொண்டிருந்தனர். நகர அடப்பிடித்த சைக்கிளை உருட்டியும், தள்ளியும், ஓடியும் சிலோன் தியேட்டர் உப மருத்துவ நிலையை அடைந்தனர். அவர்களுக்குரிய மருத்துவப் பொருட்களைக் கொடுத்துவிட்டு அங்கிருந்த காவல்நிலைகளை நோக்கி நகர்ந்தனர். ஒவ்வொரு அரண்களையும் அவதானித்தவாறே அவர்களுடன் உரையாடி தமது கருத்துக்களையும் பரிமாறிக்கொண்டு, மீண்டும் உபமருத்துவ நிலையை வந்தடைந்தவேளை சூரியன் தன் கதிர்களை அள்ளி வீசியவாறே செக்கச் செவேலெனச் சிவந்து கீழ்வானை அண்மித்துக்கொண்டிருந்தான்.

பொழுது சாயும் நேரம் அவர்கள் தமது இருப்பிடம் திரும்பத் தொடங்கினர். சில மணித்தியாலங்கள் கழிய நெடுங்கேணி நெடுஞ்சாலையை வந்தடைந்தனர். சந்தியில் கூடி நின்ற மக்கள் தத்தமக்குள் ஏதோ பேசிக்கொண்டிருப்பது இவர்களுக்குப் புரிந்தது அனைவர் முகங்களிலும் கலவரம் மிகுந்து காணப்பட்டது. மிக வேகமாக தமது மருத்துவத் தளத்தை வந்தடைந்தனர். அங்கு நின்ற ஏனைய போராளிகளால் வெடிவைத்த கல்பகுதியில் நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 2 போராளிகள் வீரச்சாவு எனவும் வித்துடல் வாகனத்தில் வந்துகொண்டிருப்பதாகவும் தகவல் கூறப்பட்டது.

வந்து நின்ற வாகனத்திலிருந்து அந்த வீரர்களின் உயிரற்ற உடல்கள் இறக்கப்பட்டன. அவ்விடத்திற்கு அவசரமாக விரைந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தன் கண்களையே நம்பமாட்டாதவளாக அவ்விருமுகங்களையும் உற்றுப் பார்த்தாள். ஒரு கிழமைக்கு முன் நடந்த அச்சம்பவம் அவள் நினைவில் நிழலாடியது. 'அக்கா ஏன் யோசிக்கிறியள் கெதியாய் இரத்தத்தை எடுங்கோ' என்று சிரித்தவாறு குருதியை வழங்கிய அவன் எந்தவகைக் காயத்துக்குத் தன் குருதியை வழங்கத் துடிப்புடன் நின்றானோ இன்று அதே வகைக் காயத்தினை நெஞ்சிலே தாங்கியவனாக தன் குருதியில் ஒரு பகுதியில் அல்ல, தன் உயிரையும், உடலையுமே இம் மண்ணிற்காகக் கொடுத்த பெருமிதத்தில் அமைதியாய் தூங்கிக் கொண்டிருந்தான். இனம்புரியாத வேதனை மனதை அழுத்த வீரச்சாவடைந்தோர் விபரப் பதிவேட்டில் அவன் கையில் கட்டப்பட்டிருந்த அட்டையில் எழுதப்பட்டிருந்த பெயரை இளங்கதிர் என அவள் மனம் உச்சரித்துக்கொண்டது. அனைத்து விபரங்களும் பதிவு செய்யப்பட்டபின் வித்துடல் சேரும் இடத்திற்கு அனுப்பப்பட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட கிளைமோர்த் தாக்குதல்களால் ரக்ரர் சாரதிகள் காயமடைந்துபோக, அன்றைய தினம் காவல் நிலையிலுள்ள போராளிகளுக்கு உணவு கொண்டுசெல்ல யாரும் இல்லை. எப்படியும் உணவைக் கொடுத்தே ஆகவேண்டும். சமையல் கூடப் பார்வையில் இன்னுமொருவரை அமர்த்தி விட்டு, உதவியாக இன்னுமொருவரை அழைத்துக்கொண்டு தானே ரக்ரரை ஓட்டிச் சென்ற வேளை எதிரியின் கழுகுக் கண்களுக்கு இருவரும் இரையாகிப் போயினர்.

எம் ஈழமண்ணில் இது போன்ற எத்தனை இளங்கதிர்களை உரமாக்கினோம். எதற்காக? என்றோ ஒருநாள் இராணுவ அழுத்தங்கள் தகர்த்தெறியப்படும். போர்ப் பறவைகள் எம் வானில் உலா வருவதும், பச்சை உடைகளும், வீதித் தடைகளும் அகலும்வரை இதுபோன்ற சாவுகளும், வேதனைகளும் தவிர்க்க முடியாததே. அதுவரை எந்த இரவுகளெனினும், விடியலெனிலும் அந்த மருத்துவத்தளங்களுக்கும் ஓய்வேது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







# கடற்கரும்புலி கப்டன் இன்னிசை

**ஈழவாணி**



நிமிர்ந்த நடையும் மிடுக்கான பார்வையும், சுறுசுறுப்பும் எதையாவது சாதிக்க வேண்டுமென்ற துடிப்பும் கொண்டவள்தான் இன்னிசை.
கடலிலே நித்தம் வந்து தொல்லைகொடுக்கும் கடற்படையின் வெறியாட்டங்களும், தொழிலில் பறிபோனவர்களும், கணவனை இழந்த விதவைகளும், மகனை இழந்த தாயும் என சோகப் பதிவுகளைத் தாங்கிய நெய்தல் பிரதேசம் தான் ஆழியவளை கிராமம்.
இக்கிராமத்தில் தோன்றி போராட்டப்பாதையில் 92இன் நடுப்பகுதியின் கடற்புலிகள் மகளிர் அணியின் இரண்டாவது பயிற்சிப் பாசறையில் இன்னிசை வேகமுடனும் வீரத்துடனும், விவேகத்துடனும் பயிற்சிகளை எடுக்கலானார்.
92இன் கடைசிப்பகுதியில் இருந்து மருத்துவப் பிரிவின் கற்கைநெறியில் ஈடுபட்டாள். கடற்சமரில் ஈடுபடவேண்டும். கடற்கலங்களை மூழ்கடிக்க வேண்டும் என இருந்தவளிற்கு மருத்துவம் கற்றுக்கொண்டே கிடைத்த பொழுதுகளில், நீச்சல் பயிற்சியையும் பழகி தலைவரிடம் நீச்சல் பட்டியையும், பரிசாகப் பெற்றுக்கொண்டாள். பின்பு மருத்துவக் கல்வியையும் முடித்தும் திறமையாகக் கல்வியினை மேற்கொண்டவர்களிற்கு தலைவர் அவர்கள் மருத்துவப்பட்டியைப் பாராட்டி வழங்கியபோதும் அதையும் பெற்றுக்கொண்டாள்.
இன்னிசை தனது இலட்சியத்தில் உறுதியாக இருப்பதை அவளின் செயற்பாடுகள் வெளிக்காட்டியது.
கடற்தாக்குதல் அணியின் மருத்துவப் போராளியாகச் சென்றவேளை அங்கே தானும் கடற்சேனைப் போராளிகளில் ஒருத்தி என்பதை உப்புக்காற்றும், உறைபனியும் உறக்கமற்ற இரவுகளும், மோதியெழும் உயரலையில் சுழன்றடிக்கும் புயற்காற்றும் இன்றும் கூறிநிற்க,
எவ்வேலைகளிலும் தானும் சேர்ந்து ஈடுபடும் இன்னிசை, தன்பணியின் ஓய்வு நேரங்களில் போராளிகளின் நோய்களைக் குணப்படுத்துவதிலும் நோய் வராமல் தடுப்பதிலுமே ஈடுபடுவாள்.
நட்போடும், பண்போடும் தன் இலட்சிய உறுதியுடன் பயிற்சிகளில் படகு ஓட்டுநர் ஆகவும் தொலைத்தொடர்பு சாதனம் இயக்குபவளாகவும். பல நிலைகளும் தெரியும் ஆர்வமுள்ள மருத்துவப் போராளியாகவே இருந்தாள். கடும் பயிற்சியிலும் கடலிலும், நித்தம் பணி தொடர்ந்தவளாகி ஆணுக்கு சமன் பலமென்றுரைக்கும் செயல் வடிவம் விட்டுக்கொடுக்காத வீரியம் கொண்டவளாகவும் எதிலும் சிறந்துவிளங்கினாள்.
குறுகிய காலத்தில் தன் இலட்சியப் பணியில் பயிற்சிகள் அனைத்தும் முடித்து தனது இலக்கு நோக்கிச் செல்வதற்கு தயாராகிக் கொண்டாள்.
இலக்கை நோக்கி எதிர்பார்த்துக்கொண்டிருந்தவளிற்கு இலக்கு நோக்கிய பயணம் 11.11.1996 காரைநகர் கடற்படைத்தளத்திற்கு அருகில் டோறாப்படகு மீதான தாக்குதலாக அமைய, விடிவிற்கான பயணிப்பில் காவியமானாள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மலர் உதிர்ந்தபோது

தீபா குமரேஷ்



கண்ணுக்கெட்டிய தூரம்வரை பூக்குவியல் பரந்த வெளியெங்கும் சிவப்பும், மஞ்சளும், ஊதாவுமாய்.. இலைகளேயற்றதுபோல்.... அண்டம் எங்கும் பரந்து வியாபித்து குவியலாய்ப் பூக்கள். ஆங்காங்கே சில வெள்ளைப்பூக்கள் சற்றே மேலுயர்ந்திருந்த பூக்காம்பில் நிமிர்வுடன் நின்றன. தனித்துத் தெரிந்தன. அவற்றில் ஒரு பூ பெரிதாய்.. வெள்ளையாய் சிரித்தபடி இன்னும் சற்றே மேலுயர்ந்து அங்குமிங்கும் அசைந்தது. இதழ்களின் படபடப்பில் ஒரு பரபரப்புத் தெரிந்தது. ஏதோ சேதி சொல்வது போல் தோன்றியது.

வெண்பூக்களிடையே சிறு பரபரப்பு. படபடத்து அசைந்தன. ‘பூமி வறண்டு கிடக்கிறது. பாருங்கள்! வயது போன அந்த வெண்தாடித்தாத்தா வாடிக்கிடப்பதை. நேற்றுத்தான் முளைவிட்ட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இளந்தளிர்களைப் பாருங்கள்! பசுமை மறுக்கப்பட்டு மறைக்கப்பட்டு வதங்குவதை.. அதோ ஓரத்தில் கல்லிலும் முள்ளிலும் கூடத் துளிர்க்கும் கொடூர முள்மரங்களைப் பாருங்கள்... மெல்ல மெல்ல அவை பரவிப்பரவி கிளைவிட்டு எம்நிலத்தை ஆக்கிரமிப்பதை... பசுமையேயற்று முள்தாங்கி வந்து எம் பிஞ்சுகளைக் குத்துவதைப் பாருங்கள்.

நேற்று மாலை எங்கிருந்தோ அவை வந்தனவே.. படைபடையாய்... கறுப்பாய்... மண்ணிறமாய்.. சிவப்பாய்... அடிவானிலிருந்தெழும்பி வருவது போல் வந்தனவே. இளம்பூவும் பருவமலரும் காயும் கூடமிச்சமின்றி மேலிறங்கி கொடூரக் கொடுக்குகளை இறக்கி வேதனையும் வலியும் தந்து இளம்பூவைக் கருக்கி, பருவமலரில் கலப்படம் செய்து காய்களில் சாறுறிஞ்சி சக்கையாக்கி.. சென்றனவே.

இன்றும் அவை வருமே! எம்மிளம் பூக்களை அழிப்பதும், புதிதாய்ப் பூப்பவற்றை உருமாறி, நிறம்மாறிக் குணம்மாறிப் பூக்கவைப்பதும், வீரியமற்ற விதைகளைவிட்டுச் செல்வதுமே நோக்கமாய்.. அவை கொடுக்குகளால் விஷமேற்றி குறிகளிலே தமைப்பதித்து கால்களினால் காய்களை விறாண்டித்தள்ளிச் செல்லுமே...

இன்றே நாம் ஏதாவது செய்யவேண்டும். பெருந்திரளாய் வருமவற்றை விரட்டவேண்டும். விஷமும் கொடுக்குகளும் விறாண்டும் விரல்களுமற்ற மென்மையான மேன்மையான உணர்வுகளுடைய மக்களாகிய உங்களின் மைந்தன் நான் வழிசெய்வேன்' என வெண்பூவின் ஆர்ப்பரித்த குரலில் அடங்கி நிசப்தமாய் உணர்வின் எழுச்சிகளோடு விடைத்து நின்றன பூக்கள்.

'நான் சொல்வேன், சுட்டெரிக்கும் வெப்ப அரக்கனை, வெறிகொண்டு பறக்கும்பேய்களை, என் வேரின் அடியே இருந்தெனை உழுத்துவிழ அரிக்கும் முதுகெலும்பில்லாப் புழுக்களை வெல்ல நான் வழிசொல்வேன். களை கொல்லிகொண்டு களையழித்து, பீடைகொல்லி கொண்டு பீடைகளைக் கொன்றழித்து அமைதியும் நிம்மதியும் நிலவும்வரை எனது வேர்கள் தமது பணிநிறுத்திப் போராடும்' என்று சூழுரைத்து நின்றது வெண்பூ.

சிறுபூக்களும் இளந்துளிர்களும் ஆரவாரமிட்டன. கோஷம் போட்டன. தளிர்க்கரங்களை உயர்த்தி 'வெல்வோம் உயர்வோம்' என சூளுரைத்தன. ஏக்கக் கண்களில் கனவு தேக்கி முதிர்ந்த பூக்கள் நிமிர்ந்தன.

பரந்த வெளியெங்கும் அண்டமெங்கும் ஓராயிரம் பூக்களின் முழக்கம் அதிர்வாய் பரவியது.

ஒருநாள்.. இரு நாள் எனத்தொடர்ந்த நாட்களில் பூ மகனின் கண்களில் நம்பிக்கை, தெளிவு, சந்தோஷம், இதழ்களும் பூவடியும் காம்பும் இலைகளும் வறண்டன... சோர்ந்தன... வாசமிழந்தன.. எனினும் வேர்கள் இன்னும் உறுதியாய்....



மூன்று... நான்கு என நாள்மலர்கள் உதிர்த்தன. பச்சை இலைகளில் வெண்மைவரிகள்.. சோர்வு, தளர்வு, மயக்கம்... எனினும் ஆழ்மன உணர்வுகளின் ஒருமித்த கட்டளை.. வேரே! தனித்து நில்! எதிர்த்து நில்! ஒரு துளி நீரும் உன் கணுக்களை அடையவிடாதே!

வானமகள் இரக்கம் கொண்டாள். கருணை பிறந்தது. கண்ணீருடன் கருத்தரித்தாள். கார்முகிலானாள். தூயமழை பொழிந்து பூமகனவன் தாகம் தணிக்க ஏங்கி நின்றாள். சுட்டெரிக்கும் வெப்ப அரக்கன்மேல் சீறி நின்றாள். 'வெண்மணல் தூவிய அம்மண்ணிலே அகமெல்லாம் கொண்ட வெண்மையினால் பூமகனவன் புறத்தே வெளுப்பது தெரியாத அரக்கனே! உன்வெப்பம் தணி' என இடி இடித்தாள். 'வாடிநிற்கும் அப்பூவின் வதனம் உயிர்ப்புக் கொள்ள நீ தள்ளிப்போ' என முழங்கினாள்.

பூமகனின் வதனத்தில் புன்சிரிப்பு 'போதும் உன்னிரக்கம், நான் வேண்டுவது இரக்கமல்ல. உறுதி... மனந்தளராமை.... இவற்றையளிக்க உன்னால் முடிந்தால் சேர்ந்து நில்... இல்லையேல் தள்ளிப்போ.. எங்கள் உள்ளங்கள் மென்மையானவைதான். ஆனால் உணர்வும் உணர்வால் ஆழப்படும் இலட்சியமும் உரமிக்கவை. அதை அழிக்க வரும் எவரும் எம்மினத் துரோகிகளே' பூமுழக்கம் கேட்டு கார்முகில் விலகிப்போனது.

தொடர்ந்த நாட்களில் இலைகள் கருகின. தண்டுகள் பச்சை நிறமிழந்து

பூகோள உருண்டையினோர் மூலையிலுள்ள பூந்தோட்டத்தில் பூக்களின் எழுச்சியாம் ஒரு பூ தன்னுயிரை ஈந்ததாம். ஈந்த போதெழுந்த அதிர்வு.., இளங்கன்றுகளைப் பூமியைப் பிளந்தெழுந்து வெளிவரவைத்ததாம், புதிய மொட்டுக்களை விரிய வைத்ததாம்...எல்லாப் பூக்களும் ஓலமெழுப்பினவாம்... நிமிர்ந்தனவாம்

மஞ்சளாய்ப் பழுத்தன. உள்ளிருந்தவையெல்லாம் அழுகின. வேர்கள் சுருண்டன. பூமட்டும்.. அமைதி நிலவப் புன்சிரிப்போடு புதுயாத்திரை தொடங்கியது.

உதிர்ந்த மணித்துளிகள் உயிர்த்துளிகளைக் குடிக்க இறுதி மணித்துளியில் பூக்களின் கண்களெல்லாம் கண்ணீர்த்துளியில்...

அப்பூவின் உதிர்வு வரலாறானது, மருத்துவம் இழையங்களின் இறப்பென்றது. இலட்சிய வேட்கை விதையொன்று விதைக்கப்பட்டது என்றது. இலக்கியம் 'பூவே! போய்வா' எனக் கவிதை பாடியது.

பூகம்பம் பூமியைப் புரட்டிப்போட்டது. அரண்ட உலகம் அதிசயித்தது. என்ன இது? எந்த வானவியல் ஆராய்ச்சியாளனும் முற்கூட்டி அறியாத புதிய பூகம்பம்? எங்கிருந்து வருகிறது? மிரண்டு போய் விழித்த உலகம் விசாரிக்கத் தொடங்கியது.

பூகோள உருண்டையினோர் மூலையிலுள்ள பூந்தோட்டத்தில் பூக்களின் எழுச்சியாம் ஒரு பூ தன்னுயிரை ஈந்ததாம். ஈந்த போதெழுந்த அதிர்வு.., இளங்கன்றுகளைப் பூமியைப் பிளந்தெழுந்து வெளிவரவைத்ததாம், புதிய மொட்டுக்களை விரிய வைத்ததாம்...எல்லாப் பூக்களும் ஓலமெழுப்பினவாம்... நிமிர்ந்தனவாம்.

ஓலம்! நிமிர்வு! விரிவு! பிறப்பு! என இவை எழுப்பிய அதிர்வலைகள் கிலோகேட்சாய் மெகாகேட்சாய் ஒன்றாய்த் திரண்டு உயர்ந்து வானிலும் மண்ணிலும் பிரபஞ்சமெங்கும் அலையாய்ப்பரவி உலகை உலுப்புகிறதாம்.

'ஓ' வென உலகம் அதிசயித்தது. பூக்கள் எழுப்பிய பூகம்பமா? இது புதிது இந்த எழுச்சி புதிது. இந்த விழிப்புப் புதிது... இனி எல்லாம் புதிதாய்... இனிதாய்!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சுமையாய் இறங்குவது போல்பட்டது.

அவன் இருக்கையை விட்டெழுந்தான். அப்படித்தான் அவன் அந்த அழுத்தம் வரும் போதெல்லாம் நடந்து கொள்வான்.

அவன் தன் இருப்பிடத்தை விட்டெழுந்து அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினான்.

இப்படி அவன் நடந்து கொள்வதில் அவன் மனைவிக்கு நல்ல பரிச்சயம். 'இப்ப என்னப்பா உயிர்போனமாதிரி யோசிச்செண்டு.....? '

அவள் எரிச்சலோடு கேட்டாள்

அவன் அதற்குப் பதில் அளிப்பதாய் இல்லை.

'நீங்க வீட்டில் இருந்தா இப்பிடித்தான். எதையோ பாரத்தை தூக்கி தலையில் வைச்செண்டு இருக்கிறமாதிரி முழிச்செண்டு....' அதற்கும் அவன் எதுவும் சொல்வதாய் இல்லை.

மு.பொ

# அவனுக்கு என்ன நேர்ந்தது?

காலையில் கண்விழித்த போதிருந்து அவன் பின்னால்- அவன் பின்னாலா முன்னாலா அல்லது அவனுக்குள்ளிருந்தா- ஏதோ நூலாய் இழுபடுகிறது.

எங்கிருந்தென்று தெளிவாகத் தெரியாவிட்டாலும் அது அவனைச் சூழ, ஒரு புகைத்திரளாய், புகை வளையங்களாய் இழுப்பட்டுக் கொண்டிருப்பது போல.....

அது அவனோடு இழுபடுவது அவனுக்கு ஏதோ அசௌகரியந் தருவதாய், காலையில் ஆனந்தப் பள்ளிடும் பறவைகளின் கீதத்தோடு அவன் மிதப்பதை தடுத்து கீழ் இழுக்கும் ஓர் மர்ம விசையாய் அது இழுபடுகிறது.

அவனுக்கு அதில் நல்ல பரிச்சயம்.

அவனுக்கு வேலை ஆயிரம் இருந்தபோதும் அதை மறந்தவனாய் வீட்டு வாசலில் நின்றவாறே தூரத்தெரியும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான். இடைக்கிடை கவியும் முகில் திட்டுக்களிடையே விரிந்து கொண்டிருக்கும் வான்பரப்பு.

அவன் நெஞ்சை அது அள்ளுகிறது. அவன் எங்கெங்கோ காற்று வெளியில் அள்ளுப்பட்டுச் செல்கிறான்.

அந்நிலையிலும், உயர உயரப் பறக்கும் பட்டத்தின் பின்னால் இழுபடும் கண்ணுக்குத் தெரியாத நூல் இழையாய் அவன் பின்னால் ஏதோ ஒன்றின் உணர்வு இடைக்கிடை தலைக்காட்டவே செய்கிறது.

அது அவனுக்கு அவன் கால்களைக் கட்டிப்போடுவது போலவே பட்டது.

அவன் நெஞ்சின் அழுத்தங்கள் எதுவுமின்றி உயர உயரப் பறக்க முனையும் ஒவ்வொரு சமயமும் அவன் இறக்கைகள்மேல் சுமை இறங்கி கீழ் இழுப்பது போல்....

இது அடிக்கடி அவனிடம் தலைகாட்டத் தொடங்கியிருந்தது.

அன்று அவனுக்கு வேலையில்லை ஆகவே அவன் வீட்டிலிருந்தான். வழமையாக அவன் அமரும் மேசைக்கு முன்னால் போய் மிக ஆறுதலாக அமர்ந்தான்.

கொஞ்சநேரம் அவன் ஏதோ கையில் இருந்த விலங்குகள் நீக்கப்பட்டவனாய் உணர்ந்தான். வேலை என்பது ஒருவனுக்கு விலங்கா? அப்படித்தான் இருக்கவேண்டும் ஆனால் அந்த விடுதலை உணர்வு கொஞ்சநேரந்தான். அதற்குமேல் அந்தச் சுகம் இருக்கவில்லை. காரணம் அவன் தோள்மேல் ஏதோ ஒரு பாரம் சொல்லிவைத்து இறங்குவதுபோல் அந்தரம். அது அவன் வேலைப் பழுவைவிடப் பாரமாக இருந்தது. காலையில் அவன் விழித்தபோது நூலாய் இழுபடுவதுபோல் பட்ட அந்த உணர்வு, இப்போ தோளில்

திடீரென எதையோ நினைத்துக் கொண்டவன் போல் தன் மேசையில் அரைகுறையாக வாசித்து விட்டு வைத்த நாவலை எடுத்துப் படிக்கத்தொடங்கினான். சிறிதுநேரம் படித்திருக்கமாட்டான் அவன் கண்களுள் தூக்கம் சுழன்றது. மெல்ல எழுந்து தன்படுக்கையில் போய் விழுந்தான்.

அவன் தலையில் இருந்து பாறாங்கல்லாக அழுத்திய பாரம் அவனைவிட்டு மெல்ல மெல்ல அகல, அவன் கண்களைத் தூக்கம் கௌவுகிறது.

ஆனால் ஆழ்துயில் அல்ல. அவன் கனவுலகில் மிதந்தான். அங்கும் அவனைத் தொடர்ந்து கயிறெறியும் அந்த உணர்வு....... பாம்புகள் மாதிரி அவன் முன்னே நெளிந்து வளைந்தன. அவனை வளைத்து அவனைப் போக விடாது வட்டமிட்டு வளைத்து நின்றன.

அவன் முதலில் பயப்பட்டான். பிறகு திடீரெனத் தைரியம் கொண்டவனாய் அவனை வளைத்த பாம்புகளை காலால் மிதித்துக் கொல்ல முயன்றான்.

ஆனால் அவை அவன் கால்களுக்கு அகப்படாது நெளிந்தன.

பின்னர் அவற்றை இரண்டு கைகளாலும் பிடித்து நசிக்க முயன்றான்.

ஆனால் கைக்குள் அகப்படாத இன்மைப் பொருளாய் மாறின. அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. அவை வெறுந்தோற்றங்களென்று. அவன் உற்சாகம் கொண்டு மேலே நடந்தான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திடீரென அவன்முன் நெளிந்த பாம்புகள் இரும்பு வளையங்களாக மாறி அவனைச் சுற்றி வளைத்தன. அவன் இரும்புக் கூடொன்றுக்குள் அகப்பட்டவனாய்த் திகைத்தான். பயம் அவனைத் தாக்கியது. அவன் பயந்தவாறே தன்னைச் சூழ்ந்து நின்ற கம்பிக்கூண்டை உதைத்தான். என்ன ஆச்சரியம்! வெறும் காற்று வெளியை உதைத்தவனாய் முன்னால் தள்ளப்பட்டான்.

அந்தக் கம்பிக்கூண்டு வெறுந்தோற்றமே என்பது மீண்டும் உணர்த்தப்பட அவன் வியந்தான்.

ஆச்சரியம் கலந்த சந்தோசத்தோடு முன்னேற முயன்றான்.

ஆனால் திடீரென அவன் முன்னே உருளை ஒன்று முளைத்தெழுந்தது!

நெடுஞ்சாலைகளைச் செப்பனிடும் உருளைப்போல் அவன் பாதையை மறைத்தெழுந்தது.

அதை உருட்டித்தள்ளி அவனால் முன்னேற முடியுமா?

அப்படி அவன் நினைத்தபோது அந்தப் பேருருளை அவனை இடித்துத்தள்ளுவதுபோல் அசைந்து அசைந்து வந்தது. அவன் என்ன செய்வதென்று அறியாது , எப்படி அதிலிருந்து தப்புவது என்று தெரியாது மலைத்து நிற்கையில் அது அவனைக் கீழே தள்ளி நசித்து விடுவதுபோல் நெருங்கி விட்டது... ஐயோ......

அவன் திடுக்கிட்டவனாய் விழித்தெழுந்தான்.

அவன் உடல் வேர்த்துக்கொட்டியது.

அவன் எதிலிருந்து தப்ப முயன்றானோ அது அவன் கனவிலும் அவனைத் தொடர்வது போல்பட்டது.

* * *

அவனுக்கு இப்போ வரவரத்தான் ஏதோ அந்தரத்தில் தொங்குவது போல்பட்டது. வேலையில்லாத லீவு நாட்களில் அவன் வீட்டில் இருக்கும்போது யாரோ அவனைக் கட்டித் தொங்கவிட்டது போலவும் அவன் அதிலிருந்து விடுபடமுடியாமல் தவிப்பது போலவும் அவன் அவஸ்தைப்பட்டான்.

இவ்வேளைகளில் அவன் தனக்கு விருப்பமான இசைப்பாடல்களை கேட்டு மகிழ்வான். அல்லது நல்ல இலக்கிய நூல்களையோ தத்துவ நூல்களையோ வாசித்து தன்னை மறப்பான்.

ஆனால் இது எல்லா நேரமும் சாத்தியப்படுவதில்லை.

அந்த நேரங்களில் அவன் ஏதோ பாரவண்டியொன்றைத் தள்ள முடியாமல் தள்ளிக் கொண்டிருப்பவன் போன்ற அவஸ்தை.

அதிலிருந்து மீள்வதற்கு அவன் படும் பாடு பரிதாபகரமானதாகவே இருக்கும். எப்பொழுது வேலைநாட்கள் வரும் என்பதுபோல் காத்திருப்பான்.

காலையில் அவன் கண்விழிக்கும் ஒவ்வொரு சமயமும் அவன் மனம் எந்த வித விகாரங்களாலும் சூழப்படாத நிர்மலமாய், விரிய அவன் மனம் களிகொண்டு குதிக்கும். ஆனால் கொஞ்ச நேரந்தான்.

அதன் பின்னர் அவன் பின்னால் நூலிழையாக இழுபடத்தொடங்கும் 'அது' அவனைச் சகஜ நிலையிலிருந்து தள்ளி விட அவன் அந்தரப் படத்தொடங்கிவிடுவான்.

வேலை அவனை அழைக்கும்.

முடுக்கி விட்ட பொம்மைபோல் சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக விரைவான்.

பின்னர் வேலையில் மூழ்கிவிட்டால் எல்லாம் மறந்து போய்விடும். சாப்பாட்டு இடைவேளை நண்பர்களோடு அரட்டை அடிப்பதில் அழிந்துவிடும். மீண்டும் வேலையெல்லாம் முடிந்து வீட்டுக்குப் போகப் போகிறோம் என்கிற எண்ணம் வரும்போது, காலையில் எழும்போது ஏற்படும் எந்தவித மனவிகாரங்களாலும் பீடிக்கப் படாத ஆனந்தம். அந்த இனிமையின் வியாபிப்பில் அவன் வீட்டுக்கு போவதற்காக பஸ்சுக்காக காத்து நிற்கையில், சொல்லிவைத்தாற்போல் 'அது' அவன் பின்னால் இழுபடத் தொடங்கிவிடும். பின்னர் வீடும் நரகமாகிவிடும்.

* * *

ஒரு நாள் அவன் வீட்டில் தலையைப் பிய்த்துக்கொள்வதுபோல் யோசித்துக்கொண்டிருந்தான்.

அவன் மனைவி வழமை போலவே 'என்னப்பா துவங்கியிற்றேங்களா?' என்று தொண தொணக்கத் தொடங்கினாள்.

அவனும் வழமைபோலவே அவளுக்கு பதில் அளிக்கவில்லை. அன்று அவனுக்கு வழமைக்கு மாறான அந்தரம்.

தன்னைச் சூழ்ந்து இறுக்கிக் கொண்டு வருவதுபோலிருக்கும் இரும்புக்கூண்டை உடைத்தெறிய வேண்டும் போன்ற அந்தரம் அவனுக்குள் . காலையில் படுக்கையை விட்டெழுந்தபோது வழமைபோலவே அவனோடு இழுபடத்தொடங்கிய 'அது' நேரஞ் செல்லச் செல்ல அவனைச் சூழ்ந்து பேயாட்டம் ஆடத்தொடங்கிற்று. அவனை எங்கும் செல்லவிடாது மறிப்பதுபோல் அதன் விஸ்வரூபம். 'இதெல்லாம் வெறும் மனக் கற்பிதம்' என்று அவன் அதை உதறிவிடமுனையும் ஒவ்வொரு கணமும் அது இன்னும் இன்னும் பூதாகரமாக விரிந்தது.

அவன் கைகள் இரண்டிலும் தலையைத் தொங்க வைத்தவனாய் இருந்தபாணி, நிச்சயமாக பைத்தியம் பிடித்தவன் மாதிரியே தோற்றம் அளித்த அவன் மனைவி பயந்தேவிட்டாள்.

'என்னப்பா உங்களுக்குச் செய்யுது, என்னப்பா உங்களுக்கு?' என்று பதறியவாறு அவள் அவனை உலுக்கினாள்.

அவன் பதிலளிக்காது அவளை ஒரு தரம் வெறித்து பார்த்து, 'என்னைக் குழப்பாதே' என்று கூறிவிட்டு, தான் விட்டு வந்த வெளியில் பார்வையை ஓட்டினான்.

அங்கே அவன் கண்முன் ஒரு பிரமாண்டமான காட்சி விரிந்து கொண்டிருந்தது.

பென்னம்பெரிய கோளம்போல் ஒரு வலை உப்பி ஊதிச் சுழன்று கொண்டிருந்தது. அதற்குள் எண்ணிறந்த பறவையினம் அடைபட்டுச் சத்தமிட்டவாறு பறந்து திரிகின்றன. ஒன்றையொன்று புணர்வதும் விடுபடுவதும் தனித்திருப்பதும் ஏகாந்தமாய் இருந்து பாடிக் களிப்பனவாயும் இருந்தன. அவற்றுள் ஏதாவது ஒன்றிரண்டு இடைக்கிடை வலையை அறுத்துக்கொண்டு வெட்ட வெளியில் ஆனந்தமாய் பறந்தன. அவனுள் பரவசம் எழுவதுபோல் இருந்தது.

அவன் தனக்குள் பெரிதாய்ச் சிரித்தான். அவன் மனைவிக்கு வயிற்றில் நெருப்பைக் கொட்டுவது போலிருந்தது.

'இனிமேலும் தாமதிக்கக்கூடாது. ஆளை டொக்டரட்டை கொண்டுபோய்க் காட்டவேணும்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அயலவர்களும் அவளுக்கு அதையே கூறினர்.

* * *

கிளினிக் ஒன்றிற்கு அவன் கொண்டு போகப்பட்டான்.

மனோவியல் மருத்துவ நிபுணரின் அறைக்குமுன்னால் அவனும் அவளும் காத்திருந்தார்கள். மேசை மணி அழுத்தப்படும் சத்தம் கேட்டது. அவர்களை உள்ளே வருமாறு நேர்ஸ் அழைத்தாள்.

அவனும் அவளும் எழுந்து உள்ளே போனார்கள். 'உங்களுக்கு அப்பொயின்ற்மன்ற் 9:30 க்கு. ஆனால் நீங்கள் 10:30 க்கு வந்திருக்கிறீர்கள். ஏன் இவ்வளவு லேற்? '-டொக்டர் சிறிது கடுகடுப்பாகவே கேட்டார்.

டொக்டரின் கேள்விக்கு மனைவி பதிலளிக்க முன் அவன்தான் பதிலளித்தான்.

'இல்ல டொக்டர், நீங்கள் சொல்வது போல் எனக்கு நேரம் ஓடுவதாய்

தெரியவில்லை'

டொக்டர் ஒரு முறை அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

அவன் மனநோயாளி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



என்பதைப் புரிந்து கொண்டவர் போல், அவன் மனநிலையை மேலும் அறிய விரும்புபவர் போல் அவளிடம் பின்வருமாறு கூறினார்.

'இல்லை உங்கள் நேரத்தைப் பாருங்கள் இப்போ சரியாக 10:40 நீங்கள் கிளினிக்கு வந்தது 10:30க்கு ஆகவே நேரம் ஓடுது, இல்லையா?'

'கடிகாரத்தின் முள் சுற்றினால் நேரம் ஓடுவதாகக் கொள்கிறீர்களா, டொக்டர்?'

-அவன் கேட்டான்.

'டொக்டர், அவர் இப்பிடித்தான் கதைப்பேர். அவர் கொஞ்சம் குழம்பியிருக்கிறேர். அதுதான் அவரை நான் உங்களட்டை கூட்டிக் கொண்டு வந்தேன்' -அவன் மனைவி பதில் அளித்தாள்.

அதைக்கேட்டு அவன் சிரித்தான்.

'நீங்கள் குறுக்கிடாதீர்கள், அம்மா' என்று அவன் மனைவியை அமைதிப்படுத்திய டொக்டர் அவனைப் பார்த்துக் கேட்டார் :

'அதுசரி, நேரம் ஓடுவதாய் தெரியவில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்?'

'எனக்கு சும்மா இருக்கும்போது நேரம் ஓடுவதாய் தெரியவில்லை என்மேல் சுமையாய் இறங்கி கழுத்தை நெரிக்குது' அவன் கூறினான்.

'நீங்கள் வேலை செய்கிறீர்களா?'

'ஓம்'

'என்ன வேலை?'

'ஆசிரியர் வேலை'

'அப்போ நீங்கள் வேலை செய்யும் போது - அதாவது நீங்கள் படிப்பிக்கும் போது நேரம் ஓடுவது பற்றி தெரிவதில்லையா?' டொக்டர் ஆர்வமாகக் கேட்டார்.

'அப்போதும் அது ஓடுதோ நிற்குதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் அப்போது, சும்மா இருக்கும்போது ஏற்படும் சுமையின் அழுத்தம் எனக்கு ஏற்படுவதில்லை' அவன் தெளிவாக பதில் கூறினான்.

டொக்டர் சிறிதுயோசித்துவிட்டுக் கூறினார்.

'உங்கள் பிரச்சினை இதுதான். நீங்கள் நேரம் பற்றிய ஒருவித குற்ற உணர்வால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.'

'நேரம் ஓடுவது பற்றி பிரக்ஞை உடையவர்களுக்கு நான் குற்றவாளியாக படலாம்' - அவன் பதில் அளித்தான்.

'என்ன சொல்கிறீர்கள்?'- அவன் பதிலின் விளக்கத்தை டொக்டரின் கேள்வி கோரியது.

'இல்லை டொக்டர், என்ர வியாதி - இல்லை எங்கட வியாதி என்று கூடச் சொல்லலாம் - எனக்கு நேரம் ஓட மறுத்து சுமையாய் இறங்குது. அதனால் நான் அந்தரப்படுகிறேன்.

உங்களைப் போன்றவர்களுக்கு நேரம் வேகமாக ஓடுது. நீங்க அதன் பின்னால் ஓடுறேங்க அப்படி ஓடுவது உங்களுக்கு அந்தரமாக அவஸ்தையாக இருப்பதில்லையா?'

'ஏன்? ' டொக்டர் அவனைக் கேட்டார்.

'அதனால்தான் நான், நீங்கள் குறித்த அப்பொயின்மன்ற் நேரத்துக்கு வரேல்ல எண்டு கோபப்பட்டீர்கள், இல்லையா?

டொக்டர் லேசாகச் சிரித்தார்.

'டொக்டர், இவர் இப்பிடித்தான் கதை சொல்லுவேர்.

ஆனால் எனக்கெண்டா அவருக்கு ஏதோ வியாதி பிடித்து விட்டது மாதிரிதான் தெரியுது.' - அவன் மனைவியின் குரலில் ஒரு வித பயம் வெளிவந்தது.

'நீங்கள் கொஞ்சம் அமைதியாய் இருங்க' என்று அவன் மனைவியை சாந்தப்படுத்திய டொக்டர், அவன் பக்கந்திரும்பினார்.

'இங்கே பாருங்கள், நீங்கள் நேரத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம்'. அதுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். அதைப் பெரிதாக எடுக்க வேண்டாம்.'

'நான் அதுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இருக்கட்டும்.

ஆனால் நான் இங்கே வந்ததும் அதை என்மேல் அழுத்தியது நீங்கள்தான்.

அதனால்தானே என்னைக் கண்டித்தீர்கள் ? ' - அவன் சிரித்துக் கொண்டே கூறினான்.

'ஓம் அது வேறானது. நான் நேரத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவம் என் வேலை தொடர்பானது' டொக்டர் விளக்கினார்.

'ஆனால் நான் நேரம் பற்றி பிரஸ்தாபிப்பது இன்னும் ஆழமானது. அது என் வாழ்க்கை தொடர்பானது' என்று கூறியவன் டொக்டரைப் பார்த்து லேசாகச் சிரித்துக் கொண்டே கூறினான். 'நீங்கள் நேரத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நேரத்தைப் போற்றுகிறது. என்னுடையதோ நேரத்தைக் கடக்க முயல்கிறது. நேரம் இல்லாத இடத்தை தேடுகிறது.'

'நேரமில்லாத இடமா? ' என்று சிரித்துக் கொண்டு கேட்ட டொக்டர், அவன் மனைவியை ஒருவிதமாகப் பார்த்து விட்டு, 'கொஞ்சம் குழம்பியிருக்கிறார். இந்த மாத்திரைகளை வாங்கிக் கொடுங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்று கூறி பிறிஸ்கிறிப்ஷனை எழுதிக்கொடுத்தார்

அதை எடுத்து அவன் மனைவியின் கையில் ஒப்படைத்தவாறே டொக்டரைப் பார்த்து, ' டொக்டர் இந்த மாத்திரைகள் நேரத்தைக் போற்ற உதவுமா? அல்லது நேரத்தைக் கடக்க உதவுமா? ' என்று கேட்டு விட்டு சிறிது வாய்விட்டுச் சிரித்தான்.

டொக்டருக்கு தான் எழுதிக் கொடுத்த பிறிஸ்கிறிப்ஷன் மாத்திரைகள் தன் தொண்டைக்குள்ளேயே இறங்குவது போல் குமட்டல் எடுத்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மாமலர்கள்



மலர்களைப் போன்று
அழகழகாய் உடுத்திக்கொள்ள
இலைகளுக்கு இல்லையா ஆசை?

சில இனங்களில், சில வேளைகளில்
இலைகளே மலர்களின் கடமையைச்
செய்வதும் உண்டுதான்!
சில தாவர இனங்களில்
இலைகளே முட்களாய் இருப்பதுமுண்டு.
இந்த உத்திகள் யாவுமே
உயிர் தொடர்ந்தும் பாதுகாப்பாய்
வாழவேண்டும் என்பதற்காகத்தான்!

வாழவேண்டும் என்ற வேட்கை
ஒரு தனிமரத்தின் வாழ்வை மட்டுமே
குறிப்பதாகாது.

அதன் இனம் வாழவேண்டும்,
அது தொடர்ந்தும் வாழவேண்டும்,
என்பதுதான் இலைகளிங்கு
மலர்களாகவும் முட்களாகவும்
மாறுவதற்குக் காரணம்.

ஆனால்,

பிஞ்சாகிக் காயாகிப்
பழமாகிக் கனிந்து
விதையீந்து வாழவைக்கும்
மலர்களே ஆயுதமாய்
மாறுகின்ற அற்புதம்
எங்கே நிகழ்கின்றது?

தம்மினத்தைக் காக்கத்தம்
இன்னுயிரை உவந்தளிக்கும்
உன்னத மாமலர்கள்
தோன்றி மலர்வதெம்
தமிழீழ மண்ணிற்தான்!

'நிலக்கிளி' அ.பாலமனோகரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தீச்சுடர்



## தீச்சுடர் – 7

தமிழ்க்கவி

'வன்னி விக்கிரம-02' ஆண்டியா புளியங்குளம், நேரியகுளம் வழியாக நீலியாமோட்டையில் மன்னார் வீதியைத் தொட்டனர் சிங்களப் படையினர். விமானங்கள் குண்டுகளைக் கொட்டித்தீர்த்தன. இரவு முழுவதும் எறிகணை வீச்சில் அப்பகுதிக்காடுகள் அதிர்ந்தன. இதேநேரம் யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

ரஞ்சன் விஜயரட்ண பாதுகாப்பு அமைச்சராக இருந்தகாலம் அது. பல முனைகளில் முயன்று எப்படியும் 'புலிகளை ஒழிப்போம் தமிழரைக் காப்போம்' எனப் புதிய சுலோகங்களுடன் வலம் வந்த ரஞ்சன் விஜயரட்ண, இம்முறை மடுத்தேவாலயத்திற்கு மெழுகுதிரி கொழுத்தி வழிபாடு செய்யப்போவதாக சூளுரைத்திருந்தார். இதற்கேற்ப இராணுவத்தின் மற்றொரு அணி பறையனாலங்குளம் வழியாகவும், கன்னாட்டி கூழாங்குளம் வழியாக ஒரு அணியும் மன்னார் வீதியை முட்டி நிறைந்து மடு வீதியைத் தொட்டது.

இந்தப் பகுதியெங்கும் காடுகள் வயல்கள் எல்லாம் பற்றியெரிந்தன. என்றாலும், சிவநகரில் பார்வதி, தர்மலிங்கம், ராயப்பர் போன்ற இரண்டொருவர் கட்டிய குடிசைகளையும், கைத்தூக்கே கொள்ளக்கூடிய உடைமைகளையும் வைத்துக்கொண்டு தங்கிவிட்டனர். அவர்களும் போய்விட நினைத்தாலும் அது முடியவில்லை. அவர்கள் விவசாயிகள். செய்த பயிர் பச்சைகளை நிலத்தில் விட்டு விட்டுப் போனால்... ஒரே நாளில் எல்லாம் அழிந்து விடும். காட்டு யானைகள், காட்டு மாடுகள், இவை தவிர ஊர் மாடுகளும் இப்போது கட்டாக்காலிகளாய்த் திரிந்தன. தோட்டம் துரவுகள் அழிந்தால் வேறு தொழிலும் இல்லை. என்ன நடந்தாலும் இவைகளைக் காப்பாற்றத்தானே வேண்டும். 'மடுவுக்குப் போனா என்ன?' என்று மகள் கேட்டதற்குக் கூட,

'பயிர் பச்சையைப் போட்டிட்டு நிவாரணம் வாங்கித் தின்னப் போனா இஞ்சை எல்லாம் அழிஞ்சுபோடும். ஆனை பூந்தா அவ்வளவுதான். எல்லாத்தையும் பிடுங்கிப் போட்டிடும்' என்றார் ராயப்பர்.

'ம்ம்...பாப்பம் பொடியளும் நிக்கிறாங்கள்தானே' என்ற பார்வதி காயப்பட்ட போராளிகளைப் பார்த்துவர இரணை இலுப்பைக்குளம் புறப்பட்டாள். மாலை இருள் கருகும் வேளையில் திரும்பி வந்தாள். காயக்காரரைப் பார்க்க விடவில்லையாம். தர்மலிங்கம் தன் மகளை அழைத்துக்கொண்டு வீட்டிலிருந்து பின்புறமுள்ள வீட்டை நோக்கிப் போனார். சற்று முன்தான் ஆமி செல்லடிக்கத் தொடங்கியிருந்தான். பூவரசங்குளம் பக்கமாகப் பார்த்துக்கொண்டிருக்க பக்பக்கென மின்னுவது தெரியும். பத்துப் பதினைந்து விநாடிகள் என எண்ணிக்கொண்டிருக்க செல் கும் கும் மென குத்தும் சத்தம் வரும் கூடவே அண்மையில் வெடிக்கும் ஓசையும் வரும்.

திடீரெனப் பெரும் ஓலமொன்று கிழக்கே வீதிப்புறமிருந்து வர திடுக்கிட்ட பார்வதி முற்றத்திலிருந்து வெடுக்கென எழுந்தாள். கூடவே யானையின் சீறல் ஒலியும் வந்தது.

'ஐயோ...! ஆரையோ ஆனை தட்டிற்றுது' என ராயப்பர் கத்தி முடிக்குமுன் அந்த வளவுக்குள் பிளிறல் ஒலி எழுந்தது. ஒன்றன்பின் ஒன்றாக வேலன் குளம் நோக்கி யானைகள் கூட்டங்கூட்டமாக ஓடின. இருந்த நாலைந்து வீடுகளிலும் சங்கெடுத்து ஊதத் தொடங்கினார்கள். மகாபாரதக் கதையில் களக்காட்சி வருவதுபோல நாற்புறமும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சங்கொலிகள் முழங்கின. சங்குச் சத்தம் யானைகளை விரட்டும். கொஞ்ச நேரத்துக்குள் யானைகள் ஓடிச்சேர்ந்தன.

பின்னர், செட்டிகுளத்தாற்ற வீட்டிற்குள்ளிருந்து அருள் வந்தான். என்னவோ 'பேயறைந்ததுபோல' என்று சொல்வார்களே அப்படியிருந்தது அவன் முகம்.

'என்னடாப்பா சத்தம்....'

என்றவர்களை அவன் தெளிவாகப் பார்க்காமலேயே,

'ம்... முகுந்தன் வந்திட்டானே' எனக் கேட்டான்.

'இல்லை.. ஏன்?.....

'நானும் அவனும் வர யானை கலைச்சது.. நான்...கு.. குழறிக் கொண்டு ஓடி வந்திட்டன். அவன்...' என்றபடி திரும்ப முகுந்தன் வந்தான். 'நான் கையில் கிடந்த சாமானுகள எறிஞ்சிட்டு, ரோட்டுக்கு மண்வெட்டின கானுக்க விழுந்திட்டன். ஆனை.. எனக்கு மேலால கடந்து ஓடிற்றுது' அவன் இன்னும் நடுங்கினான்.

மறுநாள் அவர்களும் புறப்பட்டு மடுவுக்குப் போனார்கள். ராயப்பு தர்மலிங்கம் பார்வதி எல்லோருமே புதிதாக மடுவுக்குள் வந்தவர்கள். வீடுபோட ஒரு இடமும் கூரைக்கு சீற்றும் வேண்டும். அத்தோடு நிவாரண உதவிகளுக்குப் பதியவும் வேண்டும். அவர்களைப் போலவே அவர்களுக்கு முன்பே வந்த பலர் இன்னும் குடில் போட வசதியின்றியிருந்தார்கள். பதிவு செய்தாலும் பொருட்கள் உடனே கிடைக்கவில்லை.

அரிசி, சீனி போன்ற உலர் உணவுப் பொருட்களுக்குப் பதிய ஏ.ஜி.ஏ கந்தோருக்குப் போகச் சொன்னார்கள். அங்கேயோ எள் போட்டால் எண்ணெய் வரும்போல அவ்வளவு சனம் நெரிசலாக நின்றனர்.

மடுவில் வந்து தங்காமலேயே அயற்கிராமங்களிலிருந்து வந்து தங்கியிருப்பது போலப் பதிந்து பொருட்களை வாங்கிச் செல்வோர் அதிகம். அப்படித்தான் ராசரத்தினமும் தியாகலிங்கமும் வந்திருந்தனர். சண்டை நடக்கும் இடத்துக்கும் இவர்களுடைய கிராமத்துக்கும் வெகுதூரம்.

இதெல்லாம் தெரிந்ததோ என்னவோ பதிவு செய்யும் அதிகாரி குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரையும் காட்டும்படி கேட்டுக்கொண்டிருந்தான். குடும்பத்துடன் வந்தவர்களே உண்மையான அகதியெனக் கண்டான் அவன். 'மனைவி மகன் பிள்ளை எல்லோரையுங் காட்டு' இவனுடைய நடவடிக்கையைப் பார்த்த ராசரத்தினம் திரும்பி வந்தான். வந்தவன் தர்மலிங்கத்தைக் கண்டதும், 'எங்க.. துலைக்கே' என்றான்.

'உதில சாமானுக்குப் பதியினமாம் அதுதான்' என்றார் தர்மலிங்கம்.

வாயிலிருந்த வெற்றிலையைத் துப்பிவிட்டு, சும்மா 'ப்பூ..' என்று வாயையும் ஊதிவிட்டு ராசரத்தினம் சொன்னான், நானும் பதியத்தான் போனனான். மனிசி, பிள்ளையள விட்டிட்டு வந்திட்டன். 'இஞ்ச, குடும்பத்தைக் காட்டவேணுமாம். கூட்டியரப் போறன்' என்றான்.

மடுத்திருப்பதியில் மக்கள் தொகை அதிகரித்தது. பெரியதம்பனை பெரியபண்டிவிரிச்சான் போன்ற இடங்களிலெல்லாம் போராளிகள் சண்டைக்கெனத் தரித்து நின்றனர். பெருமளவு மக்கள் அவர்களுக்கு உணவு சமைக்கவும், வீதி திருத்தவும் பதுங்குகுழிகள் அமைக்கவுமெனப் போய்வந்துகொண்டிருந்தனர்.

காயமடைந்த போராளிகளை அப்புறப்படுத்துவதிலும், பல வருட காலமாகச் செப்பனிடாத வீதிகளைத் திருத்தவே நிரம்ப மக்கள் தேவைப்பட்டனர். மூன்று வேளையும் உணவு விநியோகம் செய்ய முடியாவிட்டாலும், இயன்றளவு முன்பக்கம் போராடிக்கொண்டிருந்த போராளிகளுக்கு உணவு அனுப்புவதில் மக்கள் மகிழ்ச்சியோடு ஈடுபட்டனர்.

இந்தப் பணிகளை ஒழுங்குறச் செய்ய வேண்டியிருந்ததால் யாழ்ப்பாணத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் வவுனியா மன்னார் மக்கள் கலந்துகொள்ள முடியவில்லை. 'அ..அ... அடுத்தமுறை முத்தமிழ் விழாவை வன்னியில வைப்பம்.. இப்ப.. இவன் வந்தவனைக் கலைச்சுப்போட்டு...' என்றார் ஒரு முதியவர். சண்டை எவ்வளவுதான் உக்கிரமாக நடந்தும், பாவம் ரஞ்சன் விஜயரட்ணவால் மடுவைப் பிடிக்க முடியவில்லை. பெரிய தம்பனைக்குள் வைத்தே இராணுவத்தை சிதறடித்தது புலிகள் சேனையின் சீலன் சிறப்புப் படையணியும் இளம்புலிகள் அணியும்.

வந்தவழியைக்கூட மறந்து கூழாங்குளத்துக்கூடாகப் பறந்தது இலங்கைப் படை, விநியோகத்துக்கென வந்த உலங்குவானூர்தி செக்கடிப் புலவில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இராணுவம் ஓடிவிட்டான் என்றபின் காடுகளுள் மக்களுக்கு நிரம்பவே வேடிக்கைகள் காத்திருந்தன. 'மெய்யே.. அந்தோனி வீரமரத்துப் போருக்குள்ள 'மகசின்'களுக்கு ரவைய நிரப்பித் திணிச்சிருக்கப்பா...'

'பின்ன, சன்னம் இருந்தாத்தானே சண்டை பிடிக்கச் சொல்லி நெருக்குவாங்கள்..'

'புத்துக்கண்ணுகளுக்கு கூட பெரிய பெரிய தோட்டாக்கள் சொருகிக் கிடந்ததாம்'

'உதென்னத்தைக் கண்டாய் ஆரோ வேட்டைக்குப் போனவை... அரை உரப்பையில 'ரவுண்சு'கள் எடுத்தவையாம்.'

இப்படி ஏகே 'ரைபிள்' பிகே 'ரைபிள்', எல்.எம்.ஜி இன்னும் என்னென்னவோ பெயர் தெரியாத புதுவகை ஆயுதங்களென காடுகளுள் பொறுக்கியெடுக்கப்பட்டன.

இராணுவம் மடு ரோட்டில் பத்து யார்கூட முன்னேற முடியவில்லை. நாங்கள் வன்னியிலிருந்து இனி யாழ்ப்பாணம் போவோம்.

இங்கே ஆனையிறவு ஆகாயக் கடல்வெளிச் சமருக்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தது. நளாயினி தன் வயிற்றுக் காயத்தை ஓரளவு ஆற்றிக்கொண்டு சக போராளிகளுக்கு உதவும் வேலையில் ஈடுபட்டாள். ஆகாயக் கடல் வெளிச்சமரைப் பற்றிச் சொல்ல வேண்டிய தேவையுண்டோ. உலகம் வியக்க முதன் முதலாக ஒரு தேசத்தில் இரண்டு மரபுவழி இராணுவங்கள் போரிட்ட சண்டை அது. ஆம் விடுதலைப்புலிகள் ஒரு மரபுவழி. இராணுவமாக மாறி சிறீலங்காப் படைகளை நேருக்கு நேர் எதிர்த்துப் போராடிய களம் இது.

ஏறக்குறைய ஒரு மாதம் நீடித்த சமர் இதில் நளாயினியுடன் வவுனியாவில் அரசியல் வேலை செய்த பிள்ளைகளும் பங்கேற்றனர். சமர் நிறுத்தப்பட்டபோது அதன் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் தமிழர்களுக்கு ஒரு கடற்படை இல்லாத குறை உணர்த்தப்பட்டது. தோல்வி எனக் கூறாமல் ஒரு பாடத்தைக் கற்றுத் தந்த சமர் இது. இதன் முடிவுக்குப் பின்னர், அரசியல்துறைப் போராளிகளை தலைவர் சந்தித்தார்.

'புதிய போராளிகளை இணைப்பது எமது கரங்களைப் பலப்படுத்தும், அரசியல் வேலை செய்வதுதான் இப்போது மிக முக்கியமானது' என்றார். அப்போது நளாயினி.

'அண்ணை நான் பரப்புரை செய்யும்போது ஏன் பெண்கள் கரும்புலியாய் போகேல்ல எண்டு ஒரு மாணவன் கேட்டவன்.' என்றவள் சற்றுத் தாமதித்து.. 'ஏனண்ணை எங்களைச் சேர்க்கேல்ல' என்றாள்.

'நீங்கள் சேர முன்வந்தா... பயிற்சி தர நான் ஒழுங்கு செய்யலாம்.' என்றார் தலைவர். நளாயினி மௌனமானாள். கூட்டம் முடிந்தது. அரசியற் துறையிலிருந்து ஆகாயக் கடல்வெளிச் சமருக்கு வந்தவர்கள், மீண்டும் அவரவர் இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். நளாயினியும் வவுனியாவுக்கு வந்தாள்.

மாதர்பணிக்க மகிழங்குளத்தின் அந்தச் சின்னஞ் சிறிய வீடு அவர்கள் வரவால் பூரித்தது. மகிழ்ச்சியில் எல்லோரும் குதித்து ஆடினார்கள். அப்படி அவர்கள் ஆடிக்கொண்டிருந்தவேளை அங்கே ஒரு வித்துடல் வந்தது. உமா வீரச்சாவு, மறுபடிசமர், மறுபடி வித்துடல் துயிலுமில்லங்கள் தீ மூட்டிக்கொண்டன.

(இன்னும் வரும்)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தா.பாலகணேசன்



# அடிபாடு



அமைதியிழந்து கிடக்கின்ற கட்டிடக் காட்டிற்குள் புகுந்த ஆவணப் படப்பிடிப்புக் குழுவினர் இயந்திர ஓநாய்களின் சத்தத்தை பதிவுசெய்துகொண்டிருந்தனர். உயர்ந்த கட்டிடங்களை மெல்லக் கமராவால் படம்பிடித்துக்கொண்டிருந்தனர். அன்று காலையில் தொடங்கிய பணி இரவு வரை நீண்டுகொண்டு போனது. கட்டிடக் காட்டின் சந்து பொந்துகள் எல்லாம் சனக்கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்த அன்றைய நாள் - அவர்களுக்கு ஏதோ ஒரு மகிழ்ச்சியை அளித்துக்கொண்டுதான் இருந்திருக்கவேண்டும். களைப்பு மிகுதியில் அவர்கள் இருந்தாலும் அவர்களின் ஆவணப் படத்திற்கான முக்கிய மையங்களை நோக்கி நகர்வதில் சற்றும் ஆர்வம் குறையாதவர்களாக இருந்தார்கள்.

ஆசியர்களும், ஆபிரிக்கர்களும், ஐரோப்பியர்களுமாக மக்கள் வெள்ளம். குறிப்பாக அவர்களின் பார்வை முழுவதும் ஆசிய இளைஞர்களையே மையமிட்டுச் சுழன்றுகொண்டிருந்தது.

கோடை வெயிலில் புழுக்கம் தாங்காது அவிந்து மணப்பது போன்ற நெடில் பரவியிருந்தது. தேநீர்க் கடைகளுக்கு முன்னாலும், மளிகைக் கடைகளுக்கு முன்னாலும் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக நின்றுகொண்டிருந்தவர்களை கமரா படம் பிடித்துக்கொண்டு போனது. அப்பொழுது தான் ஒரு சந்துக்குள் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த இளைஞர்கள் அவர்களின் கண்களின் பார்வைக்குட்பட்டனர்.

ஓநாய்களால் துரத்தப்பட்ட மான் கூட்டம் மிரண்டு கொண்டிருப்பதைப் போல அந்த இளைஞர்கள் கமராக் குழுவினரைப் பார்த்தனர். தேநீர் கடைகளுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவயதானவர் கையில் பத்திரிகையைச் சுருட்டி வைத்துக்கொண்டு, சுற்றி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நின்றவர்களை நோக்கி 'அவங்கள் எல்லாத்தையும் படம்பிடிக்கப் போறாங்கள்' என்று சொல்ல அவருக்கு அருகில் நின்ற இளைஞனோ அதுக்கு இதுக்க ஏன் வந்து பூந்து பூந்து படம் பிடிக்கிறாங்கள் என தனது எரிச்சலைக் கொட்டித்தீர்த்துக்கொண்டிருக்கிறான்.

'வன்முறைகள் எவ்வாறு தோன்றுகின்றன? என்றும், வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது எப்படி? என்றும் அறிவதற்கான வேலையின் காரணமாகவே அவர்கள் பூந்திருக்கிறார்கள்' என்ற விடயத்தை அவர்களில் ஒருவன் தெளிவுபடுத்த முயன்று கொண்டிருக்கிறான்.

அந்த இளைஞர் குழு மெல்ல மெல்ல கலைந்து செல்லத் தொடங்கியது. அவர்களில் மிக நெட்டையானவனும் மொட்டைபோட்டுக் கொண்டிருந்தவனு மான இளைஞன் அகலாது அப்படி ஒரு சீமெந்துக் குந்தில் குந்திக்கொண்டிருக்கிறான்.

கமராக் குழுவினர் அந்த இளைஞர்கள் பற்றிய கதைகளை நன்கு அறிந்து வைத்திருந்தார்கள். கலைந்து செல்லும் ஒவ்வொருவரையும் படம் பிடித்துக்கொண்டு அவர்களும் கலைந்து செல்வதுபோல கலைந்துசென்று உயரமான கட்டிடத் தொகுதிக்குள் அவர்களுக்கென விசேடமாக ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று மறைந்தார்கள்.

கலைந்து சென்றவர்கள் திட்டிக்கொண்டே மெதுமெதுவாக மீண்டும் அவ்விடத்தில் கூடுகின்றனர்.

கமரா, அவர்களை கண்ணாடிக் கூண்டுக்குள் நின்றுகொண்டிருப்பதாக படம் பிடிக்கின்றது. அதற்குள் நின்றுகொண்டே அவர்கள் குடிப்பதையும், அவர்கள் வெறிப்பதையும், அவர்கள் புகைப்பதையும், அவர்கள் சண்டை போட்டுக்கொள்வதையும் நுணுக்கமாகப் பண்ணினார்கள்.

* * *

'ப' வடிவில் அடுக்கப்பட்டிருந்த மேசைகளில் அவர்கள் தமது ஆவணங்களைப் பரப்பி வைத்திருந்தார்கள். அவர்களின் கேள்விகளுக்கு சற்று வெட்கத்தோடும் அதிக துக்கத்தோடும் பதிலளித்துக்கொண்டிருந்தான் மொழிபெயர்ப்பாளனொருவன்.

கிட்டத்தட்ட 1997களில் இருந்து 2004 ஆடி வரையிலான காலப்பகுதியில் எடுக்கப்பட்டிருந்த கலர்ப் படங்களும், கறுப்பு வெள்ளைப் படங்களும் குவியலாகக் கிடந்தன. காது குத்தி கட்டையாக இருந்த ஒரு இளைஞனின் முகத்தைச் சுற்றி சிகப்பு நிற வட்டம் போட்டிருந்தார்கள். இவன் ஒரு ஆட்கடத்தல் மன்னன், பெரிய மருந்து வியாபாரி, இவனுக்கு சிங்கப்பூரில் நிறைய வியாபாரத் தொடர்புகள் இருக்கு. இவனிட்ட இரண்டுக்கும் அதிகமான பாஸ்போட்டுகள் இருக்கின்றன...

வேறொரு புகைப்படத்தில் கறுப்புக் கண்ணாடி அணிந்து மிக எடுப்பாக காரில் சாய்ந்து கொண்டு நிற்கும் இளைஞனா? அந்த நெட்டையானவனும், மொட்டை போட்டுக்கொண்டிருப்பவனும் என அறிவதில் ஆர்வம் காட்டினார்கள். அதற்கும் மொழிபெயர்ப்பாளனது உதவியை நாடினார்கள். அவன் தன்னால் சரியாகச் சொல்லத் தெரியவில்லை என்று தப்பித்துக்கொண்டான்.

கமராக் குழு சிரித்தது.. அவன் தலையைக் குனிந்துகொண்டான்.

அவர்களால் திரட்டப்பட்டிருந்த பல படங்கள், பல ஆவணங்கள் மொழிபெயர்ப்பாளனது தலையைச் சுற்றச் செய்ததில் வியப்பில்லை. கையும் மெய்யுமான காட்சிகள். அரங்கத்தில் நிகழ்ந்த, நிகழ்த்தப்பட்ட காட்சிகளைப் போலவும், அவையே ஆயிரம் கதைகளைப் பேசும் வண்ணமாக அமைந்திருந்தன. அவன் உணர்வின் அலைகளால் உந்தித் தள்ளப்பட்டான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் சற்று ஆடிப் போனான். கண்கள் சிவந்து கொண்டன. மெல்லத் துளி உருண்டு நிலத்தில் விழுந்தது. சமூகத்தின் நல்ல பக்கங்களைக் காட்டக்கூடிய ஒரு புகைப்படமாவது அவர்கள் எடுத்துவைத்திருந்தால் அவனது நிலைமை வேறாக இருந்திருக்கலாம் அவர்களுள் இருந்து எழுந்த கேள்விகள் ஏராளம் அவை அனைத்தும் மிக மிக வினோதமானவை.

அவர்கள் ஒரு பொழுது



'நாகரீகமடையாதவர்கள்' என்று கூடச் சொன்னார்கள். மொழி பெயர்ப்பாளனது மரபு அணுக்கள் அதிர்ந்திருக்கவேண்டும். அடுத்த கணமே 'படிப்பு வாசனையே இல்லாததுகள்' வெந்த புண்ணிலும் வேல் பாய்ந்த நிலையிலும் மனதை அடக்கப் பழகிக்கொண்டான் 'பக்காத் திருடர் கூட்டம்' என்றும் திட்டினார்கள். அவர்களோ மொழிபெயர்ப்பாளனை அவமானத்துக்குள்ளாக்கி விடுவோமே என்ற கவலை சிறிதுமின்றி நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இளைஞர் குழுவை நோக்கி கமராவை 'சூம்' பண்ணிய பொழுது - தற்செயலாகத்தான் அந்தச் சம்பவம் கமராவை இயக்கிக்கொண்டிருந்தவனுடைய மனக் கண்களில் பட்டது. காயப்பட்ட நாயினுடைய ஈனக்குரல் ஒன்று அவர்கள் எல்லோருக்குள்ளும் இருந்து ஒரே நேரத்தில் எழும்புவதைக் கண்டுகொண்டிருக்கிறான். அதுவே அவர்களது நிம்மதியைக் கெடுத்து, அவர்களைத் துயில் கொள்ள விடாது உலுப்பி எடுக்கிறது என்பதையும் அவன் கண்டுகொண்டிருந்திருக்கிறான். சற்று மனம் தளர்ந்தவனாக கமராவைவிட்டு கதிரையில் வந்து அமர்ந்துகொண்டான்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவனுக்குப் பதிலாக இன்னொருவன் சிகரட்டை பற்ற வைத்துக்கொண்டு கமராவை இயக்கிக்கொண்டிருக்கின்றான். கதிரையில் வந்து அமர்ந்தவனோ சொல்கின்றான் 'உந்தப் பெடியள் எதனாலையோ எங்கையோ பாதிக்கப்பட்டிருக்கிறாங்கள்'

அவனது சகாக்களைப் பதிலுக்காகப் பார்க்கின்றான்

மொழிபெயர்ப்பாளனுக்கோ மகிழ்ச்சி உச்சத்தில்.. இந்தச் சந்தர்ப்பத்துள் எல்லாக் கதைகளையும் சொல்லிவிடலாமோ என்ற துடிப்பு; தருணத்திற்காக காத்திருந்தான். ஆனால், அவனுக்கோ அந்த வாய்ப்பு நழுவிக்கொண்டே போனது அவனோ, மேலும், தனது சகாக்களை நோக்கி - புலப்பெயர்வு, சூழல், காலநிலை, சமூகம், பண்பாடு, மொழி, உறவுகள், போதை, மது, கட்டற்ற சுதந்திரம் என அடுக்கிக்கொண்டு போகின்றான். அவர்களில் ஒருவன் அவனைத் தூஷண வார்த்தைகளால் திட்டினான். 'உன்ர வேருக்குப் பண்ணுவன்' என்றும் சொல்கிறான் உனக்கு முற்று முழுதாக 'விசர்'தான் என்று ஒருவித தயக்கமும் காட்டாமல் அவனைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

'கலப்புத்தான் காரணம்' அவர்களில் ஒருவன் கோபமாகச் சொல்கிறான்

தமிழ் இளைஞர்கள் இங்குவந்து இன்னும் இருவது வருடங்கள் கூட ஆகவில்லை. நீங்கள் அவர்களை ஆபிரிக்க, அல்ஜீரிய சமூகங்களோடு ஏன் ஒப்பிடுகிறீர்கள்? என அவர்களில் ஒருவன் கேள்வி எழுப்புகிறான்.

'வேண்டாத விருந்தாளிகள்' அவ்வளவுதான் தீப்பெட்டியில் இருந்து குச்சியை எடுத்துக் கிழித்து சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டே சொல்கிறான்.

சிகரட் பத்திக்கொண்டு கமராவை இயக்கிக்கொண்டிருந்தவன் வேறுபடச் சுருள்களில் இருந்தும் சில பகுதிகளை இணைத்து ஒட்டும்வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அது சற்று வேடிக்கையாக இருந்தாலும் அவனுடைய மன உணர்வுகளைத் துல்லியமாகப் புரிய வேறு உதவியது. அவனது அப்படியானதொரு கற்பனைக்கு இருட்டுப்பட்டுக்கொண்டு போனது வேறு அவனுக்கு இன்னும் சாத்தியமாகவே இருந்தது.



குழுமியிருந்த இளைஞர் குழு சற்று வேகமாக துடிப்பசைவுகளோடு நின்று கொண்டிருக்கின்றது. இரு குழுக்களுக்கிடையிலான மோதலுக்கான இடம், காலம், யாவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. அந்த மோதலை சந்திப்பதற்கான ஆயத்தவேலைகள் நடந்துகொண்டிருந்தன. ஊரிலை சைக்கிள்செயின், திருக்கைவால், வில்லுக்கத்தி, கல், சுருள்வாள், போத்தல் எண்டு பாவித்த பழக்கத்தில் அவர்களில் சிலர் அந்த மரபுப் பாணியிலான ஆயுதங்களை கையில் எடுத்தார்கள். எனினும் சிலர் நவீனமான முறையில் சில ஆயுதங்களை மறைத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கூர் பார்க்கப்போகிற துடிப்பில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

* * *

மொழி பெயர்ப்பாளருக்குச் சிக்கலாகிவிட்டது. ஆயுதங்களைப் பற்றிய விபரங்களையும் அவற்றின் உபயோகங்களையும், அவர் ஒரு கதையாகச் சொல்லிவிட்டு அமர்ந்தார். இவற்றைக் 'கடலுள் கொட்டவேண்டும்' என்று விட்டு ஒருவன் சிரிக்க, மற்றவனோ இல்லை 'மியூசியத்தில் வைக்க வேணும்' என்று சொல்ல. அவர்களில் ஒருவனோ 'அவர்கள் அதற்குச் சம்மதிப்பார்களா; என்று கேட்டதும் அறை சிரிப்பில் அதிர்ந்துகொண்டிருக்கையில் மொழிபெயர்ப்பாளனது முகத்தில் கருமுகில்கள் முக்காடிட்டது. இவர்கள்



சிரித்துக்கொண்டிருக்க, தீர்ந்த சிகரட்டை எறிந்துவிட்டு அடுத்ததொரு சிகரட்டை மூட்டிக்கொண்ட அவனோ, அவர்களுக்குள் இருந்து ஒரு பிசாசின் உருவத்தை ஒத்த ஒன்று மேலெழும்புவதாகப் படமாக்கினான். அது, அவர்களை வெறிபிடித்து அலையப் பண்ணுகிற காட்சியை இருளும் ஒளியுமாக நிறைத்து படம்பிடிக்கிறான். அவர்கள் மதுப்புட்டிகளைக் காலிசெய்து தெருவில் எறிகின்றார்கள். மூண்டு எரியும் சிகரட் புகைக்குள் அவர்கள் மறைவதையும், எரிந்து தீர்ந்த சிகரட் கட்டைக் குவியலையும் அவர்களையும் மாறி மாறிச் சில நொடிப்பொழுதுகள் படமாக்குகின்றான்.

அவர்களுக்குள் இருந்து கூரிய நகங்களோடு பிசாசு போன்ற ஒன்று புறப்படுகின்றது. பிறாண்டிக் குத்திக் கிழிக்கும் வெறியோடு இருட்டில் அலையத் தொடங்கியது. அது வெளிக்கிட்டால்? அவர்களில் ஒருவர் வியப்புறக் கேட்கிறான். 'நான் அறிந்தவரை ஒரு சொட்டு இரத்தமாகிலும் காணாமல் அடங்காது' என்று 'விசரன்' எனப் பட்டம் ஏற்றவன் சொல்லிக்கொள்கிறான். கீறல், குத்து, வெட்டு, குறைந்தது ஒரு சின்னத் தட்டாகிலும் காணாமல் விழுந்து படுக்காது.

அவர்கள் குத்தும் வலியும் கண்டவர்களாக முறுகத் தொடங்கினார்கள்.

கட்டிடக் காட்டுக்குள் அவர்கள் இலை தளைகளை உடுத்தி கட்டிடங்களில் இருந்து குதித்து கீழிறங்கி வன்மத்தோடு ஓடுவதைப் போன்ற காட்சியைப் படமாக்கியபோது அவர்களில் ஒருவன் அக் காட்சியை எதிர்த்தான். எதிர்த்தவனின் மீது கடும் கோபப் பார்வை மூலம் பதிலளித்து விட்டு அவர்கள் கூரிய கற்களோடு ஓடுவதைச் சரியான இடத்தில் பொருத்த முயன்றுகொண்டிருந்தார்கள்.

காட்டு மிருகங்களின் ஓசையை அவ்விடத்தில் ஒலிக்கச் செய்து அக் காட்சியை மேலும் விகாரமாக்கினான். அப்பொழுதுதான் கமராக் குழுவினருக்குள் விவாதம் பெரிதாகக் கிளம்பியது.

ஏதோ நாங்கள் எல்லாம் நாகரீகத்தின் உச்சத்தில் நிற்பதாக நினைத்துக்கொண்டிருப்பதுதான் வருத்தமளிக்கிறது. இல்லை, எல்லா சமூகங்களிலும் இவ்வகையான இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை நல்வழிப்படுத்தும் முகமாகவே நாங்கள் இந்த ஆவணப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படத் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டிருக்கின்றோம். ஆனால் நீங்கள் அதை மறந்து செயற்படுவது ஆச்சரியமாக இருக்கிறது.

கிட்டத்தட்ட 'விசரன்' என அவர்களால் பட்டம் சூட்டப்பெற்றவனை கமராக் குழுவினர்களில் அனேகமானோர் அவ் வாறான கருத்து முன்வைத்தவனைப் பைத்தியக்காரனாகவே பார்த்தார்கள். மேலும் இவர்களால்தான் இந்தச் சீரழிவுகள் மேலும் வளர்கின்றன. என்றதான பார்வை அவனை நோக்கியிருந்தது. அவன் கண்டும் காணாதவனாக அவர்களை விட்டுப் பிரிந்து சென்றான். தீர்க்கமான ஒரு முடிவோடு அவர்களும் அன்றைய படப்பிடிப்பை இடைநிறுத்திவிட்டு ஓய்ந்து கிடக்கும் வீதிகளால் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். வானம் அமைதியாக இருந்தது.

மொழிபெயர்ப்பாளனை உதவிக்கழைத்துக்கொண்டு, மறுநாட்காலை 'விசரன்' என அவர்களால் பட்டம் சூட்டப் பெற்றவன் நெட்டையானவனும் மொட்டை போட்டுக்கொண்டிருந்தவனுமாய் இருந்த இளைஞனின் இருப்பிடத்தை நோக்கி கமராவோடு சென்றிருந்தான்.

அவனது அறையை அவனது நண்பன் ஒருவனது அறையில் இருந்து நோட்டம் விட்டுக்கொண்டபோது, அவனுக்கு மிகப் பெரியதான அதிசயங்கள் காத்திருந்தன.

அவனுடைய தந்தையார் அவனிடம் கெஞ்சி அழுதகாட்சி தாய் மிகுந்த வேதனைப்பட்டது என அது நீண்டதாக இருந்தது. தந்தையார் அவனிடம் மன்னிப்புக்கோருகிற அளவிற்கு என்ன நடந்து விட்டிருக்கும். தாய் வேதனைப் படுவதற்கான காரணங்கள் என்ன என்னவாயிருக்கும் அவனைப் போட்டுத் துளைத்தன கேள்விகள். மொழி பெயர்ப்பாளனது முகத்தைப் பார்த்தான். அவன் புன்னகையை இழந்திருந்தான்; தலையசைத்தான் அது சடங்குத் தனமாக இருந்தது.

அந்த இளைஞனது அறை பூராகவும் கோடம்பாக்க சினிமாக் கதாநாயகர்களின் படங்கள், அவர்களுடைய திருவுருவப் படங்களுக்கு முன்னால் பெரிய நிலைக் கண்ணாடிகளுக்கு முன்னால் நின்றுகொண்டு நடித்துக்கொண்டிருந்தான். அவர்களின் எடுப்புக்கள் தோற்றங்கள் அவனுக்குள் பெரிய பிரகிருதித் தோரணைகளோடு இறங்கின. அவனுக்கு அவர்களே நிகரற்ற கதா நாயகர்கள்; அவர்களைப்போல வரவேண்டும் என்றும் அவன் வாடகைக்கு வீடியோ சினிமாக் கொப்பி எடுத்துப் பார்த்துக்கொண்டு வந்த காலத்திலையே கற்பனை பண்ணி வந்திருக்கிறான். அது முதலில ஒரு சிறிய விதையாக மனதுள் விழுந்ததாகவும் இப்பொழுது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பார்த்தீர்களானால் அது அவனுக்குள் ஒரு பெரிய விருட்சமாகவே வளர்ந்து நிற்கிறது. அதனால் அவன் மனமகிழ்ச்சியோடுதான் இருக்கிறான்.

இருந்தும் அவன் பற்றிய முழுமையான விபரங்களை அவனால் திரட்ட முடியவில்லை. வெறுமனே 'சண்டியர்கள்' என்றுவிட்டு தன்னால் ஒரு ஆவணப் படத்தை தயாரிக்க முடியாது என்ற கருத்தை அன்று மாலை 'ப' வடிவ மேசையில் கூடியிருந்தபோது மீண்டும் அழுத்தமாகத் தெரிவிக்கின்றான்.

வன்முறைக்கான புற அகக் காரணிகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுக்கொண்டே பணியில் ஈடுபட வேண்டும் என்றும், அத்தகைய இளைஞர்களை மானுடப் பண்பின் உச்சத்தில் நிற்பதாகக் காண்பிக்க முயலும் நீங்கள் முதலில் நேசிக்கக் கற்றுக்கொண்டே கமராவை நகர்த்த வேண்டும். அடக்கப்படுகின்ற அல்லது ஒடுக்கப்படுகின்ற இனங்களில் இருந்து இவ்வாறான சீரழிவுக் குணாம்சங்களோடு கூடிய இளைஞர்கள் தோற்றுவிக்கப்படுகிறார்கள். அதுவும் ஆக்கிரமிப்பாளர்களின் யுத்த தந்திரங்களில் ஒன்று; ஆனால், அவற்றை எதிர்கொண்டு உருவாகிறவர்கள் விடுதலைப்போராளிகளாக உருவாகிறார்கள். அனைத்து விடுதலைக்குமான அகப் பிரக்ஞையோடு அவர்கள் மேலெழும்புகிறார்கள்.

அதை நாம் மறுக்கவில்லை - கமராக் குழுவினர்கள் ஒத்த குரலில் சொல்கிறார்கள்.

அவர்களை இராணுவமும் இனவெறி அரசுமாக ஒடுக்கி, ஏறி, மிதிச்சு, துன்பங்களுக்குள்ளாக்கி யிருக்கிறார்கள்.

அவர்கள் உடல்கள் மீது கடுமையான சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இராணுவமும் அரசும் அவர்கள் மீது அனர்த்தங்களையே விளைத்திருக்கிறது.

அவர்கள் உளவியல் ரீதியாக பலமாகப் பாதிப்புக்குள்ளாக் கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய சமூகங்களுக்குள் ளும் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளும் வேறுபல பிரச்சினைகளும் கூட உப காரணங்களாக இருக்கின்றது.

அவர்களின் வெளித்தோற்றமும், நடையும், உடையும், பாணியும் மற்றவர்களிலிருந்து அந்நியப்படுத்துகிறது என்றும் அவர்களுக்குள் குழந்தையைப் போன்ற அகநிலை இருக்கிறதையும் ஆழமாகப் புரிந்துகொண்டார்கள். இறுதியாக மக்கள் கூட்டத்தினரோடு அந்த இளைஞர்கள் தங்களை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முனைப்பின்றி, யாரையும் கவர்ந்திழுக்கும் நோக்கின்றி, தங்களை எல்லோரும் பார்க்கத் தூண்டும் விதமாக நடக்கவேண்டும் என்ற மிதப்பின்றி பாலத்துக்குமேலே படர்ந்திருக்கின்ற நீல வானத்தின்கீழ், நீண்ட ஒரு அழகிய பாலத்தால் நடந்துகொண்டிருப்பதை கலைநுணுக்கத்தோடு படமாக்கினார்கள்.

அவர்களுடைய நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய உறவுப் பாலங்கள் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது.

ஆக மொத்தத்தில் அவர்களுடைய வாழ்க்கை சிதைக்கப்பட்டு தெருவில் வீசப்பட்டிருக்கிறது.

மொழிபெயர்ப்பாளன் மூலமும் அவனின் தேடலின் மூலமும் அறிந்துகொண்ட தகவல்களில் நம்பகமானவற்றை அவன் ஆணித்தரமாக முன் வைக்கிறான். 'அவர்கள் ஆடுகளாக இருந்தவர்கள்' கமராக் குழுவில் ஒருவன் சொல்கிறான்.

அதனால் என்ன? ஓநாய்களால் இலகுவாக அவர்களை வேட்டையாட முடிந்திருக்கிறது அவ்வளவுதான். என்றான் அவன்மேலும்.

இறுதியில் ஆவணப்படக் குழு அவர்களது விவாதங்களின் சூடான பகுதியையும் படத்தில் இணைப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

பிறிதொருநாள் ஆற்றங்கரையை அண்மித்திருந்த மரநிழல்களின் கீழ் அந்த இளைஞர்குழு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்த காட்சியைப் படமாக்கும் முயற்சியில் இறங்கியிருந்தார்கள். அந்தநாள் அவர்களுக்கு நன்றாகவே அமைந்திருந்தது. அவர்களைச் சந்தித்து கைகுலுக்கிக்கொண்டார்கள். பின்னர் அவர்களோடு நட்பாக உரையாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் புதையல்கள் பலவற்றைக் கண்டுகொண்டார்கள்.

அவர்களின் வெளித்தோற்றமும், நடையும், உடையும், பாணியும் மற்றவர்களிலிருந்து அந்நியப்படுத்துகிறது என்றும் அவர்களுக்குள் குழந்தையைப் போன்ற அகநிலை இருக்கிறதையும் ஆழமாகப் புரிந்துகொண்டார்கள். இறுதியாக மக்கள் கூட்டத்தினரோடு அந்த இளைஞர்கள் தங்களை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முனைப்பின்றி, யாரையும் கவர்ந்திழுக்கும் நோக்கின்றி, தங்களை எல்லோரும் பார்க்கத் தூண்டும் விதமாக நடக்கவேண்டும் என்ற மிதப்பின்றி பாலத்துக்குமேலே படர்ந்திருக்கின்ற நீல வானத்தின்கீழ், நீண்ட ஒரு அழகிய பாலத்தால் நடந்துகொண்டிருப்பதை கலைநுணுக்கத்தோடு படமாக்கினார்கள்.

காற்று வீசிக்கொண்டிருந்தது. அது எல்லாவற்றிலும் தழுவி எழுப்பும் இசை எங்கும் நிறைந்தது. ..

மொழிபெயர்ப்பாளன் சிந்தனை வயப்பட்டவனாய் அவர்களைவிட்டுத் தொலைவில் இருந்துகொண்டிருந்தான்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தூரக் கடல்தாண்டி...

ஓடத்தில் ஏறிச் செல்வோமே
தொடுவானம் குறியாக
நீல நெடுங் கனவாய் விரிகடலில்
ஓலமிடும் அலைகள் நடுவே.

பிரிந்து செல்லும் துறைமுகத்தில் – துயர்
சொரிந்தெரியும் விளக்குகளில்
எங்கள் நெஞ்சங்கள் ஏங்குவதோ?
எங்குமே துன்பங்கள்தான் சொந்தமோ?

விடிவை நோக்கிய பயணமிது
விடிவதெப்போ? பயணம் முடிவதெப்போ?
ஒளியின் கீற்றுக்கள் வெளிப்படுமோ?
இருளின் பாறைதான் தொடர் இருப்போ?

விடியும் விடியும் என்றெவரோ சொன்னார்
இருளின் பாழில் எழுந்த குரல்களோ?
மயங்கும் மனங்களின் மாயங்கள் தாண்டி
துயிலும் நம்பிக்கைச் சுடர்தூண்டிப் போவோம்.

ஒளியும் இருளும் உலகின் விதி என்ற
இருளின் வலையில் விழுந்து படாமல்
துயிலும் நம்பிக்கைச் சுடர்தூண்டிப் போவோம்
தோணி எடுத்தோம் துடுப்பை வலிப்போம்.

ஒளிக்கும் ஒளியாக உற்ற துயருக்கு விடிவாக
வெளிக்கும் வெளியாக வெளிச்சமே வாழ்வாக
உன்னதம் ஒன்றின் இருப்புளது
துன்பக் கடல் தாண்டிப் போவோமே
துன்பக் கடல் தாண்டிப் போவோமே.

இசைப்பா

சு.வில்வரத்தினம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போரும் வாழ்வும்



மணலாறு விஜயன்

## கோணேஸ்வரர் முற்றத்திலே



உண்மைப்பதிவு 11

இரவு 12.00 மணியைத் தாண்டிவிட்டது. பனங்கூடலுக்குள் மெதுவாகக் கால் வைத்தோம். ஒரு காவோலை சரசரத்தாலும் சிங்களவர்களுக்குத் தெரிந்துவிடும்.

அடர்த்தியான வடலிக்குள் மூடி வைத்திருந்த வெடிமருந்துப் பொதிகளைத் தூக்கினோம். பாரம் அதிகமாக இருந்ததால தூக்கிக்கொண்டு நடப்பது கடினமாகவே இருந்தது. ஆனால், இரகசியமாக அவற்றைக் கொண்டுசெல்ல வேண்டியிருந்ததால் மெதுமெதுவாக நகர்ந்தோம். ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் அடித்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதி துப்பாக்கிகளும் பொலித்தீன் போட்டுக் கடற்தண்ணி படாமல் கட்டப்பட்டிருந்தது. தென் தமிழீழம் நோக்கி நகர்த்தப்படும் முதல் ஆயுதத் தொகுதி எப்படியும் வெற்றிகரமாக அனுப்பி வைத்துவிடவேண்டுமென்ற உணர்வு அவற்றைச் சுமந்து வந்த மக்கள் அனைவரிடமும் இருந்தது.

குளத்து வெட்டையைத் தாண்டினால் கடல். வெற்றிலைக் கேணியிலிருந்து ஒரு மணிக்கு படகு வந்துசேரும் என்பது போராளிகளின் நம்பிக்கை. படகுகரையேறவேண்டிய இடத்தை முற்கூட்டியே படகோட்டிக்குத் தெரிவித்தனர். கடற்கரையில் ஏறக்குறைய இரண்டு மூன்று சிங்கள வாடிகள் நிரைகட்டிக்கிடந்தன.

எங்களுடைய கிராமத்தில் கொச்சத்துக்கல் என்று சொல்வோம். கடலையும் கரையையும் தொட்டு நிற்கும் கடற்பாறையொன்று. அந்தப் பாறையை அண்டிய நூறுமீற்றர் இடைவெளியில் சிங்களவாடிகள் எதுவும் இல்லை. அந்த இடத்தினையே படகு கரையேறுவதற்கு தெரிந்தெடுத்திருந்தோம். குளத்து வெட்டையைத் தாண்டி கடற்கரை மணலில் ஏறினோம். அமைதியாக இருக்கும் கடல் அன்றுமட்டும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வழமைக்கு மாறாக ஓங்கி அடித்துக்கொண்டிருந்தது. படகு வந்தால் எப்படி கரை பிடிப்பது என்ற ஏக்கம் எல்லோர் மனதிலும் குடிகொண்டிருந்தது.

கும்மிருட்டு வெடிமருந்துப் பொதிகளையும், ஆயுதப் பொதிகளையும் மணலில் இறக்கி வைத்தோம். நடு இரவுதாண்டி விட்டதால் சிங்களவாடிகள் அமைதியாகத் தூங்கின. 3 மணிக்கெல்லாம் அவர்கள் எழுந்துவிடுவார்கள். கடலெல்லாம் தொழிலுக்குப் புறப்படும் படகுகளின் இரைச்சலாகவே இருக்கும். அதற்கிடையில் காரியங்களெல்லாம் நிறைவேற்றிவிடவேண்டும்.

கடற்கரையிலிருந்த எல்லோரது கண்களுமே இருளை ஊடறுத்து கடலை நோக்கிக் கொண்டிருந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் படகொண்டு இரைஞ்சி வரும் சத்தம் கேட்டது. எல்லோரும் உசாரடைந்தோம் எங்களோடு நின்ற போராளி ஒருவர் குறியீட்டு வெளிச்சமொன்றினை ஏற்படுத்தினான். அந்த வெளிச்சத்தினை அடையாளங்கண்ட படகு மிகவேகமாக அலைகளைக் கிழித்துக்கொண்டு வந்து கரைமுட்டியது. வேகமாகச் செயற்படத்தொடங்கினோம். வெடிமருந்துப்பொதிகளையும் செல்வதற்கு வந்த போராளிகளையும் ஏற்றிவிட்டு படகினை மீண்டும் கடலினுள் தள்ளினோம். ஓங்கி எழுந்துவந்த பெரும் அலையொன்று படகினைத் தூக்கிக் கரையோடு ஒத்தியது. பல பொதிகள் கடலுக்குள் வீழ்ந்து விட்டன. நாமெல்லோரும் பதட்டமின்றி வேகமாகச் செயற்பட்டதால் அவற்றை மீண்டும் மீட்டு படகில் ஏற்றினோம். போராளிகளை கடலில் இறக்கிவிட்டு முதலில் படகைமாத்திரம் கடலில் தள்ளிவிட்டு பின்னர் ஒவ்வொருவராக நீந்திச் சென்று படகில் ஏறலாமென முடிவெடுத்தோம். ஆனால் சில போராளிகளுக்கு நீச்சல் தெரியாது.

விரைவாக, வேகமாக முடிவெடுக்க வேண்டியிருந்தது. எங்களில் ஒருவரைச் சிங்களப் படகொன்றில் நங்கூரக் கயிற்றை அவிழ்த்து வருமாறு அனுப்பினோம். அலைகரை வித்தனோடு பதுங்கிப் பதுங்கிச் சென்று கயிற்றை அவிழ்த்து வந்ததும் அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்கினோம்.

படகில் கயிற்றினைக் கட்டி கடலில் தள்ளிவிட்டோம். படகு அலைகளை ஊடறுத்துக்கொண்டு மேலே சென்றது. கயிற்றில் மறு பகுதியை கரையிலிருந்து பனைவடலியில் இழுத்துக் கட்டினோம். கயிற்றில் பிடித்துப் பிடித்து கடலில் நிக்கும் படகுக்கு போராளிகளை ஒவ்வொருவராக அனுப்பினோம். கடலன்னை எங்களைச் சோதிக்க விரும்பினாள். கயிற்றில் பிடித்துச் சென்ற போராளி ஒருவர் இடையில் கைதவறி கடலினுள் மூழ்கிவிட்டார். கரையில் நின்ற எங்களில் ஐந்து பேர் உடனடியாகக் கடலினுள் நீந்திச்சென்று தாண்ட இடத்தில் சுழியோடினோம்.

எங்களது முயற்சி வெற்றியளித்தது. தாண்டபோராளியை மீட்டுவந்து கடற்கரை மணலில் படுக்கவைத்து முதலுதவி வழங்கினோம். தமிழன்னை அருளில் சில நிமிடங்களில் அறிவு திரும்பியது. முயற்சியைக் கைவிடவில்லை எங்களில் ஒருவர் நீந்திச் செல்ல அந்தப் போராளியை மீண்டும் கயிற்றின் உதவியுடன் படகேற்றினோம்.

வெற்றிகரமாக முயற்சி நிறைவேறியது. படகு நுரை எழுப்பி ஓடத் தொடங்கியது. இருட்டில் எங்களை அறியாமலே கையசைத்துக்கொண்டு நின்றோம். அன்று நாங்கள் வழியனுப்பிய போராளிகளில் மேஜர். கணேஸ், மேஜர். பரமதேவா, வாமதேவா, ரவி முதலியோர் வீரச்சாவினைத் தழுவிவிட்டார்கள். அவர்களில் உயிருடன் இருக்கும் மூத்தபோராளி ஒருவரைக் கண்டு, ஆரம்பகாலங்களில் திருமலையில் விடுதலைப்போரை வளர்த்தெடுப்பதற்காக பட்ட இன்னல்களைக் கேட்டறிய விரும்பினேன். நீண்டகாலம் கள அனுபவங்களைப் பெற்றிருந்த அந்த மூத்த தளபதியிடம் ஆரம்பகால, இடைக்கால துன்ப துயரங்கள் சிலவற்றை மீட்டுப்பார்க்கத் தொடங்கினேன்.

குளக்கோட்டனெண்ட சோழ மன்னன் கந்தளாய்க் குளத்தை அமைத்தபோது அள்ளிய மண்ணைக் காவிக்கொண்டு வந்து கொட்டிய இடங்கள்தான் தம்பலகாமத்தில் கள்ளிமேடு, நாயன்மார்திடல், நடுப்பிரபந்திக் கடல் என்று பெயர்கொண்ட சிறிய கிராமங்களாய் மாறினதெண்டு எங்கட பழைய சனங்கள் கதைக்குங்கள்.

இந்தக் கிராமங்களில் கள்ளிமேட்டுக்கிராமத்தை மறக்கமுடியாது. காட்டிலிருந்து வெளியேறி ஆற்றுவெட்டையில் ஓரமாக சிலமைல்தூரம் கடந்து ஆற்றினைக் கடந்தால் பொற்கோயில் தெரியும். கள்ளிமேட்டுக் கிராமத்தில் ஆற்றங்கரையோரமாக அமைந்திருக்கும் அம்மன்கோயிலை பொற்கோயில் என்று அந்தக் கிராமத்து மக்கள் அழைப்பது வழமை. ஆற்றைக் கடக்கும்போதும் கள்ளிமேட்டுக் கிராமத்துக்குள் நுழையும்போது இருக்கின்ற கண்ணாக்காடும், சாப்பைப் புல்வெளிகளுமே எமது பாதுகாப்புக்கான இரும்புக் கவசங்களாயிருந்தன. ஆற்றைக் கடந்ததும் பொற்கோயில் எம்மை வரவேற்கும். நடந்த களைப்புத்தீர பொற்கோயில் முத்தத்தில் அமர்ந்திருப்போம். பசிதீர்க்க அங்கே சாப்பாடுவரும் இல்லையென்றால் இந்தக் கிராமத்தில் நவரெட்ணமண்ணனின் வீடு எங்களுக்காகக் காத்திருக்கும். 1984ம் ஆண்டு தம்பலகாமத்துக்குள் நாங்கள் அடியெடுத்து வைத்தபோது அடைக்கலம் தந்து காத்து வளர்த்த வீடு இந்த வீடுதான்.

இரகசியமான நகர்வும், இரகசியமான தங்கிடமும், இரகசியமான செயற்பாடுகளுமென நாங்கள் வாழ்ந்த காலம் அது. ஒரு சிறிய இரகசியக்கசிவு ஏற்பட்டாலும் இராணுவத்தினர் சுற்றி வளைத்து விடுவார்கள். ஒரு சிறிய தடயங்கூட பெரும் பாதிப்பைக் கொடுத்துவிடும். இந்த நெருக்கடிக்குள் எங்களை காத்து வளர்த்த வீடுகளால்தான் எமது தலைவனின் வழிகாட்டலில் விடுதலைப்போரை இன்று வெற்றிப்பாதையில் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையை எமக்குத் தந்தது கள்ளிமேட்டுக் கிராமந்தான். இந்தக் கிராமத்து மக்களின் ஆதரவும், பாதுகாப்பும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.

திருமலையில் முதல் கண்ணிவெடித் தாக்குதலுக்குத் தயாரானோம். பாலம்போட்டாற்றில் தாக்குதலுக்கான இடத்தைத் தெரிவு செய்தோம். திட்டங்கள் நடரெட்ணமண்ணன் வீட்டில் போடப்பட்டது. தாக்குதல் திட்டத்தின்படி வெற்றிகரமாக நடந்துமுடிந்தது. தாக்குதல் நடைபெற்ற சிலநிமிடங்களில் கள்ளிமேட்டுக் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. பலர் கைதியாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். ஆனால் எவரிடம் இருந்தும் ஒரு உண்மையையும் இராணுவத்தினரால் பெறமுடியவில்லை. சிங்களப் படைகள் ஏமாற்றத்துடன் திரும்பினர். ஏமாற்றத்தின் விளைவாக இந்தக் கிராம மக்கள் மீது அளவற்ற கோபம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

1986ம் ஆண்டு மீண்டும் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. எங்களைக் காட்டிக்கொடுக்க எந்தமக்களும் தயாராகவில்லை. இதனால் நவரெட்ணமண்ணனும் தப்பிக்கொண்டார். ஆத்திரம் கொண்ட சிங்களப்படை கிராமத்தை விட்டு அனைத்து மக்களையும் வெளியேறும்படி உத்தரவு பிறப்பித்தது.

நவரெட்ணமண்ணன் குடும்பத்துடன் கிண்ணியாவுக்கு இடம் பெயர்ந்தார். கிண்ணியாவிலும் அவர் இருந்த வீடு எங்கள் மறைவிடமாகவே இருந்தது. எங்களுக்காக அவர் செய்துகொண்டு இருந்த பணிகளிலும் மாற்றம் ஏற்படவில்லை.

1987ம் ஆண்டு மீண்டும் தம்பலகாமத்து மக்கள் தமது கிராமங்களுக்குத் திரும்பினர். இந்த ஆண்டுதான் இந்தியப்படைகள் எமது மண்மீது அடி எடுத்துவைத்து. சிங்களச் சிப்பாய்களின் கெடுபிடிகளிலிருந்து இனிமேல் விடுபடலாமென மக்கள் நம்பினார்கள். தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தினருகே பெரும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படைமுகாமொன்றை இந்தியப்படைகள் அமைத்தனர். அதனைச்சூழ எமது இனத்தின் தேச விரோதக் கும்பல்களின் படைமுகாங்களும் அமைக்கப்பட்டது. அமைதியை எதிர்பார்த்த மக்கள் வாழ்வில் புயல்வீசத் தொடங்கியது. தமிழ்மக்கள் அனைவருமே புலிகள் எனக்கூறி இந்தியப்படைகள் அட்டூழியங்களை கட்டவிழ்த்துவிட்டன. கள்ளிமேட்டுக் கிராமத்தில் கெடுபிடிகள் அதிகரித்தன. இதனால் பகலில் இக்கிராமத்துக்குள் சென்று வருவதை தவிர்த்துக் கொண்டோம். சென்றாலும் பொற்கோயிலில் தங்கிவிடுவோம். நவரெட்ணம் அண்ணன் சாப்பாட்டுடன் அங்கே வருவார். தேவையான தகவல்களையும் கொண்டு வருவார்.

கள்ளிமேட்டில் இரவில் நாம் நடமாடுவது இந்தியப்படைகளுக்குத் தெரிந்துவிட்டது. நவரெட்ணமண்ணனூடாகவே இத்தகவலையும் அறிந்துகொண்டோம். இதனால் கண்ணாக்காட்டினையே எமது மறைவிடமாக்கிக் கொண்டோம். சேறுதாண்டி, தண்ணிதாண்டி யாரும் கண்ணாக்காட்டுக்குள் வருவதில்லை. எங்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் நவரெட்ணமண்ணனே கொண்டு வருவார். நெருக்கடியான இந்தக் காலந்தான் இவருடைய பணியின் பெறுமதியைப் புரிந்துகொண்டோம்.

1988ம் ஆண்டு உலகத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது. வாக்களிப்பதற்காகவே மக்கள் கைது செய்யப்பட்டார்கள். இத்தேர்தல்தான் தம்பலகாமம் பிரதேசத்துக்கே சாபக் கேடாக மாறியது. இந்தியப் படை முகாம்களுடன் முளைத்த தேசவிரோத கும்பல்களின் முகாம்கள் எமது மக்களின் சித்திரவதைக் கூடங்களாக மாறின. மாகாணசபைத் தேர்தலில் எம் மக்களுக்குக் கிடைத்த இலாபம் இதுதான்.

தேசவிரோதிகளின் கொடுமைகளை எதிர்த்து தம்பலகாமம் பிரதேச மக்கள் போராட்டம் நடத்தினார்கள். மக்களை அணிதிரட்டி வழிநடத்துவதில் நவரெட்ணமண்ணன் முழுமையாக ஈடுபட்டார். 'விடுதலைப் புலிகளைத் தடைசெய்யாதே, மக்களைக் கைதுசெய்யாதே' என்ற சுலோக அட்டைகளை அணிவகுத்துச் சென்ற மக்கள் கூட்டம் இந்தியப் படை முகாம்முன் மறியல்ப் போராட்டத்தில் இறங்கியது. நவரெட்ணமண்ணன் இதற்கு தலைமைதாங்கி நடத்துவதை இந்தியப்படைகளும் தேசவிரோதிகளும் குரோதங்கள் கொண்டு நோக்கின.

இந்தியப்படைகளுக்கு இப்போராட்டமெல்லாம் ஒரு தூசாகவே தெரிந்தது. இந்த மறியல் போராட்டத்தின் பின்னர் கள்ளிமேட்டுக் கிராமமும் பொற்கோயிலும் அடிக்கடி சுற்றி வளைப்புக்குள்ளாயின. ஆனால் எவரையும் கைது செய்ய முடியாது போய்விட்டது தேசவிரோதிகளின் பார்வை நவரெட்ணமண்ணனில் திரும்பியது. மேஜர் கணேஸ், மேஜர் சுரேந்திரன், மேஜர் கஜேந்திரன், லெப்.கேணல் புலேந்திரன், லெப்கேணல் சந்தோசம் மாஸ்ரர் அனைவருமே வந்து தங்கிச் செல்லும் நம்பிக்கை மிக்க பாதுகாப்பிடமாக விளங்கியது இவரது வீடு. இது துரோகிகளின் செவிக்கு எட்டியது. பலமுறை முயன்றும் எங்களை அவர்களால் அங்கேவைத்துப் பிடிக்க முடியாமல் போகவே நவரெட்ணமண்ணனின் மீது கோபம் திரும்பியது.

1988ம் ஆண்டின் இறுதிப் பகுதி, கள்ளிமேட்டுக் கிராமத்துக்குள் இருந்த ஈ.என்.டி.எல்.எவ் இன் தேசவிரோதக்கும்பல் நவரெட்ணமண்ணரை கைதுசெய்து சென்றது. கோணேஸ்வரர் கோயில்முன் அமைந்த தமது முகாமில் சித்திரவதைப் படலத்தை ஆரம்பித்தனர். கண்ணுக்குள் தூள்வைத்துக் கட்டினர். தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்தனர். மூக்கினுள் தண்ணீர் ஊற்றினார்கள். ஆனால் அவரிடமிருந்து ஒரு உண்மையைக்கூட அவர்களால் எடுக்கமுடியவில்லை. இறுதியில் தமது வெறித்தனத்தைக் காட்டத்தொடங்கினர்.

தமிழன்னையை கண்கலங்க வைக்கும் அந்தக் கொடுமை கோணேஸ்வரநாதரின் கண்முன்னே நடந்தது. கையையும் காலையும் கட்டிவைத்து இறுதியில் தீ மூட்டினர் துரோகிகள். துடிதுடித்து எரிந்து சுரண்டு வீழ்ந்த அந்தத் தியாகியின், துன்பத்தைக் கண்டு எக்காளமிட்டுச் சிரித்தனர்.

கோணேஸ்வரர் முற்றத்தில் நடந்த இந்தக் கொடுமையினை எப்படி மறக்க முடியும்? ஆலயம் உள்ளவரை, வரலாறுள்ளவரை நவரட்ணமண்ணனின் விடுதலை வாழ்வும் தியாகமும் நிலைத்திருக்கும். ஆலயத்தை வழிபட கைகூப்பும் ஒவ்வொரு மக்கள் முன்னேயும் அவர் உருவந்தான் தெரியும் என்பது உறுதி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மொய்

சந்திரவதனா



சமைச்சுக் கொண்டிருக்கிற நேரமாகப் பார்த்து தொலைபேசி அலறுகிறது.

"இந்தச் சனங்களுக்கு வேறை வேலையில்லை. சமைச்சுக் கொண்டிருக்கிற நேரமாப் பார்த்துத்தான் ரெலிபோன் பண்ணுங்கள். நேற்றும் வெங்காயம் எரிஞ்சு போட்டுது."

புறு புறுத்தபடி சமையலறையிலிருந்து வெளியில் வந்த செண்பகக்காவின் மனசு ஏதும் தொல்லைபேசியாக இருக்குமோ என்று தயக்கம் காட்டினாலும், கால்கள் விரைய கைகள் தொலைபேசியைத் தூக்க...

"வணக்கம் அக்கா. நான் சாந்தன் கதைக்கிறன்"

"எந்தச் சாந்தன்..? கறுத்தச் சாந்தனோ..?"

"இல்லையக்கா"

"அப்ப... எரிமலை சாந்தனோ..?

"இல்லை...யக்கா. நான் அண்டைக்கு.. மைக்டொனால்ட்ஸ் சிறீயின்ரை கலியாணவீட்டிலை உங்களோடை கதைச்சன்.."

"அட நீங்களே..? சொல்லுங்கோ தம்பி என்ன விசயம்..?"

"உங்கடை வீட்டுக்கு எப்பிடியக்கா வாறது? ஒருக்கால் வழியைச் சொல்லுவிங்களோ..?"

இவன் ஏன் இப்ப இங்கை...! சொந்தமும் இல்லை. நட்பும் இல்லை. எப்பவோ ஏதோ ஒரு கலியாண வீட்டிலை சந்திச்சது. அவ்வளவுதான். என்ரை கணவரை முந்தியே இடைக்கிடை றோட்டு வழியே கண்டு கதைச்சிருக்கிறானாம். அண்டைக்கும் கலியாண வீட்டிலை மொய் எழுதிற வரிசையிலை நிண்டு மைக்கை விழுங்கினவன் மாதிரி பெரிய சத்தமாகக் கதைச்சுக் கொண்டு நிண்டவன். எங்கடை இடத்திலையிருந்து 100கி.மீற் தள்ளியிருக்கிறான்.

"தம்பி..! என்ன விசயம்? இவ்வளவு தூரம் எங்களைத் தேடி வர..?"

"அது வந்து... மகள் சாமத்தியப் பட்டிட்டா. வாற சனிக்குத் தண்ணி வார்க்கிறம். அதுதான் கார்ட்டைக் கொண்டு வந்து நேரேயே தந்திட்டுப் போவமெண்டு....."

உந்தக் கார்ட் தாறதுக்கு பெற்றோல் செலவழிச்சு 150கி.மீற் கார் ஓடி வரப் போறிங்களே..? ஏன் தம்பி உங்களுக்கு வீண் அலைச்சல்? தபாலிலை அனுப்பி விடுங்கோ.

செண்பகக்கா ஏதோ அவன் அலைஞ்சு கஸ்டப்படுறதைப் பார்க்க தனக்கு விருப்பமில்லை என்பது போலக் கதைத்தாலும், உள்ளுக்குள் 150கி.மீற் தூரத்திலையிருந்து வாறவனைச் சும்மா அனுப்பேலுமே! சமைச்சுமெல்லோ கொடுக்கோணும்.. என்ற பயமும்தான் இருந்தது.

"பிறகு நீங்கள் குறை பிடிக்க மாட்டிங்களே..?"

"இதிலை குறை பிடிக்க என்ன தம்பி இருக்குது? நான் ஒண்டும் குறை நினைக்க மாட்டன். நீங்கள் தபாலிலை அனுப்புங்கோ"

ம்.........

திரும்ப இண்டைக்கும்.. அடுப்பிலை வெங்காயம் எரிஞ்சு போட்டுது. நேற்றும் இந்த மனிசன் முகத்தைக் கோணி வைச்சுக் கொண்டு சாப்பிட்டது.

சனத்துக்கு வேறை வேலையில்லை. மகள் சாமத்தியப் பட்டிட்டுதாம். மகளையே நான் ஒரு நாளும் கண்ணாலை காணேல்லை. இப்ப உதுக்குப் போய் மொய் எழுதோணுமே! சா... யேர்மனியை விட்டிட்டு பேசாமல் நாட்டிலை போய் இருக்கலாம் போலை இருக்கு..



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இது ஒரு சமூக விடுதலை

'பெண் அடக்குமுறை' இது இன்று உலகில் பரவலாகப் பேசப்பட்டுக்கொண்டிருக்கும், ஆனால் தீர்வு காணப்படாத ஒரு பிரச்சினை. இது இப்படியே தீர்வு காணப்பட முடியாத பிரச்சினையாகத் தொடர்வதற்கான காரணங்களாகப் பல கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. எனினும் அவற்றுள் சரியான கருத்து எது என்பது பற்றிய தெளிவின்மை நம் மத்தியில் நிலவவே செய்கின்றது.

பெண் அடக்குமுறை என்பது தனியே பெண்களோடு மட்டும் தொடர்புடைய ஒரு பிரச்சினையல்ல. பரம்பரை அலகுகள் மூலமாக ஒவ்வொரு சந்ததிக்கும் கடத்தப்பட்டு வருகின்ற இப்பிரச்சினையின் தாக்கத்தை மிகச் சுலபமாக வெற்றிகொள்ள முடியும் என்று கூறமுடியாது.

பொதுவாகவே சமுதாயத்தில் சாதாரண விடயங்கள் ஒவ் வொன்றிற்காகவும் பெண்கள் ஆண்களின் உதவியை எதிர்பார்ப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவ்வாறு சாதாரண விடயங்களிற்காகவும் பெண்கள் தங்களில் தங்கியிருக்கும்பொழுது ஆண்கள் தங்களைக் கதாநாயகர்களாக நினைத்துக்கொள்கிறார்கள். தாங்கள் இல்லாவிட்டால் பெண்களால் இயங்கமுடியாது என்ற மனப்பாங்கு சிறுவயது முதலே அவர்களுடன் வளர்கிறது. அத்துடன் ஒவ்வொரு ஆணும் முதன் முதலாய் முகமறிந்து நேசிக்கும் பெண்ணான அவனது தாயும்கூட நீ ஒரு ஆண்பிள்ளை என்பதை அவனுக்கு அடிக்கடி வலியுறுத்துவதால் தனது குடும்பத்துப் பெண்கள் அனைவருக்காகவும் வலிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை அவனுக்கு எழுகின்றது. ஆகவே அவன் பலசாலியாக வளர்கின்றான்.

ஒவ்வொன்றும் அடுத்தவர்களை அல்லது ஆண்களை எதிர்பார்ப்பதால் தாங்கள் தங்களது சுயத்தை இழந்துபோவதை பெண்கள் பெரும்பாலும் உணர்ந்துகொள்வதில்லை. அவ்வாறு உணர்பவர்களை அல்லது தனித்துச் செயற்பட முனைபவர்களை 'நான் இருக்கும் பொழுது நீ ஏன் சிரமப்படவேண்டும்?' என்பது போன்ற பாச அடிப்படையிலான செயற்பாடுகளால் மற்றவர்கள் தடுத்துவிடுவதே வழமை.

இவ்வாறான உறவுகள் அற்ற, தேவைகளால் நிர்ப்பந்திக்கப்படும் பெண்கள் மட்டுமே சமூகத்தை எதிர்த்துப் போராடுபவர்களாகவும், பழமை வாதங்களிற்குள் உடைவுகளை ஏற்படுத்துபவர்களாகவும் மாறுகின்றார்கள்.

பொதுவாகவே பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆணோ, பெண்ணோ யாரும், யாரிலேயும் தங்கியிருக்கலாகாது என்பதை தாங்களே உணர்ந்துகொள்ளவேண்டும்.

சுயமான உழைப்பு என்பது பணத்தினதும், நேரத்தினதும் அருமையைப் புரிந்துகொள்ள உதவும். தனது உழைப்பினால் கிடைக்கும் சாதாரண உணவிலும் சுவை தெரியும். நிம்மதியான தூக்கத்தையும் தரும். ரசனையான தெரிவுகளைச் செய்யவும் சொந்த உழைப்பு இடமளிக்கும்.

பெண்விடுதலை என்பது தனியே பெண்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியே இந்த அடக்குமுறைகளை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உடைத்தெறியப்படுவதில் தான் தங்கியுள்ளது.

சிறந்த குடும்பத் தலைவிகளாக இருந்த, இருக்கின்ற பெண்கள்தான் நாட்டிற்கு நல்லமனிதர்களையும், அறிவாளிகளையும் உருவாக்கிக்கொடுத்திருக்கின்றார்கள். இவ் வாறு நாட்டிற்கும் பயனுள்ளவர்களை உருவாக்குகின்ற சிற்பிகளிடம் இன்னும் கலைவண்ணம் அதிகமாகவே இருக்கும். ஆனால் அது பயன்படுத்தப்படுவதில்லை.

மூன்றுவேளை உணவுத்தயாரிப்பு, வீட்டுப்பராமரிப்பு தவிர பெரும்பாலான குடும்பத்தலைவிகளின் ஏனைய பெறுமதியான நேரங்கள் வீணாகவே கழிகின்றன. அந்தநேரங்கள் அவர்கள் தேவையில்லாத ஊர்ப்பிரச்சினைகளை அலசி வீண்வம்புகளையும் மற்றவர்களின் மனவேதனைகளையும் சம்பாதித்துக்கொள்ள நேரிடுகிறது.

இந்த நிலை மாறவேண்டுமானால் குடும்பத்தலைவிகளை சம்பளமற்ற வேலையாட்களாக நினைத்தும், நடத்தியும் கொண்டிருக்கும் எமது வாழ்க்கை முறைமாற வேண்டும். அம்மாவும் ஒரு மனித உயிர், அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை மறந்து ஓய்வும், தூக்கமும் இன்றி வேலைகளோடும், நோயுற்றவர்களோடும் அவர் எப்பொழுதும் செயற்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவள் ஒரு நல்ல தாய், இல்லையென்றால் அவள் பெண்ணே இல்லை என்று நினைக்கின்ற, பேசுகின்ற வழமைகள் சமூகத்திலிருந்து களையப்படவேண்டும்.

தியாகம் என்பது சுயமாகச் செய்யப்படவேண்டுமே தவிர அதனை வலிந்து பெற்றுக்கொள்ள முனையக்கூடாது. ஆனால் எமது சமூகம் காலம் காலமாக அன்னியர்களிடமிருந்து வலிந்து தியாகத்தைத்தான் பெற்று வந்திருக்கின்றது. அவர்களும் அப்படியே உணர்வுகள் மரத்து வாழப்பழகிவிட்டதால் பலருக்கு வலிப்பதேயில்லை.

ஒவ்வொருவரும் தத்தமது பராமரிப்பு வேலைகளையும் செய்துகொண்டு வீட்டு வேலைகளையும் பகிர்ந்து கொண்டால் குடும்பத் தலைவிகளினது சுமை குறையும். அதன் மூலம் மிச்சப்படும் நேரத்தில் அவர்கள் தங்களது பெறுமதியான உழைப்பை சமூக அபிவிருத்திக்கு வழங்கலாம். இதனால் அவர்களுக்கும் ஆளுமை வளர்ச்சியும், மனத் திருப்தியும் கிடைக்கும். அவர்களது உண்மையான மனச்சந்தோஷம் குடும்பத்தையும், சமூகத்தையும் மகிழ்ச்சிப்படுத்தும்.

பெண்கள் மென்மையானவர்கள் என்பதற்காக அவர்களுக்குப் பல சலுகைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதே நேரம் விரும்பியும், விரும்பாமலும் பல கடினமான வேலைகளைச் செய்யும்படி ஆண்களால் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்களுக்குள் உருவாகி, உருக்காகும் மன உளைச்சலின் வெளிப்பாடுதான் கோபமும் ஆதிக்க மனப்பான்மையும்.

தன்னை மட்டுமே நம்பியிருக்கும் மற்றவர்களின் மீது இயல்பாகவே ஒருவருக்கு ஆதிக்க உணர்வு தலைதூக்கவே செய்யும். ஏனெனில் தத்தமது பலத்தையும் பொருளாதார வலுவையும் ஒவ்வொருவரும் அறிந்தே வைத்திருக்கின்றார்கள். அந்த மட்டுப்படுத்தப்பட்ட வளத்திற்கேற்பதான் குடும்பச் சக்கரத்தை நகர்த்த வேண்டும் என்ற தவிர்க்க முடியாத தேவை எழுகின்றபோது சில, பல கட்டுப்பாடுகளை அவர்கள் விதிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் மனிதனுடைய தேவைகள் அளவிட முடியாதவை. குடும்பத்தினர் ஒவ் வொருவரினதும் இயல்புக்கும் கற்பனைக்கும் ஏற்றவகையில் எழுகின்ற ஆசைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய முடியாத ஒருவர் ஆதிக்கம் மூலமே சிலவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிடுவது போன்ற ஆண்-பெண் இருவரினதும் புரிந்துணர்வின் பாற்பட்ட அன்பினாலேயே பெண் விடுதலை சாத்தியப்படும்.

இவ்வாறு பார்க்கும் பொழுது பெண் விடுதலை என்பது ஒவ்வொரு பெண்ணும் தனது பொருளாதாரத்தை தாமே பேணிக்கொண்டு தனித்தனித் தீவுகளாய்ப் போவது என்று அர்த்தப்பட்டுவிடக்கூடாது.

இன்றைய காலத்து இளைஞர்களிடம் நட்பு மிகுந்த நேசம் காணப்பட்டாலும் சினிமா எனப்படுகின்ற ஊடகம் அவர்களைத் திசை திருப்பி விடுகின்றது. நல்லதொரு ஊடகத்தை வெறும் பொருளாதாரத்திற்காக கையாளும் யாரோ ஒரு இயக்குநரின் அல்லது ஒரு சிறிய இயக்குநர் குழுவின் சொந்தக் கருத்துக்கள் இசை, நடிப்புத்திறன், ஒளிப்பதிவு போன்ற தொழில் நுட்பங்களால் மெருகு பெற்றுப் பிரபலமடையும் பொழுது அந்தக் கருத்துக்கள் சரியானவை என்னும் உணர்வு நம்மையறியாமலே பதிந்துவிடுகின்றது. இசைமெருகேற்றிய கவிதைகள் காதோடு இனிமையாய் அதிர்ந்து சொல்லுகின்ற கருத்துக்கள் ஆழமாக உள்வாங்கப்படுகின்றன.

பெண்களை விட உடற்கூற்றியல் ரீதியாக ஆண்கள் பலமானவர்கள்தான். எனினும் வேலைகளை இலகுவாக்கும் பல கண்டுபிடிப்புக்களை அவர்களே செய்கின்றார்கள். தங்களது பணிகளை விரைவாகச் செய்து முடித்துவிட்டு மிகுதி நேரங்களை உல்லாசமாகச் செலவிடவே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் பெண்கள் அப்படியல்ல. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அவர்களது பொறுமை காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

தேவை என்றுவரும்பொழுது ஆண்களால் மட்டுமே செய்யக்கூடியவை என்று கருதப்படும் வேலைகளைக் கூடப்பெண்கள் இலகுவாகவும் ரசனையுடனும் செய்யக் கற்றுக்கொள்வார்கள். ஏனெனில் அப்பொழுது சுமைகளும் வலிகளும் ஒரு பொருட்டாகக் கருதப்படுவது கிடையாது. அத்துடன், ஒற்றுமை, ஒத்துழைப்பு இவையிரண்டுடனும் கூடிய நல்ல நட்பு இருந்தால் யாரும் எதுவும் செய்துவிட முடியாத சக்தியாக பெண்கள் வளர்வதைத் தடுக்க முடியாது.

சுயநலத்துடன் எனது வேலை, எனது நேரம் என்று இயங்கிக்கொண்டிருக்காமல் எல்லோரையுமே மனிதாபிமானத்துடன் பார்க்கவும், அணுகவும் பழகிக்கொள்ளவேண்டும். சமூக ஒற்றுமைக்கு இந்த இயல்புதான் அடிப்படையானது. எம்மைச் சுற்றியுள்ள சமூகமும் நாடும் மொத்தத்தில் முழு உலகமும் அமைதியுடனும், மகிழ்வுடனும் இருந்தால்தான் அதிலே நாங்களும் நிம்மதியாக வாழலாம்.

தாய்மையும், பொறுமையும் நிறைந்த ஆண்களும், வீரமும், வலிமையும் நிறைந்த பெண்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். ஒவ் வொரு விடயத்திற்குமே விதிவிலக்கும் இருக்கும் ஆனால் அவற்றுக்கான பெரும்பான்மையாக இருக்கும் விதிகளைப் பற்றிப் பேசாமலிருக்க முடியாது. இந்த விலக்குகள் தான் நாளைய விதிகளாக மாறும். அது தவிர்க்க முடியாத நியதி. ஆனால் அந்த 'நாளை' என்பதை விரைவுபடுத்தினால்தான் இன்றைய சந்ததி அழிவதைத் தடுக்க முடியும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி. அவன் சேர்ந்தே வாழவேண்டியவன். ஆனால் இந்த ஒரு காரணத்திற்காக யாரும் யாருக்கும் சுமையாக இருப்பது என்பது இன்றைய உலகில் அழகானதாயிருக்காது. தத்தமது சுயநலமே ஒவ்வொருவருக்கும் நிமிர்வைத்தரும். இயற்கையும், செயற்கையும் உடலுக்கு ஊறு விளைவித்த பின்னரும் உற்சாகம் குறையாமல் உயரங்களைத் தொடுகின்ற மனிதர்களைப் பார்த்தும் கேட்டும் அறிகின்ற நாங்கள் வெறுமனே பெண்கள் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் சுமைகளாக இருக்கப்போகிறோமா?

பேச்சைவிடவும் செயலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு சரியான வழிகாட்டலின் கீழ் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வோம். கண்கெட்டபின் சூரியவணக்கம் யாருக்கு?

நன்றி: நிலவு.com மங்கை



www.tamileelamarchive.com

# மாவீரர் நினைவு விளையா

தமிழீழ ஆவணக்காப்பகம்









## பிரான்ஸ்





www.tamileelamarchive.com

# ட்டுப் போட்டிகள் 2004

தமிழீழ ஆவணக் காப்பகம்

















www.tamileelamarchive.com

# மாவீரர் நினைவு விளையா

தமிழீழ ஆவணக்காப்பகம்





சுவிற்சலாந்து








www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## நெதர்லாந்து










www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை 1948.08.20 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சிபீடத்தினால் பறிக்கப்பட்டது.



## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 1987.08.04 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.

"இந்திய—இலங்கை ஒப்பந்தமானது எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது" என்பதை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2,3,4 ஆகிய திகதிகளில் யாழ்.குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, சொத்துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப்பட்டன.

## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 1990.08.10 அன்று கோவில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப்படைத்துறையின் வடபிராந்திய தலைமையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லா தொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித்தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமையையும் பேரதிர்ச்சிக்குள்ளாக் கிய இத்தாக்குதல் 1992.08.08 அன்று நிகழ்த்தப்பட்டது.

## மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச் சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப்பொதுமக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 1992.08.09 ஆம் திகதி நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## சண்டிலிப்பாய் படுகொலை

1995.08.21 அன்று 'ரெகன் பயர்' என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக் கள் கொல்லப்பட்டனர்.

## அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

அம்பாறை மத்திய முகாம் (சென்றல் காம்ப்) பொலிஸ் நிலையம் மீது 2001.08.20 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குத லில் 25 ற்கும் மேற்பட்ட சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களையும், விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### 01.06.2004



31.05.2004 அன்று, மட்டக்களப்பில் படு கொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் ஜி.நடேசன் அவர்களை, விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் என்று அறிவித்து கௌர வித்துள்ளனர். 01.06.2004 அன்று அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பூதவுடல் மீது, புலிக்கொடி போர்த்தப்பட்டு, நாட்டுப்பற்றாளர் என அறி விக்கப்பட்டு கௌரவிக்கப்படார்.

### 04.06.2004



மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களுக்கு, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், 04.06.2004 அன்று, விருது வழங்கிக் கௌரவித்துள்ளார். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகைத் துறையில் அவர் ஆற்றிவரும் தாக்கமான பணியையும், இப்பணியினூடாக தமிழ்த்தேசியத்திற்கும், தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் மகத்தான சேவை யாற்றி வருவதைப் பாராட்டியும், தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட விருதினை வழங்கிக் கௌரவித் துள்ளார்.

### 04.06.2004



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள், அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தின் புதிய கட்டிடத் தொகுதியினை, 04.06.2004 அன்று திறந்துவைத்துள்ளார்.

மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தால் நடத்தப்படும் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் புதிய கட்டிடத்தொகுதியே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால், திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுச் சுடரினை மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து, தேசியத் தலைவர் அவர்களால், மாவீரர்கள் போராளிகளின் பெற்றோர் தங்குவதற்கான கட்டிடத் தொகுதி திறந்துவைக்கப்பட்டது.

### 05.06.2004

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிங்களப் பேரினவாத வன்முறைகளுக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டு உயிர்த்தியாகம் செய்த, தியாகி பொன். சிவகுமாரன் அவர்களின் முப்பதாம் ஆண்டு நினை வுதினம் 05.06.2004 அன்றாகும்.

### 06.06.2004



06.06.2004 அன்று, தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் தாயகம் தழுவிய ரீதியில் மிகச் சிறப்பாகவும் பேரெழுச்சியுடனும் நடைபெற்றுள் ளன. பேரணிகள், பொதுக்கூட் டங்கள், கருத்தரங்குகள், கலை நிகழ்சிகள் என, எழுச்சி நிகழ்வுகள், தமிழீழத்தின் அனைத்துப் பகுதி களிலும் நடைபெற்றன. தமிழ் மாணவர் ஒன்றியம், இவற்றை ஏற் பாடு செய்திருந்தது.

### 09.06.2004

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரும், ஊடக வியலாளருமான ஜி.நடேசன் அவர்களின் படுகொலையைக் கண்டித்து, 09.06.2004 அன்று, கொழும்பில் கண்டன ஆர்ப்பாட்ட நடத்தப்பட்டுள்ளது. சுதந்திர ஊடக இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், ஊடகவியலாளர்கள், அரசியல் வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### 14.06.2004

14.06.2004 அன்று, விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவால் உருவாக் கப்பட்ட 'போரிடும் வல்லமை சேர்ப்போம்' இறுவெட்டு வெளியீட்டு விழாவில், தேசியத் தலைவர் அவர்கள், கலந்து சிறப்பித்ததுடன், இந்த இறுவெட்டை உருவாக்குவதில் பங்கெடுத்த கலைஞர்களை கௌர வித்துமுள்ளார்.

### 18.06.2004

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில், இரண்டு பண்ணைத் தொழி லாளிகள், தேசவிரோதிகளால் கோரமான முறையில் வெட்டிக்கொல்லப் பட்டுள்ளனர். இச்சம்பவம், ஏறாவூர்ப்பற்று நவுண்டனிய மடுப் பகுதியில், 18.06.2004 அன்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

### 18.06.2004

இந்தியாவில் இருந்து, தாயகம் திரும்பிய வேளை, ஈழத்தமிழர்கள் பலர் படகு கடலில் மூழ்கியதால் பரிதாபகரமாக இறந்துள்ளனர். இச்சம்பவம் 18.06.2004 அன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

### 20.06.2004



சர்வதேச அகதிகள் நாளான 20.06.2004 அன்று, கிளிநொச்சியில் ஆர்ப் பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில், அன்றைய ஆர்ப்பாட்டப்பேரணி இடம் பெற்றுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## கருணாவின் முக்கிய சகாக்களும், புலனாய்வு அதிகாரியும் சுட்டுக் கொலை





சிறீலங்கா அரசாங்கத்தின் இரகசிய ஏற்பாட்டில், கொழும்பில் மிக அந்தரங்கமான உச்சகட்டப் பாதுகாப்பு நிறைந்த வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த தமிழினத்துரோகி கருணாவின் ஏழு முக்கிய சகாக்களும், ஒரு புலனாய்வு அதிகாரியும் 25.07.2004 அன்று அதிகாலை சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இத்தாக்குதலில், கருணாவின் மிக நெருங்கிய சகாவும், கருணாவின் துரோகக் கும்பலில் அடுத்தகட்ட நிலையில் உள்ளவர் என்று கருதப்பட்ட வருமான குகநேசன், மற்றும் காஸ்ரோ, கேசவன், றூபன், ஆர்ப்பரன், விக்கி, விமலக்காந்த் ஆகியோரே கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

கொழும்பின் புறநகரான கொட்டாவ என்ற இடத்திலே அன்று நடந்த இந்தச் சம்பவம் சிறீலங்கா அரசையும் படைத்துறை தலைமையையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இந்தத் துரோகக் கும்பல் தங்கியிருந்த இந்த வீடு கொலை நடப்பதற்கு இரண்டு வாரங்களிற்கு முன்னர் சிறீலங்கா புலனாய்வுத்துறையினரால் வாடகைக்கு எடுக்கப்பட்டதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்துள்ளனர்.

கொலையுண்ட தேசத்துரோகிகள் அதிகாலை வேளையில் நித்திரையில் இருந்தபோதே கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும், உள்ளிருந்தவர்களே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க வேண்டும் எனவும், வெளியிலிருந்து வேறு எவரும் வந்ததற்கான தடயங்கள் ஏதும் காணப்படவில்லை என்றும் சிறீலங்கா காவல்துறை அதிகாரி விக்கிரம பெரேரா தெரிவித்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத்தீவையே உறைய வைத்திருக்கும் தமிழினத்துரோகி கருணாவின் கைக்கூலிகள் மற்றும் புலனாய்வுத் துறை அதிகாரி ஆகியோரின் கொலைகளை அவர்களுடன் கூட இருந்தவர்களே செய்துள்ளனர். இந்த எட்டுப் பேரையும் கொலை செய்தவர்கள் கொலைநடந்த அன்றே விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

## புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்



சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த முக்கிய நபரான புளொட் மோகன் 31.07.2004 அன்று நண்பகல் 12 மணியளவில் கொழும்பில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பல அட்டூழியங்களை புரிந்தவரும், இராணுவத் துணைப்படையின் மிக முக்கிய உதவியாளருமான புளட் மோகனின் இயற்பெயர் கந்தையா யோகராசா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூரம் ஊடுருவித் தாக்கும் சிறீலங்கா இராணுவச் செயலணியின் அச்சாணியாக தொழிற்பட்டவராக கருதப்படும் மோகன் கடந்த 10 வருடங்களாக விடுதலைப்புலிகளின் மிகமுக்கிய உயர் மட்ட தளபதிகள் உட்பட பலர் மீதான தாக்குதல்களுக்கும் 1200 க்கும் அதிகமான பொது மக்களின் கொலைகளுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரதான பங்கினை வகித்தவர். இனத் துரோகி கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட போது அவருடன் இணைந்து மட்டக்களப்பில் ஊடகவியலாளர் நடேசன், பேராசிரியர் தம்பையா விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களான சேனாதி உட்பட பலரின் படுகொலைகளுக்கும் முக்கிய சூத்திரதாரியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. முச்சக்கர வண்டி ஒன்றில் பம்பலப்பிட்டி, டுப்ளிக்கேசன் வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு சென்ற வேளை இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வல்வைப் படுகொலை 15 ஆம் ஆண்டு நினைவு நாள்

1989 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படையினால் வல்வெட்டித்துறையில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் 63 பேரினது 15 ஆம் ஆண்டு நினைவு தினம் 02.08.2004 அன்று நினைவுகூரப்பட்டது.

வியட்நாம் நாட்டில் அமெரிக்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மைலாய் படுகொலைக்கு ஈடாக இலங்கையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட இந்தப் படுகொலை வல்வைப் படுகொலை என அழைக்கப்படுகிறது. இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட தீருவில் பகுதியில் அன்று நினைவு வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்திய அமைதிப்படையினரால் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூபி இந்நிகழ்வில் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இதே இடத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் குமரப்பா, புலேந்திரன், கேணல் கிட்டு, முதலானோரின் நினைவுத் தூபிகளும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணை செலுத்திப் படைப்பிரிவினரின் அணிவகுப்பு















www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்








விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணை செலுத்தும் படைப்பிரிவின் ஒரு தொகுதியினர் 06.08.2004 வெள்ளிக்கிழமை தமது விசேட பயிற்சிகளை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்துள்ளனர். இந்நிறைவு விழா நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

ஆரம்ப நிகழ்வாக பான்ட் வாத்திய அணியினர் இசைக்க விசேட உந்துகணை செலுத்திப் படைப்பிரிவினரின் அணிவகுப்பு நடைபெற்றது. இதனை தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களும் வட போர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்களும், 2ம் லெப்.மாலதி படையணியின் விசேட தளபதி கேணல் விதுசா அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

பயிற்சிகளை நிறைவு செய்த படையணியினருக்கான சான்றிதழ்களையும், சிறப்புப் பரிசில்களையும் தமிழீழத் தேசியத்தலைவர் வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உரையாற்றும் போது, சிறீலங்கா அரச படைகள் கவசப் படையணியை உருவாக்கியிருந்தமையும் அதனை, ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கையின் போது பயன்படுத்த இருந்தமையுமே இவ்வாறான ஒரு படையணியை விசேடமாக உருவாக்க நான் எண்ணினேன் எனக் குறிப்பிட்டார். அது போன்றே இப்படையணி ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது எதிரியின் கவச படையணியின் முன்னேற்ற முயற்சிகள் பலவற்றை முறியடித்து பல வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்தது என்பதனை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பெருமிதத்தோடு நினைவு கூர்ந்ததோடு, அரச படைகளுக்கு இவ் உந்துகணை செலுத்திகளை அறிமுகப் படுத்தியவர்கள் விடுதலைப் புலிகளே என்பதையும் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் உந்துகணை செலுத்திகளை பயன்படுத்துவதை அறிந்த பின்னரே சிறீலங்கா அரச படைகள் தமது படையணிகளில் இவற்றினை இணைத்துக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தாய்மொழிப்பற்றை உருவாக்கியமைக்காகவும் கௌரவிப்பு



ஜேர்மன் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் மத்தியில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தாய்மொழிப்பற்றை உருவாக்கியமைக்காகவும் திரு. இரா.நாகலிங்கம் அவர்களை 07.08.2004 அன்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்க விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

## வன்னி தொழில்நுட்ப நிறுவனம் தனது முதலாவது தொகுதி மாணவர்களை வெளியேற்றியது



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையின் பயனாக வன்னியில் உருவாகிய வன்னி தொழில்நுட்ப நிறுவனம் 08.08.2004 அன்று தனது முதலாவது தொகுதி மாணவர்களை வெளியேற்றுவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்களின் பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அவர், போராட்ட சூழலில் முழுமையாக மூழ்கியிருந்த நாம் உலகில் மாறிவருகின்ற தொழில் நுட்பத்துடன் ஈடுகொடுக்க முடியாது இருந்தபோது, அமெரிக்கா வாழ் புலம்பெயர்ந்த மக்களின் உதவியினால் வன்னியில் இந்த தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

நாம் எமது தேசத்தை மீட்கப் போராடிக் கொண்டிருந்தபோது எதிரியானவன் எமது மாணவர்களின் கல்வியை நசுக்குவதிலேயே தீவிரமாக ஈடுபட்டான் என்றும் இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் எமது மண்ணிலும் உலகத் தொழில் நுட்பங்களோடு போட்டி போடும் அளவிற்கு வன்னித் தொழில்நுட்ப நிறுவனம் தனது சேவையை வழங்கி வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்றும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை




ERIMALAI,
C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020
Paris, FRANCE.

Tel: 01 - 43 58 11 42
Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@erimalai.com

www.tamileelamarchive.com



தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com